631

சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடு - 1

# நெடுநல்வாடை

## (திறன் ஆய்ந்து தெளிதல்)



திருவாளர்

மணிவிழா அணிகலன்

O-,13941
N46
163934

ஆக்கியோர் :

K. கோதண்டபாணி பிள்ளை

# நெடுநல்வாடை

## (திறன் ஆய்ந்து தெளிதல்)

ஆசிரியர் :

இராவ்சாகேப் கே. கோதண்டபாணி பிள்ளை, B. A.,

டெபுடி கலெக்டர்

இரண்டாம் பதிப்பு

சென்னைத் தமிழ்ச் சங்கம்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

1946

உரிமை ஆசிரியர்க்கே] [விலை ரூ. 1—4—0

163934

Printed at the Sadhu Press, Royapettah, Madras.
(P. I. C. No. M. S. 115)
for The Chennai Tamil Sangam Ltd., Chintadripet,
Madras, P. I. C. No. M. S. 82—C. 1000—30-10-46

# பொருளடக்கம்

பக்கம்

**Introduction**

S. Somasundara Bharati, M.A., B.L. v—x

***அணிந்துரை :***

வித்துவான் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்,
M. A., B. L., M. O. L. ... xi—xiv

***வெளியீட்டு விளக்கம்*** ... xv—xvi

***திறன் ஆய்தல் :***

1. பொதுச் சிறப்பு ... *1—8*
2. மக்கள் தொகுதி - ஆடவர் ... *9—56*
3. மக்கள் தொகுதி - மகளிர் ... *57—96*
4. ஏனைய உயிர்த் தொகுதி ... *97—114*
5. தொகுத்து முடித்தல் ... *115—123*

***நச்சினார்க்கினியம்*** ... *127—162*

# INTRODUCTION

I have had the privilege of reading in proof the latest critical appreciation of 'Nedunalvadai' (the long bracing North wind) of Poet Nakirar by Mr. K. Kodandapani Pillai, Deputy Collector of the Madras Provincial Civil Service. Unlike the superficial and supercilious Amateur Dilettanti whose purblind eyes and bankrupt minds are beauty and poetry-proofs, Mr. Pillai is a widely read scholar with real catholic culture, cosmopolitan sympathies and refined tastes.

His present approach to the famous Ode of Nakirar is as profound as it is novel at least in Tamil literary criticism. His critique is not of the common brand of jejune generalities and unmeaning superficialities; but is a daringly original dissertation, provoking and challenging thought. It refreshingly reveals his wide scholarship, deep thinkingand discerning critical acumen on the one side and his varied and versatile talents and masterly grasp of human psychology on the other. He readily enters into the moods of the master-poet and luminously expounds with consummate skill his terse and delicate touches and superbly elusive suggestions. He educes, enunciates and

elaborates every emotion and ruling passion of the different characters in the poem.

After clearing the ground with a few preliminary and necessary observations and suggestions, he goes directly to deal with the dominant theme and the intricate and intriguing situations depicted by the marvellous genius of Nakirar with his serene naivete and superb economy of words. He first remarks and invites attention to the opening scenes and surroundings the poet creates for the drama and *denouement* staged in his masterpiece. Their apt and appropriate harmony with the attitudes and outlook of the hero and heroine of this exquisite poem is felicitously and briefly explained. Then, the curtain is raised on the scene in the winter-camp of the Hero-warrior—the great Pandian Nedunchelian—on a wet and windy, dark and drizzling night. The king is seen on the stage, not mooning or moaning in bed for his lack-luxury camp life, nor brooding over deferred victory or suffered reverses ; but active on his legs, visiting and consoling his wounded soldiers in their straw sick-beds escorted by a single torch-bearer, the Chief Commander and accompanied by the adjutant colonels and captains as lovingly as by the devoted fighting mammoth elephants and other beasts. He was profoundly unperturbed

by the beating rain, slushy mire or chill north wind and pitch dark night, thoroughly unconscious of his kingly state and discomforts. He was alert and alive only to the sufferings of his faithful followers, regardless of their ranks, who were mauled and mutilated in battling for his sake and fighting under his flag. The critic compares this portrait of Nakirar's Hero with those of other great warrior-kings in similar situations sketched by other poets like Nappu-thanar of yore and later Kamban of epic fame. Those pictures featured equally illustrious warrior-kings—but one depressed by defeat and designing for victory and the other sullenly gnashing his teeth in mortification for his humbled pride and eating his very heart out for smarting shame. Their love was self-centred and so with wounded *amour propre* they brooded over reverses and bewailed their ill-luck which they could not stand, Nakirar's Hero is serene in dauntless majesty and his royal heart thrilled in unison with and in universal sympathy for the sorrows and sufferings not of himself or his loving kinsfolk, not even of his loyal dependents alone, but of the entire sentient world. In his love-lorn lonely camp life, even when he was merely vegetating under the winter weather which entailed a truce of his battling ardour, he did not turn his heart with

any single thought to his most-loved queen who was pining for him in the distant capital, feeling forlorn in the midst of a multitude of loving maids and coaxing mothers and of royal pomp and unparalleled luxury of the peerless palace of the far-famed Pandians. Such was the standard of devotion to public duty that is eschewed and tabooed all distractions of every kind which might lead to any dereliction; that was the ideal of the Tamil savant in times of yore. Never once is any hero to be found in literature as inclining to, and much less indulging in love musings in camp, not at least till the campaign ends and the men are free to revert to their personal loves. The critic essays to show that Nakirar so idealizes his Hero as to sort him out to be of a distinct category of selfless supermen in sharp contrast with the plebeian proletariate typified in the poem by the timid helpless shivering shepherds on the one hand and with the self-seeking brawny knights and pleasure-hunting Bacchanalian warriors on the other.

Our critic then beckons us to the royal palace where the chaste Pandian Penelope was pining for her absent lord. Here again he shows that Nakirar compares and contrasts three types of women: one class represents the ordinary pious simple Hindu wives commonly

contented, yet susceptible of joy and sorrow in life; a second set comprises the gay self-adoring belles who love to be admired and languish when neglected. To the third uncommon order of pure-hearted lofty-souled matrons who loss themselves in their love for their husbands and live for them alone, belongs the paragon Queen of the Hero-King. Her lofty love for the lord of her heart makes her pensive and pining and fills her with anxious grief for his absence in the battlefield. Yet on a sudden flash caused by a casual look on a painting of the lascivious moon-god and his favourite voluptuous wife and with sound reflection she suddenly recognizes the ignoble element of her selfish love that longs for her lover for her own sake, and the lofty nobility of his devotion for his public and kingly duty which keeps him away fighting the enemies of his people's peace. And from that very instant, she sings her selfish grief and serenely rises to live up to his devoted ideal of universal unselfish love and of service to all, as such a Hero's consort should be.

He concludes his monograph with a fine and eloquent emphasis with which he endeavours to show that Nakirar's exquisite poem enshrines a magnificent philosophy of self-sacrificing universal love as the basic and governing principle of peace and of the happy

kingdom of God on earth. He elaborates this thesis, namely, all love which starts from self glows into divine grandeur only when it outgrows its limitations and blossoms into selfless universality. He clinches his view by deducing or trying to deduce from the poem that Nakirar purposely makes animals, birds and even plants in the background to incline to transcend their natural mating and propagating instincts and tendencies. This is a very original, if bold, thesis and our critic endeavours not merely to indicate but also to develop and demonstrate by apt quotations from the poem and by lavishly laying almost all classics, ancient and modern, under contribution in support of his view.

It may be possible to differ from some of his interpretations; but it is difficult to withhold admiration for the scientific analysis of his data and the consummate synthesis of deductions which point to the new philosophic moral of this exquisite Ode of Nakirar.

**'Malayaham'**
*Pasumalai*

S. S. BHARATHI

# அணிந்துரை

இந்த நூலின் முன்னுரை திரு. வி. க. வின் திருவுள்ளத்தே இனியதொரு தாமரையாய் முகிழ்த்துள்ளது. செந்தேன் நிறைந்த வெண்டாமரையாக ஒரு நாள் அது மலரும். இன்றே, இந்தக் கொட்டியே மலர்கிறது. இயற்கையின் பெருவளத்திடையே கிடைக்கின்ற வாய்ப்பு இது. எதிர்பாராத எனக்கும் இந்த அணிந்துரை எழுதும் பேறு வாய்க்கின்றது.

திரு. வி. க. வின் மணி விழா வெளியீடாக இந்நூல் வெளி வருகிறது. அந்த முன்னுரையை இழந்ததே எனினும் இந்த வகையால் உயர்ந்ததே எனலாம். துன்பத்திலே துளிர்ப்பதன்றே இன்ப அன்பாவது? இந்நூலுக்கும் திரு. வி. க.வுக்கும் இயைந்து வரு பொருத்தம் இனியதொரு பொருத்தமே ஆகும். ஒரு பெருஞ்சொற்றொடரே ஒரு நூலாய் நீண்டமைந்த காலமும் தமிழில் உண்டு. அது பழங்காலமும் அன்று. இக்காலத்தோ, சிறு சொற்றொடர்கள் பேராக்கம் பெற்றுத் தமிழுலகில் துள்ளி விளையாடுகின்றன. சிறு சொற்றொடர்களின் திட்ப நுட்பத்தைத் தமிழில் அறிந்து நடையாட விட்டவர் திரு. வி. க.வே ஆவர். இப்போது, மலை என ஓங்கி உயர்ந்துள்ள அந்த நடையின் கொடுமுடியிலே இந்நூலின் நடை விளங்குகிறது. ஆங்கிலத்திலே திட்ப நுட்பஞ் செறிந்த சிறு சொற்றொடரை Epigram என்று அறிஞர் பாராட்டுவர். அத்தகைய சூத்திர நடையின் செவ்விய திறமெல்லாம் இங்குத் திகழக் காணலாம். ஆத்தி சூடி நடையும் கொன்றைவேய்ந்தான் நடையும் தமிழ்க் குழந்தையும்

அறிந்தவை. ஆனல், அந்த நடையிலேயே ஒரு பொருட் டொடர் நிலைச் செய்யுளாம் குழந்தை, இதோ, இந்த நூல் வடிவமாக எதிரே நடையாடி வருகின்றது! இந்த நூலாசிரியர் தமிழ் வெறி பிடித்தவர், தமிழ் வெறியே கடவுள் நெறியாம். அதுவும் பழந்தமிழ் வெறி; புதுத் தமிழன் வாழப்பிடித்த திருவெறி. அந்த வெறியாட்டத்தை இவர் நடையாட்டத்தில் காண லாம். இவ்வேலனெடுத்த இவ்வெறியயர் களனைப் பாடக் காமக் கண்ணியார் இல்லாமையே குறை. கட வுட் காட்சி வேண்டுவார் இதனைக் கண்டு களித்துத் தெளியலாம்.

இந்த நூலோ, இவ்வாற்ருல் மிகமிகப் புதியது. நூலின் பொருளோ, எவ்வாற்ருலும் மிகமிகப் பழை யது. பழைமையைப்பற்றிப் புதுமை கூறுவதே புதுமை. அந்தப் புதுமையும் பழைமையாக முடிவதே அதனினும் புதுமை. நெடுநல்வாடைக்கு ஒரு புத்தம் புத்துரை எழுகிறது. அந்த புத்தம் புத்துரையே பண்டைப் பழந்தமிழுள்ளம் என முழங்குகிறது. அம்முழக்கமோ, தமிழ் முழக்கம்; தமிழனது மணி விழா முழக்கம். தமிழ்க் காதுள்ளார் தகுதி பெறக் கேட்க!

'வில்லிற் சேரன்; சொல்லிற் கீரன்' என்பது பழைய பழமொழி. இந்நூலாசிரியர் தம்மையும் அறி யாமல் இந்தக் கீரனைக் கடவுளாக வழிபட்டு வருகி ருர். இவனுக்கு எடுத்த கோயிலே இந்நூல். கீரனை அறியக் கீரனுதல் வேண்டும். என்னைத் தமிழூட்டி வளர்த்த தமிழ் முனிவர் தனியே இருத்தி ஓதிய மறை பொருள் இது. இதன் உண்மையை இந் நூலில் உணர்கின்றேன். அறிவோ, சின்னஞ்சிறு தடைகளைத் தாளுகை எழுப்பித் தட்டித் தவறி விழுந் தழுகிறது. அஃதே அறிவின் சிறுமை. "இன்னே"

"நிறுப்ப" என்பவற்றிற்கு இவர் கூறுவது பொருளாமா? பொருளாகாமற் போனுல் என்னே? சங்கத் தமிழில்அவை வருமிடங்கள்கொண்டு உண்மை காண்டல் கூடும். ஆனுல், இவை எல்லாம் உயிர்நிலை அல்ல; பெரும் பொருள் அல்ல. கோயிலைக் கண்டு களியாது, கோயிலை இடித்து கோயில் மண்ணைத் தெள்ளித் தரும் அழிவிளையாட்டாகும் அது. இந் நூலை முழுப் பொருளாகக் கொண்டு ஆசிரியர் காணும் நெடுநல்வாடைக் காட்சியை இவருடனிருந்து கண்டு உணர்வு விருந்துண்ணுதல் வேண்டும். உணர்வின் பெருமை இது. உணர்வு காண்கிறது; களிக்கின்றது; கரைகின்றது; காட்சியோடு காட்சியாய்க் கலந்தொன்ருகின்றது; பேச்சில்லை; பேரமைதி. சாந்தி! சாந்தி! சாந்தி!

நெடுநல்வாடை என்னும் பெயரில் 'நல்' என்னும் சொல்லைக் கொண்டே இந்தக் கோயிலுக்கு நக்கீரன் கால்கோள்விழாச் செய்துபோயுள்ளான். வாடை நல்லதாவது எப்படி? துன்பம் இன்பமாவது எங்ஙனம்? அகநானூற்றில் பிரிவைப்பற்றியே செம்பாதிப்பாக்கள் வருவானேன்? விப்ரலம்ப ச்ருங்காரமே உயர்வென வடநூலாரும் கொள்ளுவதேன்? ஷேக்ஸ்பியர் துன்பியல் நூலாலேயே சிறந்தது எவ்வாறு? உலக வாழ்வின் அடிப்படையான இந்த உண்மையை, இந்த நூலை ஓதி அறிந்து கொள்க!

நக்கீரன் உலகையும், உலகைப் படைத்து உடலெல்லாம் உயிரெல்லாம் உணர்வெல்லாம் கண்ணாய் விளங்கும் ஒருவனையும், வெண்ணெயாக உருட்டி, ஒரே வாயாக விழுங்குகின்ருன். அறிவு திரள்கின்றது. இன்ப ஒளி சுடர் விடுகிறது. துன்பமே எரிகரும்பாகக் கொண்டு எழுந்து கொழுந்து விட்டெரிகின்ற பேரொளி அது. என்ன காட்சி! அன்பின் திருவுரு

வமே அக்காட்சி. அத்துணையே. ஆனால், அதுவே கடவுட்காட்சி. அன்பே சிவனென்றான் அன்றோ தமிழன்? கண்ணன் வாயைத் திறந்தது போல, கீரனும் வாயைத் திறக்கின்றான். இந்நூலாசிரியராம் எசோதையார் என்ன காண்கின்றார்? அன்பு எனும் உயிர் நடையாடும் பாஃட்டுலகமே காண்கின்றார். மேலும் என்ன காண்கின்றார்? செடியிலும் கொடியிலும் அன்பு! கால்மாறியாடும் புருவின் செயலற்றொளிரும் அன்பு! அரசன் பின்னே செல்லும் யானையின் நன்றியில் திளைக்கும் பேரன்பு! சடங்கில் அடங்கியும் புறக்காட்சியில் மயங்கியும் வரும் பெண்களிடையே உயிருணர்ச்சியில் தன்னை மறந்து உலகமாகிய அரசியின் பெண்மைப் பேரன்பு! இயற்கைக்கு அஞ்சியும் இயற்கைக்கடிமையாயும் வாழ்வார் வாழ, துன்பப் படுவாரிடையே புத்தர்பெருமான் போல இன்பூட்டி, ஸ்டாலினிலும் வீரம்மிக்க அரசர் பெருமானது அளவிலா இன்ப அன்பு! எங்கும் அன்பு! எல்லாம் அன்பு! இதுவே பழைய பாட்டு; இல்லை, வருங்காலப் பாட்டு. இந்நூலாசிரியர் வாய்மொழி வாயிலாகவே அதனைக் கேட்டு மகிழ்க!

**தே. போ. மீனாட்சிசுந்தரன்**

# போரூர் முருகன் திருமுன்

'வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க! பல நலம் பெருக!' எனும் வாழ்த்தொலி முழங்குகின்றது. பண் இசை எழுகின்றது. பல்லியம் ஒலிக்கின்றன. தமிழ்ப் பெருமகனார் திரு. வி. க. தம் மணி விழா நன்னாள் இந்நாள்.

இவ் விழாக் காண்பது திருப்போரூர் ஒன்றோ? ஊரெலாம் விழா! நாடெல்லாம் விழா! இவ்விழாவில் ஈடுபட்டாரும் பற்பலர்; வாடாக்கண்ணி தேடிப் புனைவார் ஒருபால்; பாமாலை சூட்டும் பாவலர் ஒருபால்; நூல்மாலை நூற்கும் நூல் வலார் ஒருபால்; எண்ணருங்கட்டுரை எழுதுவார் ஒருபால்; தினத்தாள், வாரத்தாள், மாதத்தாள் ஆதியன இப் பெருந்தகையாளர் பெயரைத் தாங்கி நிற்கின்றன; இவரைப் புகழ்கின்றன. சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர் பற்பலர் போற்றுகின்றனர்; புகழ்கின்றனர். எங்கும் வாழ்த்தொலி; எங்கும் புகழ்; எங்கும் மணி விழா.

மணி விழாக் கொள்வது மனைவியுடன் அன்றோ? அவ்வம்மையார் யாண்டுள்ளார்? என்றும் திரு. வி. க. வுடனேயே வீற்றிருக்கின்றனர். இவர் உள்ளத்தும் உறைகின்றார்; புறத்தும் உறைகின்றார்; இவர் உடலின் ஒவ்வோர் அணுவிலும் உறைகின்றார் இவர் உயிரின் ஒவ்வோர் அணுவிலும் உறைகின்றார். அவ்வம்மையாரை மணந்து இவர் அழகுற்றனர்; 'மண அழகனார்' (கல்யாணசுந்தரர்) ஆனார் போலும்! இம்மணத்திடை எழுந்த அன்பன்றோ 'பெண்ணின் பெருமை'யை உணர்த்திற்று? இவ்வன்பின் அகற்

சியே, இவ்வன்பின் பெருக்கமே, 'முருகன் அல்லது அழகு'தனைக் கண்டது; 'தமிழ்த் தென்றல்'லாய் வீசிற்று; தமிழ்ச் சோலை'யாய்த் தழைத்தது; தழைக்கின்றது.

இத்தனித் திருவாளர் இன்று அன்பில் அரசராய்த் திகழ்கின்றார்; அன்போடியைந்த அறிவில் அரசராய்த் திகழ்கின்றார். நக்கீரர் உயர் நடையென உலகிற் குணர்த்திய அன்பின் நடையை உலகில் நடந்து காட்டிய பெரியார் இவர்; நலம்புரி கொள்கையிற் புலன் பிரிந்துறைபவர்: ஏழைக்கு எளியவர்; தொழிலாளர் தம் தோழர். இவர் அரசியல் வேண்டார்; அதிகாரம் வேண்டார்; பொருளும் வேண்டார்; புகழும் வேண்டார்; வேறு எதுவும் வேண்டார். இவர் வேண்டுவது ஒன்றே; அஃது அன்பு.

இப்பெரியார் மணிவிழா நன்னாளாகிய இந்நாள் வெளிவர என்ன புண்ணியம் செய்தது இச்சிறுநூல்! வாழ்க திரு. வி. க. வாழ்க பல்லாண்டு!

திருப்போரூர்
24-8-'43

ஆக்கியோன்

# நெடுநல்வாடை

## (திறன் ஆய்ந்து தெளிதல்)

### I

### பொதுச் சிறப்பு

பாக்களிற் சிறந்தது நெடுநல்வாடை. இதன் திறன் ஆய்தற்பாலது; ஆய்ந்து தெளிதற்பாலது. இப்பாவின்கண் நக்கீரர் அறிவின் தெளிவைக் காண்கின்ரேம்; அவர் அறிவின் நுட்பத்தை அறிகின்ரேம்; அவர் உணர்ச்சியின் ஆழத்தை உணர்கின்ரேம். இதில் காணப்படும் பாநலங்கள் பல; இயற்கை இயல்புகள் பல; பொருள் நலங்கள் பலப் பல. நிறை நலத்தது நெடுநல்வாடை.

இப்பாட்டின் பெயரை நோக்குவோம்: இதன் பெயர் 'நெடுநல்வாடை.' இது எளிய பெயர்; ஆனல், எளிதில் உணர்தற்கரியது; ஆழ்ந்த கருத்துடையது; பொருள் செறிந்தது. இஃது இப்பாட்டின் நலனெல்லாம் ஒருங்கு தொகுத்துக் குறிப்பாலுணர்த்துமாறு இட்ட பெயர். இப்பெயர் அறிவிப்பது யாது? 'இப்

பாட்டு வாடைக் காற்றைக் குறித்தது,' என்பதை அறிவிக்கின்றது. இம்மட்டோ! 'இவ்வாடை நீண்ட வாடை; நல்ல வாடை,' என்பனவும் தெரிகின்றன. புலவர் ஏன் இதனை 'நீண்ட வாடை' என்றார்? 'நல்ல வாடை' என்றார்? வாடைக் காற்றோ, மக்கள் உவப்பதொன்றன்று; வெறுப்பது. இவ்வாடை எவ்வாறு 'நெடு வாடை' ஆயிற்று? 'நல் வாடை' ஆயிற்று? நெடுநல் வாடை' ஆயிற்று? இவற்றிற்கு விடை, இப்பாவின் உட்பொருள் கூறும். இப்பாவின் நலனெல்லாம் அறிந்த பின்பே இதன் பெயர் நலம் விளங்கும்; பொருத்தம் விளங்கும். ஆதலின், இப்பாவின் பொருள் நலம் பாநலம் முதலியவற்றுள் புகுவோம்.

இப்பா கூறும் பொருள் வாடைக் காற்று. கல்லாரும் அறிவது காற்று. காற்றைப் பற்றியோ அதிலும் வாடைக் காற்றைப் பற்றியோ ஒரு பெரும் புலவர் பாட வேண்டும்! தென்றலைப்பற்றிப் புலவர்கள் பாடக் கேட்டிருக்கின்றோம்; படித்திருக்கின்றோம்; தென்றல் தரும் இன்பத்தில் திளைத்திருக்கின்றோம். மன்பதைக்கெல்லாம் இன்பம் தருவது தென்றல். உயர்ந்தார் தாழ்ந்தார், செல்வர் வறியர், கற்றார் கல்லாதார் ஆகிய எல்லார்க்கும் இன்பம் அளிப்பது இக்காற்று. பற்றற்றாரையும் பற்றும் இத்தென்றல். 'வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்'* மாசிலா

* அப்பர், ஐந்தாம் திருமுறை, 90 :1.

மன்த்திின்கண்ணும் புகுவன. இத் தென்றலின் இன்பம் நுகர்வார் மாந்தர் மட்டுமோ! தென்றல் வர இன்புற்றுக் குயில்கள் கூவுவன; மயில்கள் ஆடுவன; உலகெலாம் இன்புறுவன.— தரை எலாம் புல்! எங்கும் பசுமை நிறம்! எங்கும் மலர்கள்! எங்கும் அழகு! எங்கும் நறுமணம்! எங்கும் இன்பம்! - உயிருள்ளன, உயிரில்லன எல்லாம் தென்றல் வர இன்புறுவன.

நக்கீரர் இத்தென்றலைப் பாடினரல்லர். பிறர் சென்ற வழியே நக்கீரர் செல்லார் போலும்! இவர் தென்றலுக்கு மாருன வாடையைப் பொருளாகக் கொண்டார். பொருளாகக் கொண்டது மட்டுமோ! 'வாடை நல்ல காற்று,' என்றும் கூறுகின்ருர். 'தென்றலை நல்ல காற்று என்று கொள்ளாதிர். இதோ நல்ல காற்று! வாடை காண்மின்!' என்று வற்புறுத்திக் காட்டுவார்போல இப்பாவின் தலைப்பிலேயே 'நல்வாடை' என்று தொடங்கியுள்ளார். இப்புலவர்க்கு வாடையிடத்தில் என்ன நட்போ! என்ன அன்போ! இக்காற்றில் மக்கள் காணுத நலன் நக்கீரர் யாது கண்டார்?

பாடல் பெறும் பொருள் தென்றல் ஆனுல் என்ன, வாடையானுல் என்ன? இவையன்றி வெறுங் காற்றுனுல் என்ன? காற்றின்றி வேறு யாதானுல் என்ன? பாட்டின் பொருள் சிறப்பது பாவலனுல் - அவன் இயற்றும் பாநலத்தால்.

பொருளல்ல வற்றைப் பொருளாக்கும் பாவே
இரும்பைப்பொன் னுக்கு மருந்து.

இம்மருந்தைக் கையாளும் மருத்துவன் அற்பப் பொருளையும் அரும் பொருளாக்குவன்; அற்பனையும் அறியவனுக்குவன். நக்கீரர் பாவிடைப் பட்டு வாடையும் வளம் பெற்றது.

மனிதன் இன்ப வேட்டையின்மீதே கண்ணும் கருத்துமாய்த் திரிகின்றான்; துன்பத்தின் அழகைக் காண்பதில்லை; அது தரும் தூய்மையை அறிவதில்லை. துன்பம் தருவது வாடை. மக்கள் அதை விரும்புவதில்லை. இன்பம் தருவது தென்றல். அதையே மாந்தர் விரும்புகின்றனர். இன்பம்! இன்பம்! எப்போதும் இன்பமே வேண்டும்! துன்பமானால் நடுக்கம்! தூரத்தே ஓட்டம்! இது மனிதன் மனப்பான்மை. நாம் உலகில் காண்பது யாது? உற்று நோக்குவோம். 'இன்பமுண்டேல் துன்ப முண்டு.'* உண்மையான இன்பம் உற்றார் ஒரு சிலர். துன்பம் உற்றார் பலர்; உறுவாரும் பலர். உண்மையான இன்பத்தைக் காண்பது அரிது. அஃது எங்குளது? அஃது இருக்கும் இடத்தை அறிவாறில்லை. உலகத்தில் காணப்படுவது துன்பம்! துன்பம்! எங்கணும் துன்பம்! இளையவர் முதியவர், வறியவர் செல்வர் அரசர் அடிமை ஆகிய அனைவரும் துன்பத்தின் வாய்ப்படுகின்றனர். இஃது உலகியல்; இயற்கையின் தன்மை.

பாவலன் இவற்றைப் பாவின் கண்கொண்டு பார்க்கின்றான். துன்பம், துன்பமாக அவனுக்குத்

* சுந்தரர் தேவாரம், திரு எதிர்கொள்பாடி, 7.

தோற்றுவதில்லை. அவனுக்குத் தோற்றுவன துன்பத்தின் அழகு, துன்பத்தின் தூய்மை. இன்பத்தைப் படைத்த கடவுள் துன்பத்தை ஏன் படைத்தார்? ஏன் துன்பத்தினை இன்பத்தினும் அதிகமாக்கினர்?

‘ துன்ப முற்ற வர்க்கலால்
இன்ப மில்லை யாதலால் ’*

பாவலன் துன்பத்தின் இயல்பை அறிகின்றான்; இயற்கையின் தன்மையை உணர்கின்றான். இவை எல்லாம் இனிய கவியாக மாறுகின்றன.

நக்கீரர் பாவெனும் குன்றேறி நிற்கின்றார். உலக நிகழ்ச்சிகள் பலவும் அவருக்குப் புலனாகின்றன. கூதிர் காலத்தே வாடைக் காற்று வீசுகின்றது; குன்றும் குளிரால் வருந்தும்படி வீசுகின்றது. புலவர் துன்ப நிகழ்ச்சிகள் பலவற்றைக் காண்கிறார். பறவைகள், படிவன விழுகின்றன. விலங்குகள், மேயல் மறக்கின்றன. குரங்குகள் குளிரால் நடுங்கி ஒடுங்குகின்றன. கோவலர் இனநிறை ஓட்டி வேறு புலம் செல்கின்றனர்; குளிரால் நலிகின்றனர். அவர்தங் கவுள், புடைபுடைக்கின்றது; உடல் நடுங்குகின்றது. அந்தோ கொடுமை! அவ்வேழை மாந்தர் இவ்வாடைக்கு என்ன தீமை இழைத்தனர்? ஏன் அவர்களை இவ்வாடை வருத்த வேண்டும்?

* சீவக சிந்தாமணி, காந்தருவ. 87.

இத்துன்பம் எளியார் மட்டு நின்றதோ? வாடையும் வலியாரை நீக்கி வீசுமோ? செல்வரைச் சேர நாணுமோ? காதலர்ப் பிரிந்த காதன்மகளிர் வாடையால் வருந்திப் புலம்புகின்றனர். இத்துன்பம் அரசன்பாலும் தாவுகின்றது. அரசியும் அரசனைப் பிரிந்து வருந்துகின்ருள். அரசன் பாசறையின்கண் வாடைத்தண் வளியில் உறக்கமின்றித் திரிகின்ருன். வாடை ஒன்று மட்டுமோ அரசனை வருத்துகின்றது! போர் என்னும் பெருந்துயரும் அவனைச் சூழ்ந்து கொண்டது. நிகழ்ந்த போரில் பெருஞ்செயல் புரிந்தும், அரசன் படை வெற்றி உற்றிலது. என்னே துன்பம்! அரசனைப் பற்றிய துன்பம் அனைத்திினும் பெரிது.

இத்துன்பத்திற்கு அழுங்குவார் சிலர். இதனை மாற்ற முயல்வார் சிலர். இதனைப் பொருட்படுத்தாது திரிவார் சிலர். இவற்றையெல்லாம் நக்கீரர் மனக் கண்களாற் காண்கின்ருர்; கருதுகின்ருர். இத்துன்பத்தின் இயல்புகள் எல்லாம் இவர் உளத்தில் படிகின்றன. இவைகளைத் தொடர்புபடுத்தி நோக்குகின்ருர்; துன்பத்தின் தூய்மையை உணர்கின்ருர். அதன் அழகில் ஈடுபடுகின்ருர். இவை இவர் உளத்தில் தைக்கின்றன. உள்ளம் கனிவுறுகின்றது; உணர்ச்சி ததும்புகின்றது. இவர் கண்டனவற்றைத் தாம் கண்டவாறே நாம் காணுமாறு உணர்த்துகின்ருர். இவர் கண்ட உலக இயல்பு, இவ்வியல்பின் அழகு, இவை கலக்கிய உள்ளத்துணர்ச்சி, இவை தந்த அறிவின்

தெளிவு—இவை எல்லாம் ஒன்று கூடுகின்றன ; கூடி அரும்புகின்றன. அவ்வரும்பு மலர்கின்றது ; சீர், தளை, அடி எனும் இதழ் விரிந்து 'வாடை' என்ற துன்பியல் பாட்டாய் மலர்கின்றது. அம் மலர் அழகொளி வீசுகின்றது ; உணர்ச்சியாம் தேனைத் தாங்கி நிற்கின்றது ; அறிவின் மணம் வீசுகின்றது ; காண்தொறும் காண்தொறும் இனிமை பயக்கின்றது.

மேலே கூறியவை பொருளின் பொதுச் சிறப்பினைத் தொகுத்துக் கூறியவை ; தொகுப்பின் சுருக்கம். வாடையின் தொடர்புபற்றிப் புலவர் பெருமான் கூறும் நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டல்ல ; பல. புலவர் இயற்கையின் நுட்பங்கள் பலவற்றைக் காட்டுகின்றார். இப் பாவின்கண் நிலப்பரப்பின் அழகினைக் காண்கின்றோம் ; மரம் செடி கொடிகளின் வனப்பினையும் இயல்பினையும் உணர்கின்றோம். பறவைகளும் விலங்கினங்களும் தத்தம் இயல்புகாட்டி இப்பாவில் அமைகின்றன. ஆடவர் மகளிர் பல் வகையினரைக் காண்கின்றோம். மானிடர் தன்மையை இப்புலவர் உணர்த்தும் ஆற்றல் பெரிது ! ஆடவரியல்பு, மகளிரின் தன்மை, அவரவர் உளப்பாங்கு, அவரவர் குணம் ஆகிய இவைகளை இப்புலவர் கூறும் முறை ஒப்பற்றது ; உணர்ச்சியை உந்துவது ; அறிவைத் தட்டி எழுப்புவது. இவற்றை எல்லாம் வகைப்படுத்தி, ஏற்றவாறு பிரித்து, ஒவ்வொன்றின் அருமை பெருமைகளையும் காண்போமாக :

இப்பாட்டின் நலன், பொருள்நலன் பாநலன் என இருபாற்படும். பொருள் நலன், மக்கள், மா, புள், மரம் எனும் நாற்பாற்பகுதியுள் அடங்கும். மக்கட் பகுதியை, ஆடவர் மகளிர் என இரு கூறுகளாக்கிக் காண்போம்; மா, புள், மரம் எனும் ஏனைய உயிர்ப்பகுதியை மற்றொரு கூறாக்கிக் காண்போம். ஈண்டுப் பொருள் நலத்தையே* ஆராய்வோம். இதில் அடங்கும் ஒவ்வொன்றின் புறத்தினும் சுற்றிப் பார்ப்போம்; உள்ளும் புகுவோம். ஒவ்வொன்றினும் உறையும் புறநலன், அகநலன், இயல்நலன், ஏனைய நலன் ஆகிய இவை அனைத்தையும் நுகர்வோம்.

* பாநலனைக் குறித்த பகுதி பின்பு வெளி வரும்.

# II

# மக்கள் தொகுதி

## ஆடவர்

**பி**றவிகளில் உயர்ந்தது மனிதப்பிறவி. மனிதப் பிறவியின் பல இயல்புகளை, பல நுட்பங்களை, நக்கீரர் இப்பாட்டில் பொதிந்து வைத்துள்ளார். அவற்றுள் அரசனைப் பற்றியவை மிகு சிறப்புடையவை; முக்கியமானவை. அரசனாய்ப் பிறத்தல் அல்லது அரசனே ஆதல் அரிது. இது சிலருக்கே வாய்ப்பது. இதனினும் அரிது, அரசன் ஆள்வினை உடையோனுதல் - அறிவுடையோனுதல் - ஒழுக்கமுடையோனுதல். நக்கீரர் காட்டும் அரசன், ஆள்வினைக்கரசன்; அறிவிற்கரசன்; ஒழுக்கத்திற்கரசன்; நாட்டிற்கும் அரசன். இப்பெருந்தகு அரசனை முதலிற் சென்று காண்போம் :

பெரும்போர் மூண்டது. நிகழ்ந்த போரில் இப் பெருந்தகை அரசன் வெற்றியுறவில்லை; பாசறையின்கண் இருக்கின்றான். பெருஞ்செய்யாடவர்கள் பெற்ற விழுப்புண் காணுமாறு அரசன் செல்கின்றான். நள்ளென் யாமம். வாடைத் தண்வளி வீசுகின்றது. வெற்றி பெறாத அரசன் மனம் எப்பாடு படும்! என்னென்ன நினைந்தேங்கும்! இம்மன நிலையை உணர்தல், உணர்ந்த நிலையைத் தக்கவாறு

உலகத்தாருக்குக் கூறுதல், அவ்வாறு கூறும் திறத்தால் படிப்போர் மனத்தைக் கவர்தல் முதலியன பெரும்புலவர் செயல். புலவர்தம் ஆற்றலுக்கேற்ப, அறிவிற்கேற்ப, இவை அமைவன. இம்மன நிலையை எடுத்துக் கூறிய சில புலவர்தம் கூற்றையும் நக்கீரர் கூறியவற்றையும் உடன் நிறுத்தி நோக்குவோமாக :

சங்கப் புலவருள் நப்பூதனார் என்பவர் இம்மன நிலையைக் கூறியுள்ளார். இவர் முல்லைப் பாட்டாசிரியர். இவர் கூறிய அரசனும் நிகழ்ந்த போரில் வெற்றியுறவில்லை ; இரவில் நெடுநேரம் உறக்கம் கொண்டிலன் ; ஒரு கை பள்ளியொற்றி, ஒரு கை முடியொடு கடகஞ் சேர்த்தி, நெடிது நினைந்திருக்கின்றான்.

"சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல் துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும் மாசிந் தித்தும்
ஒருகைப் பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து"*

படுத்திருந்த அரசன் மனநிலையை உன்னுக ! போர் செய்து களத்தில் மடிந்தாரை அவன் எண்ணுகின்றான் ; புண்பட்டு உண்ணாது உயங்குகின்ற யானை குதிரைகளை நினைக்கின்றான். அவன் மனமும் புண்பட்டதுபோலும் ! மடிந்தாரை நினைக்கின்றவன், தன் படைஞர் பலரும் மடிந்த பின்னர் எவ்வாறு

* முல்லைப் பாட்டு, 72 - 76.

வெற்றியுறுவது என்று எண்ணுகின்ருனே? தான் போர் செய்த முறை தவறுடைத்தென்று நினைக்கின்ருனே! வெற்றி பெருமையை நினைந்து நினைந்து உறக்கமின்றி வருந்துகின்ருனே! என்னென்ன நினைந்ததோ அவ்வரசன் மனம்! அவ்வரசனுக்கு வெற்றி பெருததைப்பற்றியும் கவலை; இனி வெற்றி பெற வேண்டுவதைப் பற்றியும் கவலை போலும்! நெடிது நினைக்கின்ருன். இது நப்பூதனர் அறிந்த மனத்தின் தன்மை.

இம்மன நிலையைக் குறித்துக் கம்பநாடரும் கூறியுள்ளார்: இராவணன் சிறந்த போர் வீரன்; முதல் நாள் போரில் இராமன் செய்த போருக்கு ஆற்ருது தோற்ருன்; அரண்மனை சென்ருன்; படுக்கையிற் கிடந்தான்; சிறிதும் உறக்கம் கொண்டிலன். இம்மன நிலையைப்பற்றிக் கம்பநாடர்,

" கண்ணிறை கோடல் செய்யான்
கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானந் தன்னை
உமிழ்ந்தெறி யுயிர்ப்ப தானன் "

எனக் கூறுகின்ருர். கவலை சுற்றிக்கொண்டது. இராவணன் செயலற்றுப் படுத்துள்ளான்; கண்ணிமைகளையும் மூடவில்லை. அந்தோ! பெருமூச்சு விடுகின்ருன்!

முல்லைப்பாட்டுடை அரசனையும் கவலை சுற்றிக் கொண்டது; இவனும் எளிதில் உறக்கம் கொண்டிலன். நெடிது நினைக்கின்ருன். இராவணன் போன்று இவ்வரசன் கண்களையும்

மூடாமலிருந்ததாக நப்பூதனர் கூறவில்லை. கண்கள் மூடியிருந்தும் உறக்க மில்லாமல் இருத்தல் கூடும். கவலையை உணர்த்த உறக்கமில்லாமல் இருந்தான் என்று கூறுவதே போதுவது. அவ்வாறு கூருது, கண் மூடாதிருந்தான் என்றும் கம்பர் குறிப்பிடுவது அதிக கவலையை உணர்த்தும் போலும்! கம்பர் இராவணன் துன்பத்தை இன்னும் அதிகமாகக் காட்டுகின்ருர். இராவணன் பெருமூச்சு விடுகின்ருன். ஒவ்வொரு மூச்சும் அவன் மானத்தை உமிழ்கின்றது.

நக்கீரர் கூறிய அரசன் மனநிலையை மற்றிருவர் மன நிலையுடன் ஒப்பிட்டு நோக்குவோம். மற்ற இரு மன்னரும் பள்ளி கொண்டனர். கீரர்தம் அரசனே, நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான். பள்ளி கொள்ளாது என் செய்தான்? நின்றவாறு கவலையுறுகின்ருனு? அல்லால் இருந்தவாறு ஏங்குகின்ருனு? இல்லை. சிலரொடும் திரிகின்ருன்; கவலையற்றுத் திரிகின்ருன். மற்ற இரு பெரு மன்னர்களையும் பற்றிய கவலை என்னுயிற்று? எங்குச் சென்றெளித்தது? அக்கவலை இவ்வரசன் பக்கத்திலும் செல்லப் பயந்ததோ! அல்லால் இவனைத் தீண்ட நாணிற்றே! இவன் முகனமர்ந்து திரிகின்ருன். மற்ற இருமன்னர்கள் போன்று இவனும் வெற்றியுறவில்லை. ஏன் இவ்வரசன் கவலையுறவில்லை? இவ்வரசன் அமைதி பெற்ற உள்ளத்தை எவ்வாறு பெற்ருன்? அமைதியுற்ற உள்ளம் இவன் முகத்தில் தெரிகின்றது. கலங்காத நெஞ்சினன் போலும்! கலக்கமின்மையே இவ்

வரசனுக்கு அமைதியைத் தந்தது. வெற்றி பெரு மையைக் குறித்தும் இவ்வரசன் கவலை கொண் டிலன். 'இனி வெற்றி எவ்வாறு பெறுவது!' என் னும் கவலையும் தோன்றவில்லை. கவலை எதற்கு? வெற்றி தருவது கவலையோ, கலங்கா உள்ளமோ? 'அற்றேம்!' என்று அல்லற்படுதலோ ஆண்மை? தோல்விக்கோ உள்ளம் உடைவது?

சற்றுநின்று இவ்வரசன் மனநிலையை நினைக! நக்கீரர் காட்டும் அரசன்பால் கலங்காத உள்ளம் தோன்றுகின்றது; அசையாத அமைதி தோன்று கின்றது. இவன் முகனமர்ந்து சிலரோடு திரிகின் முன். தோல்வியால் இவன் மனம் ஒரு சிறிதும் கலக்கமுறவில்லை. இவ்வரசன் தன்மையை நினைக்க நினைக்க நம் மனம் பெருமிதம் அடைகின்றது! அரசன் அமைதி நம்மையும் தழுவுகின்றது. நக்கீரர் காட்டும் அரசன் அஞ்சா நெஞ்சுடைக் களிறெனத் திரிகின்முன். இவன் முன் மற்ற இருமன்னரும் பூனை என ஆகின்றனர். என்னே கீரனார் ஆற்றல்! புலவர் தொடக்கத்திலேயே தம் வன்மையைக் காட்டிவிட்டனர். இவர் மற்றுள்ள புலவரைத் தலையெடுக்கவொட்டார் போலும்!

நாம் இதுகாறும் கருதியது பாட்டின் ஒரு சிறு பகுதி. இப்பகுதியில் எத்துணை வீரச்சுவை யைப் பொதிந்து வைத்துள்ளார் புலவர்! இச் சுவையினை உணர்த்த நக்கீரர் கையாளும் முறை யைக் கருதுக! சேனைகள் சிதைவதைக் காணேம். அக்குரோணிகள் அழிவதைக் காணேம். காளிக் குக் கூளி கூறுவதுமில்லை; கூளிக்குக் காளி கூறு

வதுமில்லை. கூழுமில்லை ; கூழடும் கொப்பரையு மில்லை. குன்றெடுத்தெறிதலுமில்லை ; அண்டத்தைப் புரட்டலுமில்லை. இவைகளில் ஒன்றேனுமின்றி, எவ்வாறோ புலவர் வீரச் சுவையைத் தூண்டிவிடுகின்றார். எவ்வாறோ அது நம் மனத்துள் தைக்கின்றது. வெற்றியைக் கொண்டு வீரத்தைக் காட்டுதல் வெறும்புலவர் இயல்பு ; தோல்வியில் வீரத்தைப் பெய்தல் பெரும்புலவர் இயல்பு. சீரர் வெற்றிக்கு அழகு செய்தாரிலர். வெற்றியும் இன்பமும் வேறிடம் புகுந்தன. தோல்விக்குப் பெருமை தந்துள்ளார் ; துன்பத்திற்கு அழகு செய்துள்ளார்.

மற்றும் இரு பெரும்புலவர் இம்மனநிலையைப் பற்றிக் கூறுவதும் நாம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. மக்களது உள்ள நிலைகளை ஊன்றி ஊன்றி அறிந்து உயர்நெறி வகுத்தவர் திருவள்ளுவர். இப்பெரும் புலவர் இந்நிலையைக் குறித்து யாது கருதுகின்றார் ? மக்களைத் துன்பம் தொடர்கின்றது ; பலரும் இடுக்கண் படுகின்றனர். இவர்கள் என்ன செய்யத் தகும் ? “ இடுக்கண் வருங்கால் நகுக!”* என்றார் திருவள்ளுவர். திருத்தக்க தேவரும் இம் மன நிலையைப் பற்றி கூறியுள்ளார். இவர் திருவள்ளுவரைப் பின் பற்றியவர். இவர் கூறுவது,

“ இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கம்ஒன் றானு மின்றி நகுக ! ”†

என்பது.

---

* திருக்குறள், 621. † சீவக சிந்தாமணி, காந்தரு. 511

நக்கீரர் கூறிய அரசனை மற்றும் ஒரு முறை நோக்குக! இவன் சிறிதும் நகைத்திலன். முகனமர்ந் திருக்கிறான். இவன் முகத்தில் அமைதி ஒளிர்கின் றது. இம்மன நிலையில் நகைத்தல் என்பது நக்கீர ருக்கு உடன்பாடில்லைபோலும்! ஏன் உடன்பா டில்லை? சற்று ஆராய்வோம்:

இடுக்கண் வருங்கால் நகைத்தல் எதனைக் குறிக்கும்? நகை எக்காரணம் கொண்டு தோன் றும்? பகைவன் சிறுமையையும் தன் பெருமை யையும் கருதுங்கால் பகைவன் பேதமை தோன் றும்; அவன் பேதமையை நினைக்குங்கால் நகைப்புத் தோன்றும். மனம் பகைவனை இழி வாக நினைக்கின்றது; நகைப்புத் தோன்றுகின் றது. இந்நகைப்பு, தற்புகழ்ச்சியின் முளை. "எம் ஆற்றல் பெரிது! எமக்கீடாவார் யாருளர்! இவ் வற்பனோ எம்மை எதிர்ப்பான்!" என்று மனம் எண்ணுகின்றது. இவ்வெண்ணம் சொல்லாக வெளிப்படுவதில்லை; நகையாக வெளி வருகின் றது. இந் நகைப்பும் கலங்காத உள்ளத்தைக் காட்டும்; அதனோடு தன் மதிப்பின் பெருக்கத் தையும் காட்டும்; 'நான்' எனும் ஆணவத்தின் தோற்றத்தையும் குறிக்கும். தன் மதிப்பின் பெருக்கம் பெருக, மாற்றான் வலியறியும் ஆற்றல் குன்றும். இத்தகைய நகைப்பு எளிதில் பிறப்பது. இது வெறுமனத்திருந்து வெளிப்படுவது; அற்ப மனத்திலிருந்து தோன்றுவது. அமைதி பிறப்பது நிறைந்த மனத்தில், அறிந்து அடங்கிய மனத்தில், ஆழ்ந்த மனத்தில்.

நகைப்புத் தோன்றுங்கால் உள்ள மன நுட்பங்களை நக்கீரர் நுணுகி ஆய்ந்தார் போலும்! கலங்கா உள்ளத்தைக் கையாண்டார்; நகைப்பைக் கையாண்டாரல்லர். நகைப்பு இவர் கொள்கைக்குப் பொருந்தாதது. கலங்கா உள்ளத்தோடு அமைதியைப் பொருத்திக் காட்டுகின்றார். இதனை நீதியாக எடுத்துக் கூறவில்லை. இலக்கியத்துள் பெய்து சிறந்த ஒழுக்கமாக அரசன்பால் அமைத்துக் காட்டுகின்றார். என்னே நக்கீரர் அறிவு! அறிவின் நுட்பம்! இவர் காட்டும் துன்பத்திடைப்படும் உள்ளத்தின் அழகைக் காண்மின்! துன்பமெனும் புதரை மறைத்து வீரம் தழைக்கின்றது; அமைதி படர்கின்றது.

இன்று நடைபெறும் உலகப் பெரும் போரைத் தொடங்கிய இட்லரை (Hitler) உலகம் நன்கறியும். இட்லர் பகைவரை எள்ளி நகைத்தான். அவனிலும் அதிகமாய் அவன் தோழன் முசோலினி நகைத்தான். ஆணவத்தின் உருவெனத் திகழ்பவர்கள் இவர்கள். இவர் தம் ஆணவத்தால் பிறரை எள்ளி நகைத்தனர். பிறர் வலியறியாது மயங்கி இடர்ப்படுகின்றனர். இவர்களோடு ஸ்டாலினை ஒப்பிட்டு நோக்குவோம்: 'ஸ்டாலின்' கலங்காத உள்ளம் உடையவர். இவர் அசைதலோ இல்லை; நகைத்தலுமில்லை. அமைதி இவரை விட்டு அரைக்கணமும் அகன்றிலது. இவர் அமைதி வெல்லுமோ, அல்லால் பகைவர் நகைப்பு வெல்லுமோ என்பது நாம் இனிக் காணக் கிடக்கின்றது. துன்பத்தின்

மேல் துன்பம் - இடுக்கண் மேல் இடுக்கண் - தோல்விமேல் தோல்வி - இவை ஸ்டாலினை என் செய்தன ? இவர் அமைதியை அதிகமாக்கின. தோல்வியெல்லாம் வெற்றியாய் மாறுகின்றன. நக்கீரர் படைத்த அரசனும் ஸ்டாலின் போன்ற ஒருவனே ?

துன்பம் வந்துற்றக்கால் தலைமேல் கையிட்டு நெடிது நினைந்தார் ஒருவரைக் கண்டோம் ; கண் இமை கொட்டாது, படுக்கையில் கிடந்து, பெரு மூச்சு விட்டார் ஒருவரைக் கண்டோம் ; இடுக்கண் வர அதனை நோக்கி நகுவார் ஒருவரைக்கண்டோம்; கலங்கா உள்ளத்தோடு முகனமர்ந்து திரிதரும் ஒருவரையும் கண்டோம். இந்நால்வருள் எவர் சிறந்தவர் ? எவர் நிறை நலத்தவர் ? எவர் மனநிலை சிறந்தது ? இவர்களை எடுத்துக் காட்டும் புலவர்களில் எவர்தம் புலமை நுட்பம் வாய்ந்தது ? கருதுவீர்களாக !

கலங்கா உள்ளம் ! கலையா அமைதி ! இவை தாமோ அரசன் சிறப்பியல்புகள் ? அவன் சிறப்பு இயல்புகள் இன்னும் பல உள. மேற்சென்று நோக்குவோமாக : அரசன் விழுப்புண் காணச் செல்கின்றான். துன்பந் தரும் வாடைக் காற்றில் துன்பத்தைக்காணச் செல்லுதலும்பொருத்தமாக அமைகின்றது. விழுப்புண் பட்ட பெருஞ்செய் ஆடவர் துன்பத்தைத் துன்பமாகக் கொள்பவர் அல்லர் ; விழுப்புண் படாதநாள் எல்லாம் வீணாளாகக் கொள்பவர். முன்னேன் ஒருவன் (படைத்

தலைமையில் முதலிலிருப்பவன்) விழுப்புண் பட்டவர்களை முறைப்படி காட்டுகின்றான். முதலிற் காட்டவேண்டியவர்களைக் காட்டிப் பிறகு காட்ட வேண்டியவர்களைப் பின்னர்க் காட்டுகின்றான். இவன் கையில் வேல் ஒன்றுளது. அவ்வேலின் தலையில் வேம்பு சூடியிருக்கின்றது. வேம்பினை வேலுக்குச் சூடுதல் எதற்கு? வெற்றியோ பெறவில்லை. போருக்கு எழுதலுமில்லை. வெற்றியைத் தாராத வேலுக்கோ வேப்பமாலை! வெற்றி பெருதவர் கவலையுற்றிருப்பது இயற்கை. வேலுக்கு மாலை சூட்ட அவர் மனம் எண்ணுமோ? அரசன் போன்று இம்முன்னோனும் தோல்வியை வெற்றியாகக் கொண்டனன் போலும்! வேலுக்கு அழகு செய்துள்ளான். இம்முன்னோன் உளப்பாங்கை ஒரு புறம் ஒதுக்கி, இவன் செயலைக் கவனிப்போம்: அரசன் விழுப்புண் காண வந்துள்ளான். அவனிடம் தலைவன் எவ்வாறு நடந்து கொள்வது? வணங்கிய சென்னியும் துளங்கிய உடலும், மூடிய வாயும் காண்கில. ஒரு கையில் எஃகம் உளது. மற்ருெரு கையால் விழுப்புண்ணினைக் காட்டுவான் போலும்! கை குவித்து வணங்கிலன். கைகுவித்து வணங்குதற்குத் தடையாகக் கையில் ஏன் வேலைப் பிடித்துள்ளான்? எஃகம் பிடித்து நிமிர்ந்து நிற்றலே போர்த் தொழிலாளர் வணங்காமல் வணங்கும் முறை போலும்! கை கட்டி வாய்புதைத்து நிற்க அரசன் விரும்பான் போலும்! அற்பரல்லரோ அடிமைகள் கொள்வர்! அடிமைத் தன்மை

யைக் குறிக்கும் செயல்களை விரும்புவர்! இவ்வரசன் பெருந்தகை.

அரசனை இன்னும் சிறிது பின்பற்றிச் செல்வோம். நாம் பின்பற்றுமுன் அவனைப் பரியும் யானையும் பின்பற்றிச் செல்கின்றன. அவைகளை நடத்தும் பாகன் காணப்படவில்லை; அருகிலும் இல்லை; அப்பாலும் இல்லை. பருமம் களையப்படவில்லை. அரசன் இப்போதுதான் போர் முனையினின்றும் வந்துள்ளான் போலும்! அன்றேல், தூரத்திலிருந்து வந்தனன் போலும்! அவ்வாறு பரிமா ஊர்ந்தவன் ஏன் கீழிறங்க வேண்டும்? இறங்கிய பின் மேற்பார்க்கும் ஆள் இல்லாவிடத்து அவ்விலங்குகள் தாங்கள் விரும்பியவாறு அங்குமிங்கும் செல்லாவோ? எவ்வாறு அவை அரசனைப் பின் பற்றிச் செல்கின்றன? அன்புடன் வளர்க்கப்பட்ட விலங்குகள், அன்புடன் நடத்தப்பட்ட விலங்குகள், அன்பு பராட்டுதல் இயல்பே. அவை தம் தலைவனைத் தெரிந்து அவனிடமே செல்லும்; அவனையே பின் பற்றும். அவைகளை நடத்திச் செல்ல ஆட்கள் தேவையில்லை. அவை தாமே ஒழுங்காய்ச் செல்லும். அரசன் குறிப்பறிந்து அவை தாமே நடப்பன போலும்! அரசன் அவைகளை அன்புடன் நடத்தியவனாக வேண்டும். அரசன் விலங்குகளிடத்திலும் செந்தண்மை பூண்டவன் என்பது இதனால் தெரிகின்றது.

அன்பு பூண்ட அப்பரிமா பருமத்துடன் அருகிருக்க, யானை அருகிருக்க, ஏன் அரசன் அவற்

றுள் ஒன்றின் மீதூர்ந்து செல்லவில்லை? யானை மீதிருந்தும் விழுப்புண் காணலாம்; குதிரைமீதிருந்தும் காணலாம். அரசன் அவ்வாறு செய்திலன். அரசன் செல்லும் வழியெலாம் சேறு; இருஞ்சேற்றுத் தெரு. குதிரை இருப்ப, யானை இருப்ப, அரசன் சேற்றிலோ நடக்க வேண்டும்! ஏன் எளியோன் போல நடந்து செல்கிறான்? பரிமா ஊர்ந்து விழுப்புண் கண்டால் குறை கூறுவார் யாருளர்? விழுப்புண் காணாவிட்டால்தான் குறை கூறுவார் யாருளர்? அவ்வேழைகள் குறை அரசனை என் செய்யும்? 'அரசன் இவ்வாறு செய்க!' என அறநெறி கூறிற்றுண்டோ? பெருஞ்செய் ஆடவரெல்லாரும் சேற்றில் வதிகின்றனர். அவருக்குத் துன்பம் தாராத சேறு, அரசனுக்குத் துன்பம் தருவதோ? அவர்களுக்கு இனியது அரசனுக்கும் இனியது அன்றோ? தான் வேறு படைகள் வேறல்ல என்பதோ அரசன் திருவுள்ளம்!

பெருமையை விரும்புவர் அற்பர். பெருமை இருந்தும் எளிமையை விரும்புவர் பெரியர். இவ்வரசனும் ஆன்றமைந்த பெரியான் போலும்! ஆதலின் பெருமையிருந்தும் எளிமையை விரும்பினன். இவ்வரசன் செயல்கள் புதுமை பொருந்தியவை; புகழத்தக்கவை. இவனை அகல விடாது பின் பற்றுவோம். அரசற்குத் தூரத்தே சென்றால் அவன்றன் நுண்ணிய செயல்கள் நம் கண்ணிற்படா. அதோ அரசன் தன் வலக்கையை உயர்த்துகிறான். அக்கை ஒரு படைஞனின் -

வாள் தோள் கோத்த வன்கண் காளையின் தோள்மிசை அமைகின்றது. இஃதென்ன புதுமை. அரசன் எளியவனைத் தொடுகின்ருன். அரசன் ஓர் எளிய போர் வீரன் சுவல்மிசையோ அமைத்த கையனுக வேண்டும்! அரசன் பக்கத்தே முன்னேன் இருக்கின்ருன். அரசன் அவனைப் புறக்கணித்தான் போலும்! படைத் தலைவன் அரசன் காண வேண்டியவர்களை முறை முறையே காண்பித்தான். "முன்னேன் முறையே காட்டிய பின்னர்," அவன் காட்டாத ஒருவனை அரசன் கண்டதும் முறையல்லவே! கண்டது மட்டுமோ! அரசன் அவனைத் தழுவியும் கொண்டான். இவ்வித முறைமைக் கட்டுகள் உலகத்தைப் பாழ் செய்தன. காணத்தக்காரைக் காண அரசனுக்கு அறிவில்லையோ! அன்பில்லையோ! முறை முறை காட்டப் பெற்றவரையும் அரசன் காண்பான்; அங்ஙனம் காட்டப் பெருதார் தகுதியையும் அரசன் அறிவான். குருடனே இவ்வரசன்! குருடரில் இயற்கைக் குருடரும் உளர்; செயற்கைக் குருடரும் உளர். இவ்விருவரையும் பிறர் நடத்திச் செல்ல வேண்டும். பிறர் சொல்வன அன்றி இவர் ஒன்றையும் காணுர். இவ்வரசன் இயற்கைக் குருடனுமல்லன்; செயற்கைக் குருடனுமல்லன்; அன்பிற்குரியார் யார் என இவ்வரசன் தானே அறிவன். ஒருவர் காட்டவும் வேண்டுமோ? அறிவோடியைந்த அன்பின் வயப்பட்டாரை இம்முறைமைக் கட்டுகள் தடை செய்வனவோ? அன்பில் முதிர்ந்

தார்க்கு உயர்ந்தார் தாழ்ந்தார் என்னும் வேற்றுமை உண்டோ? "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" 'இவ்விடம் வாராதே! அவ்விடம் செல்லாதே!' என அடைத்து வைக்கும் தாழ் அன்பிருக்கும் வீட்டிற்கு இல்லை. யாவரேனும் அத்தாழினை இடுவாராயின், அன்பும் ஆர்வமும் தரும் கண்ணீர் போர் செய்யும்; தாழைப் பெயர்த்தெறியும்; உடைத்தெறியும்.

தான் காட்டாத ஒருவரை அரசன் தழுவியதைக் கண்ட முன்னோன் மனம் எப்பாடு பட்டதோ! அவன் அரசன் செயலைக் கண்டு திடுக்கிட்டிருப்பான். 'நீ படைஞர்களை நன்கறிந்திலை!' என்று முன்னோனை ஒறுப்பது போன்றது அரசன் செயல். அம்முன்னோனுக்குப் புத்தி புகட்டவே அரசன் இவ்வாறு செய்தான் போலும்! 'படைஞர்களை நீ நன்குணர்ந்திலை!' என்று மட்டுமோ அரசன் உணர்த்தினன்! 'ஆணையால் முறை செய்தல் தவறு; அன்பால் முறை செய்க!' என்றும் உணர்த்துகின்றான் போலும்! இவ்வரசன் ஆளும் திறனைக் காண்க! இவன் ஒறுக்கும் முறையைக் காண்க! இவன் திருத்தும் ஆற்றலைக் காண்க! இவன் போதிப்பதும் புது முறை; போதிக்கும் விதமும் புதுமை பொருந்தியது. வன்கண்காளை வன்மை ஒன்றையே பெற்றவன். அவன் உள்ளத்துள் அன்பினைப் பெய்தற்கோ அரசன் அவனைத் தழுவினன்! கருதுவீர்களாக!

வன்கண் காளையின் தோள்மிசை அமைத்த கை எதனைக் குறிக்கும்? ஒருவர் தோள்மிசை

மற்ெருருவர் கையை அமைத்தல் எப்போது நேரும்? தொழிலாளிகள் தோள்மிசை முதலாளிகள் கையிட்டுக்கொள்வதில்லை. உயர்ந்தார் தாழ்ந்தாரிடம் இவ்வாறு செய்வதில்லை. தகப்பன் தன் மகன் தோள்மீது கையிட்டுச் செல்லுதலைக் கண்டிலோம். கைகோத்துச் செல்லுதல், தோளினைத் தழுவிச் செல்லுதல், சுவல்மிசைக் கை அமைத்துச் செல்லுதல் நண்பர்களிடையே நிகழும் செயல்- வேற்றுமையற்ற நட்பிடை நிகழ்வது. தனக்கும் தன்ஞல் தழுவப் பட்டவனுக்கும் இடையே வேற்றுமையின்று என்பதை இச்செயல் உணர்த்துவது - ஒப்புரிமையைத் தெரிவிப்பது - தோழமையை உணர்த்துவது - தோழமை அன்பினை அறிவிப்பது.

அன்பு பல வகைப்பட்டது ; பல திறத்தது. பெற்ருருக்கும் புதல்வருக்கும் இடையே அன்பு தோன்றும். இவ்வன்பு ஒரு வகை. ஆசிரியருக்கும் மாணவனுக்குமிடையே அன்பு பிறக்கும். இவ்வன்பு மற்ெருரு வகை. ஆண்டானுக்கும் அடிமைக்குமிடையே அன்பு நிகழும். இவ்வன்பு வேெருரு வகை. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே கனியும் அன்பு மற்ெருரு வகை. இவை யெலாம், தம்முள் வேறுபாடுடையன.

இவ்வகை அன்பிலெல்லாம் சிறந்தது தோழமை அன்பு. இது தோழர்களிடம் நிகழ்வது. தோழமை அன்பு தவிர மற்ற அன்பின் வகைகளில் ஒப்புரிமை பொருந்துவதில்லை. அவ்வகைகளில் சிலவற்றுள் தற் பெருமையும் ஆற்றலும் அடிப்படையாக அன்பு தோன்றி, தயவின் அறி

குறியாக வெளிப்படும்; அவற்றுள் அன்பினைத் தருவாரும் பெறுவாரும் ஒரு திறத்தவர் அல்லர்; அவருள் சிறிது வேற்றுமை தோன்றும். ஒருவர் தாழ்ந்தவர், மற்றவர் உயர்ந்தவர் என்னும் உணர்ச்சியும் அவரிடை உண்டு. ஆனால், அவ்வுணர்ச்சி வெளிப்படத் தோற்றுவதில்லை; ஆழத்தில் பதிந்துகிடப்பது. தோழமை அன்பில் வேற்றுமை சிறிதுமில்லை. சாதி, மதம், குலம், காலம், இடம், பொருள் ஆதிய வேற்றுமைகள் இவ்வன்பில் காணப்படா. எல்லாம் - ஒப்புரிமை - எல்லாம் ஒருதன்மை - ஒப்புரிமையின் பிறந்த அன்பே தோழமையன்பு.

சுந்தரர் இறைவனிடம் பூண்ட அன்பு தோழமையன்பு. இறைவன்பால் கொள்ளும் அன்பிலும் இவ்வகை அன்பே சிறந்ததென்பர். சுந்தரர் இறைவனைத் தோழனாகக் கொண்டார்; தலைவனாகக் கொண்டிலர்; தந்தையாய்க் கொண்டிலர். இங்கு ஒப்புரிமை பிறந்தது; உயர்வு தாழ்வு மறைந்தன; வேற்றுமை அகன்றது. 'அவனே தானே ஆகிய' அன்பிது என்பர் அறிஞர்; இவ்வன்பே சாலச் சிறந்தது என்பர்.

இத்தோழமை அன்பை நக்கீரர் அரசனிடத்தும், அவன் படையிடத்தும் அமைத்துக் காட்டுகின்றார். அரசன் ஏனையரின் உயர்ந்தவன் என்பது இங்கு இல்லை. படைகளை அல்லது மக்களை ஆளுவோன் அரசன் என்பதுமில்லை. அரசன் படையாட்களுள் தானும் ஒருவன்; நாட்டின் பொது நலத்திற்கு உழைப்பவன்; வேலையாள்; வேலை

யாட்களின் ஒப்புரிமையே அரச உரிமை. படை யாட்களும் அரசனும் தோழர்கள்.

இத்தோழமை அன்பினை Fellow-ship என்பர் மேல் நாட்டார். இத்தோழமை அன்பின்றியே உலகம் வருந்துகின்றது. இத்தோழமை அன்பு இவ்வுலகை விட்டுப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பறந்தோடியது. இது மீண்டும் உலகிடை வரும் நாளை நோக்கி உலகம் தவிக்கின்றது. இத்தோழமை அன்பின்மையே உலகத்திற் காணும் பல துன்பங்களுக்கும் காரணம். தோழமை அன்பிருக்குமிடத்தில் வழக்கில்லை; பிணக்கில்லை; குறும்பில்லை; வகுப்புவாதமில்லை; வேலை நிறுத்தமில்லை; அரசியல் குழப்பமில்லை; அயல் நாட்டுக் குழப்பமில்லை. தோழமை நிலை பெறின் உலகெலாம் அன்பு தழைக்கும்; அமைதி நிலவும். அமைதியை வேண்டி வேண்டி உலகம் தவித்து நிற்கின்றது. தோழமை அன்பின்றி அமைதி எவ்வாறு உலகிற் புகும்? எவ்வாறு வளைவின்றி வட்டம் வரும்?

'இத்தகைய தோழமை கொண்டார், இன்புற்றார்,' என்று கூறுவது பாவலரியல்பு; மக்களினியல்பும் அதுவே. ஆனால் நக்கீரர் அரசன் இன்புற்றான் என்று கூறவில்லை; 'சுவல்மிசை அமைத்த கையன் முகனமர்ந்து திரிகின்றான்,' என்று மட்டுமே கூறுகின்றார். நகைப்புக்குறி யாதும் இவ்வரசன் முகத்தில் தோன்றவில்லை என்பதை முன்னரே கண்டோம். இன்பக் குறி யாவது உண்டோ? அரசன் முகத்தை மற்றொரு

முறை ஆழ்ந்து பார்ப்போம். இன்பக்குறி ஒன்றேனுமில்லை. அமைதியின் குறிப்பே காணப்படுகின்றது. இங்கு இன்பம் கருதிய தோழமையில்லை; நாம் காண்பது தத்தம் கடமையாற்றும் தோழமை; இயற்கை இயல்பின் தோழமை. இன்பம் வேண்டி அன்பு கொள்ளுதல் அல்லது தோழமை பூணுதல் சிறந்ததொன்றன்று. இவற்றால் வரும் இன்பம் சிறந்ததெனினும், நுண்ணியதெனினும், கைம்மாறு கருதிய அன்பாகின்றது; கைம்மாறு கருதிய தோழமையாகின்றது. இவையும் அறவிலை வாணிபம் போலும். அரசன் காட்டிய அன்பு இன்ப அன்பன்று; கலப்பிலா அன்பு - உயரிய அன்பு - பலகால் புடமிட்டுத் துகள் போக்கிய அன்பு - தூய அன்பு - தோழமை அன்பு.

அரசனின் அமர்ந்த முகத்தை வன்கண் காளையின் முகத்தோடு நாம் ஒப்பிட்டு நோக்குமாறு, இவ்விரு முகத்தையும் ஒருசேர நக்கீரர் நிறுத்துகின்றார். அக்காளையின் கண்கள் வன்மை தவிர வேறு ஒன்றையும் உணர்த்துவன அல்லபோலும்! அக்கண்ணிடை அறிவைக் காணேம்; அன்பைக் காணேம். வன்மை ஒன்றுமே வாழ்வு தருவதோ? வன்மையே பெற்று வறண்ட முகத்தைக் காண்கின்றோம். அதனோடு அமைதியுற்று அமர்ந்த அரசன் முகத்தைக் காண்கின்றோம். அமைதியைப் பெறப் பல நற்குணங்கள் ஒன்று சேரவேண்டும். அழுக்காறு, வெறுப்பு, அவா, வெகுளி, செருக்கு ஆகிய இவைகள் உள்ள இடத்தில் அமைதி

சேருமோ ? இவை அமைதியின் பகைகள். இவற்றைத் துரத்திய பின்பே அன்பு உட்புகும். அவ்வன்பு ஒன்றுமே அமைதியைத் தருமோ ? அன்பு தருவது மென்மை. மென்மை சிறு காற்றிலும் அசையும் ; கலங்கும். வாடைக் காற்றைத் தாங்கி நிற்குமோ ? இதனைத் தாங்க, மென்மையுடன் சேர்ந்த திண்மை வேண்டும் ; கலங்கா உள்ளம் வேண்டும்: "வருவன எலாம் வருக ! வாரா தன எலாம் ஒழிக !" என்னும் திண்ணிய உள்ளம் வேண்டும். இவையெலாம் பெறுதற்குத் தூய அறிவு வேண்டும் ; ஆள்வினையும் வேண்டும். அறிவின்றேல், ஆள்வினை இன்றேல் இவை நல் வழிப்படா ; நல் அமைதியும் தாரா. கலங்கா உள்ளம் தெள்ளிய அறிவு, தூய அன்பு, தக்க ஆள் வினை இவற்றினை அரசன் செயலிற் கண்டோம். இவையெலாம் ஒன்று சேர்கின்றன ; அரசன்பால் நிறைகின்றன ; அமர்கின்றன ; அமைதியைத் தருகின்றன. அரசன் ஒழுக்கம் சிறக்கின்றது ; முகம் அமர்கின்றது அவன் முகனமர்ந்து சிலரோடும் திரிகின்றான்.

அரசன் சிலரோடு திரிதரும் இடத்தில் என்ன நிகழ்கின்றது காண்போம் : மழை பெய்கின்றது. அரசன் பக்கத்தில் குடை ஒன்று காணப்படுகின்றது. அக்குடை தவ்தவ்வென்று அசைகின்றது ; அரசன் மீது தாவுகின்ற மழைத் துளிகளை மறைக்கின்றது. "நூல்கால் யாத்த மாலை வெண்குடை தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப" என்று அதனை நயம்படக் கூறுகின்றார் நக்கீரர். எவ்வாறு குடை தானே அசையும் ? குடைக்கு

உயிருண்டோ? தானே அசையும் தன்மையும் உண்டோ? ஓ! நக்கீரர் பாட்டிலும் குற்றம் காணப்படுகின்றது. நக்கீரரிடம் தருமியின் பாடல் பட்ட பாட்டை நினைவு கூர்க! 'கூந்தலுக்குச் செயற்கை மணமன்றி இயற்கை மணமின்று,' என்று சாதித்தவர், குடைக்கு இயற்கை அசை வில்லை, செயற்கை அசைவே உளது என்று அறியார் போலும்! 'சொற்குற்றமின்று வேறு பொருட்குற்றம்,' என்று கீரர் இறையனாரை மருட்டியவாறே யாமும் இவரை மருட்டுவோம். இவர் இறையனாருக்குக் கூறிய மறுப்பே நாமும் இவருக்குக் கூறத்தகும்.

கீரர் கூறிய வாறே 'குற்றம் குற்றமே' ஆயினும், இயற்கையாய் அசையுந் தன்மையில்லாத ஒன்றை ஏன் தானே அசைவதாகக் கூறினார்? சற்று ஆராய்வோம்: இக்குடையைப் பிடித்தவர் அரசன் படையாட்களாக வேண்டும். படைஞரல்லால் வேறு எவரையும் இங்குக் காண்கிலம். குடையைப் பிடித்தவர் இன்னார் என்று கூறாது குடை அசைந்தது என்று ஏன் கூறுகின்றார்? மனிதரால் குடை பிடிக்கப்பட்டிருந்தால், குடை பிடிக்கும் முறையில் சிறிதேனும் தாழ்வு ஏற்பட்டிருக்கும். மழைத்துளி எவ்விடம் தாவுகின்றது என்று அறிவது, அதன் பின் குடையை அவ்விடம் நகர்த்திப் பிடிப்பது, இவை குடை பிடிப்போர் இயல்பு. சிலருக்கு, "இப்பக்கம் பிடி; அப்பக்கம் பிடி," என்று கூறவும் வேண்டும். இந்நிகழ்ச்சிகள் கூலிக்குக் குடைபிடிப்பாரிடம் நிகழ்வன; அன்பற்றாரிடம் நிகழ்வன. இங்கு இந்

நிகழ்ச்சிகளுள் ஒன்றும் காணப்படவில்லை. தாழ்வு யாதொன்றும் காணப்படவில்லை. மழைத்துளி எவ்விடம் தாவுகின்றதோ, அவ்விடம் தாவுமுன் குடை விரைந்து அவ்விடம் அடைகின்றது. மழைத்துளி எவ்விடம் தாவுகின்றது என்று எப்படி அறிந்தாரோ தெரியவில்லை. அதை அறியுமுன், அத்துளி தாவுமுன், எப்படிக் குடை அவ்விடம் வந்தது? தெரியவில்லை. எப்படி அத்தா துளிகளை மறைத்தது? எப்படி ஒரு துளியும் அரசன் மேற்படாமல் தடுத்தது? தெரியவில்லை. காண முடியவுமில்லை. குடை தானே அசைவதென்றே சொல்ல வேண்டுமே ஒழிய பிறர் அக் குடையைப் பிடித்தார் என்று சொல்ல முடியவில்லை. இவ்வாறு அறிய வொண்ணுதபடி அக் குடை பிடித்தார் செயல்மிக்க விரைவு வாய்ந்தது; மிக்க திறன் வாய்ந்தது. அவர் அரசன் மேற் கொண்ட அன்பையும் அரசனைக் காக்கும் திறனையும் இது காட்டுகின்றது.

அரசனுக்குப் படைகளிடத்தில் உள்ள அளவற்ற அன்புடைமையைக் கண்டோம். தான் வேறு, தன் படைகள் வேறு என்பது அரசனுக்கில்லை. படைகளும் அவ்வாறே உணர்கின்றன; அன்பில் ஈடுபடுகின்றன. அரசனை அன்றி இப் படைகளுக்கு உயிர் வேறில்லை. மழைத்துளியும் அவன் மீது விழாது காக்கின்றன. குடை மழைத் துளிகளைத் தடுத்தும், அத்துளிகள் அரசனைத் தீண்டத் தாவுகின்றன. அரசனிடத்தில் அவைகளும் அன்பு பூண்டனவோ? அல்லால் அவ்வன்பின் திருமேனியைத் தீண்டும் பெருமையைப்

பெற எண்ணினவோ ? என்ன முயன்றும் அவைகள் அரசனை அணுக விடார் படைஞர் ; கண்ணப்பர் இறைவனைக் காத்த அன்பினில் அரசனைக் காக்கின்றனர். மழைத்துளியும் அரசன் மேற்படாமற் காக்கும் படைஞர், அரசனுக்கெனில் கண்ணையும் ஈகுவர் ; உயிரையும் தருவர். அரசனுக்குப் படைகளிடத்தில் அன்பு ; படைகளுக்கு அரசனிடத்தில் அன்பு. அன்பு தவிர வேறு எதுவும் இங்குக் காணப்படவில்லை. அரசனும் அரசன் படைஞரும் அன்பு மயமாயினர். “ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்றானர்.” அன்பின் பிழம்பாய்த் திகழ்கின்றனர்.

இவ்வன்பின் திறம், இம்மட்டோடு நிற்கின்றதோ ? இல்லை. எல்லையற்ற இவ்வன்பு, படைகளைக் கடந்து அப்பாற் செல்கின்றது ; மனிதரைத் தாண்டியும் செல்கின்றது. தொடக்கத்தில் நாம் கண்டு விட்டுவிட்ட சில நிகழ்ச்சிகளை இங்கு நினைவு கூரவேண்டும். மணி புறத்திட்ட மாத்தாள் பிடியும் பருமங்களையாப் பரிமாவும் அரசனைப் பின் தொடர்கின்றன என்பதை முன்பு கண்டோம். இவை என் செய்கின்றன ? இவை இருஞ்சேற்றுத் தெருவில் அரசன் பின் செல்கின்றன. இவை நடத்தலால் சேறும் நீரும் சேர்ந்த துளிகள், அரசன்மீது படுகின்றன. அந்தோ ! கொடுமை ! அரசனைச் சார்ந்தவர் அரசன்மீது மழை நீர்த்துளி படாது காக்கின்றனர். இதற்கு மாறாக - முற்றிலும் மாறாக - இவ்விலங்குகள் அவன்மீது நீர்த்துளியை வீசுகின்றன. இந்நீர்த்

துளிகளும் தூய நீர்த்துளிகளோ ? அல்ல ; இவை நீரும் சேறும் சேர்ந்த துளிகள். இஃதென்ன முரண் ! முரண் அழகு !

இவ்விலங்குகளை நடத்திச் செல்ல ஆள் ஒருவனுமிலன் என்பதை முன்பே கண்டோம். அரசனோ, இவற்றின் மீது ஏறுவதில்லை. அங்ஙனமிருக்க, இவைகளைத் துரத்திவிடக் கூடாதோ ? குளிர்தரு வாடைக் காற்றோ, வீசுகின்றது. இதனோடு சேறும் நீரும் சேர்ந்த துளிகள் அரசன்மீது விழவும் வேண்டுமோ ? "இவற்றைத் துரத்துவீர் அப்பால்!" என்று அரசன் சொன்னால் போதுமே! இவ்விலங்குகளைப் படைஞர்கள் கொன்றிருப்பார்களே ! இக்கொடுஞ் சொற்களை அரசன் வாயாற் கூறான் எனினும், இக்குறிப்புத் தோன்றக் கண்ணால் பார்த்தால், இவ்விலங்குகளைப் படைஞர் எப்பாடு படுத்தியிருப்பர் ! அரசன் இவ்வாறு ஏதும் செய்திலன். 'பாய் பரி கலி மா' என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார். ஏன் பாய்கின்ற தன்மையை, பரிகின்ற தன்மையை இங்குக் குறிப்பிட வேண்டும் ? யானையும் குதிரையும், "யான் முந்தி நீ முந்தி" எனப் போட்டியிட்டு அரசனைப் பின் பற்றினவோ ? அறிவிலா விலங்குகள் அரசன் மீது இன்னும் சேற்று நீரை எறிகின்றன. இத்துளிகள் நடுக்கத்தைத் *தந்தன. இவை அரசன் மேல் விழுவதைக் கண்ட படைகள் நடுங்கின. அர

* நெடுநல். 180. விதிர்ப்ப – நடுக்கஞ் செய்ய. தொல். உரி. 316.

சன் வாளா இருப்பப் படைகள் செய்யத்தக்கன யாவுள ? இச்சேற்று நீர் பட்ட அரசன் என்ன தான் செய்கின்ருன், காண்போம் :

அரசன் ' புடைவீழ் அந்துகில் இடைவயின் தழீஇ 'ச் செல்கின்ருன். அரசன் உடை பக்கத்தில் விழுகின்றதை இடப்பக்கம் தழுவி கொள்கின்ருன். அரசன் உடலினும் உடை உயர்ந்ததோ! சேறு மேல் தெறிக்குங்கால் தங்கள் உடையைக் காத்துக் கொள்ளுதல் மக்கள் இயல்பு. ஆகலின், இவ்வரசன் செயல் இயற்கைக்கு முற்றும் பொருந்தியதே. பொருந்தியதாயினும் பயன் என்னை ? அரசன் உடலிற் சேறு பட்டது - படுகின்றது. இச்சேறு பட்ட உடலுடனும் புடைவீழ் அந்துகிலைத் தழுவிய கையுடனும் அரசன் கொலுவிருக்கத்தகும். இக்காட்சியைப் படமெடுக்கத் தகும். ஏன் இதனை அரசன் பொறுத்துக்கொண்டுள்ளான் ?

யானையும் குதிரையும் அன்புபற்றி அரசனைப் பின் தொடர்கின்றன ; நடத்துவார் எவருமின்றித் தாமே பின் தொடர்கின்றன. இவை அன்பின் வயப்பட்டன. இவற்றின் செயல்கள் எல்லாம் அன்பின் செயல்கள். சேறு அரசனுக்கு ஊறு செய்வதென்று இவை அறியுமோ? அறியா. அன்பொன்றே இவை அறிவது. இவற்றின் அன்பை அரசன் அறிந்தான் ; வாளாவிருந்தான் ; உடையினைத் தழீஇயதோடு அமைந்தான். இவை எறிந்த துளிகள் எல்லாம் அன்பின் துளிகள் ; அன்போடியற்றும் அருச்சனைத்

துளிகள். பரமனைக் 'கல்லால் எறிந்த பொல்லாப்புத்த'னின் முன்டிறப்போ இவ்விலங்குகள்?

அரசன் மனநிலையைச் சற்று நோக்குமின்: மாமுடிமீதிருந்த மலர்களை நீக்கிய கண்ணப்பரது 'செருப்படியை இளம்பருவச் சேயடியின் சிறப்புடைத்தாய்க்' கொண்ட இறைவன் திருவுள்ளம் போன்றதோ இவ்வரசன் உள்ளம்? ஆ! இறைவன் அன்போ இவ்வரசன் அன்பும்? என்னே அரசன் உள்ளத்தின் நிலை - உள்ளத்தின் கனிவு! அல்லால் கண்ணப்பர் வாய் நீர் இறைவனுக்குக் கங்கை நீர் ஆனாற்போல, அரசனுக்கும் இச் சேற்று நீர் சீரிய கங்கை நீர் ஆனதோ! ஆ! என்னே அன்பு! என்னே அழகு! என்னே உணர்ச்சி! நினைமின்; நினைமின்! நினைக்க நினைக்க உள்ளத்துணர்ச்சி ஓங்குகின்றது. இவ்வுணர்ச்சி நம்மையும் இவ்வன்பினில் ஒன்ருக்குவதோ?

ஆ! அரிய அன்பு விலங்கின் அன்பு. விலங்கின்பால் அரசன் கொண்ட அன்பும் இத்தகையதே. இவ்வன்போடு படைஞரின் அன்பினை நோக்குங்கால் படைஞர் அன்பு அற்பமாகின்றது. முன்பு பெரியதெனத் தோற்றிய படைஞர் அன்பு இப்போது தோற்ருேடுகின்றது - மறைகின்றது. அஃது இருந்த இடம் தெரியவில்லை. அரசன் அன்பிற்கு இனி உவமையும் வேண்டுமோ? அரசன், "ஒருமையால் உலகை வெல்வான்; ஊனம்மேல் ஒன்றுமில்லான்; அருமையாம் நிலையில் நின்ருன்"

அரிய நிலை ! அரிய நிலை ! பன்மையும் கடந்து நின்ருன் ; இருமையும் இறந்து நின்ருன்.

இவ்வன்பினை உணர்த்தும் நக்கீரர் ஆற்றல் தான் என்னே! அவர் பா வன்மைதான் என்னே! பல பாக்கள் இல; பல வரிகள் இல. சிலவரிகளில், சில சொற்களில் அளவற்ற பொருள் தோன்றச் செய்கின்ருர். என்னே அவர் சொல் வன்மை, சொல்லமைப்பு ! ஒரு சொல், இரண்டு சொல்; இவையும் சிறு சொல். இவை எவ்வாறு நம் அறிவைத் தூண்டிவிடுகின்றன ! உணர்ச்சியைக் கட்டவிழ்த்து விடுகின்றன ! நம் உணர்ச்சி துள்ளுகிறது - துள்ளி ஓடுகின்றது. காணுதனவெல்லாம் காட்டுவன கீரர் தம் சிறு சொற்கள். அன்பு என்பது ஓர் அரிய உணர்ச்சி - மிக்க நுட்ப உணர்ச்சி. கீரனரிடம் இது படும்பாடு பெரிது. எங்கெங்கு இதனை பொருத்திக் காட்டுகின்ருர். எங்கெங்கு இதனை இழுத்துச் செல்கின்ருர் ! இவ்வன்புடன் நம் உளம் பெறும் உணர்ச்சியும் பெரிது பெரிது !

அரசனை விட்டுவிட்டுத் தம்மிடம் சேரும்படி புலவர் நம்மை மயக்கிவிட்டார். அரசனிடம் மீண்டும் அணுகுவோம். அன்பின் பிழம்பாகிய அவ்வரசன் பக்கத்திலிருக்கவே, அவ்வரசனை நினைக்கவே, நம் மனம் பெரியதோர் ஆறுதலையடைகின்றது. அரசனுடனே இன்னும் சற்றுத் திரிவோம்.

அரசனைப்பற்றிய நிகழ்ச்சி ஒன்றும் காணப்படவில்லை. அரசனைக் குறித்துத் தாம் கூறிய

வற்றை நக்கீரர் முடிக்கப் புகுகின்றார். இம்முடிவிலும் கீரனார் வன்மை தெரிகின்றது. இம்முடிவை ஊன்றிப் பார்ப்போம் :

" விறல்தந்து
இன்னே முடிகதில் லம்ம!
* * * *
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."

எனப் புலவர் வெற்றி வேண்டுகின்றார். பாசறைத் தொழில்களோ வெற்றியைத் தருவன? எவ்வாறு தருவன? அப் பாசறைத் தொழில்கள்தாம் எவை? பாசறையில் நடந்தவை, நடந்ததாக நாம் மேலே கண்டவை. இத்தொழில்கள் எங்கும் பாசறையில் நிகழ்கின்ற தொழில்கள் அல்ல. பாசறையில் பலர் இயற்றும் தொழிலோடு இவை மாறுபட்ட தொழில்கள்; பலரொடு முரணிய பாசறைத் தொழில்கள்.*

---

*பாசறைத் தொழில், போர்த் தொழில் என்று பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர். போர்த் தொழிலை உணர்த்துவது நக்கீரர் கருத்தெனில், போர்த் தொழில் என்றே அவர் கூறியிருப்பர். அவ்வாறு கூறாது பாசறைத் தொழில் என்றே குறிப்பிடுகின்றார். அரசனோடு முரணியவர் எழுவர் என்பர் நச்சினார்க்கினியர். எழுவர் என்ற பொருளை உணர்த்தப் பலர் என்ற சொல்லைக் கீரர் பெய்தார் என்று கொள்ள இடமில்லை. இக்காரணங்கள்கொண்டு ஈண்டுக் கூறும் கருத்துக்கள் கொள்ளப்பட்டன.

நப்பூதனார் கூறிய அரசனது பாசறைத் தொழிலை முன்னரே கண்டோம்; நக்கீரர் கூறிய அரசன் பாசறைத் தொழிலையும் கண்டோம்; இவை தம்முள் மாறுபட்டவை. பொதுவாக அரசர்கள் பாசறையிலிருந்து, "எப்படி வெற்றி யுறுவது!" என்று கருதுவார்கள்; படைஞர்க்கு அவற்றைப் போதிப்பார்கள்; அவர்களை ஊக்கு வார்கள். இவ்வாறு ஒன்றும் கீரனார் அரசன் செய் திலன். போருக்கு ஏற்ற தொழில் அல்லால் போர்த்தொழில் ஒன்றும் அவன் புரியக் காண் கிலம். அவ்வரசன் இயற்றிய பாசறைத் தொழில் களை ஒரு சேர நோக்குவோம்: அவை யாவை? அரசன் விழுப்புண் கண்டது, வன்காளையைத் தானே தழுவியது, அரசன் படைகளிடம் அன்பு கொண்டது, மாத்தாள் பிடி, பாய்பரிக் கலிமா இவைகளிடம் அன்பு பூண்டது—நக்கீரர் இவ் வன்பின் தொழிலுக்கு வெற்றி வேண்டுகின்றார் போலும்! 'வேலன்று வெற்றி தருவது'; உடல் வலி யன்று வெற்றி தருவது; ஆள் தொகை யன்று வெற்றி தருவது; அன்பே வெற்றி தரும்; அழியா வெற்றி தரும். அன்பு தரு வெற்றியே வேண்டினர் போலும்! அரசன் அன்புக்கு வெற்றி அறிவுக்கு வெற்றி - அரசன் தோழமைக்கு வெற்றி - படைகள் அன்புக்கு வெற்றி - யானை குதிரை இவைகளின் அன்புக்கு வெற்றி - தவ் வென்று அசை இய குடைக்கும் வெற்றி. கீரனார் வெற்றி வேண்டிய வினயத்தைக் கருதுங்கள். வெற்றி வேண்டிய மட்டோடு நின்றாரோ நக்கீ ரர்? நின்றிலர். அதனோடு சேர்த்து இன்னும் ஒரு

சிறு வேண்டுகோளும் காணப்படுகின்றது. 'இன்னே முடிகதில் லம்ம!' என்றும் வேண்டுகிறார். விறல்தா என்று வேண்டுவது போதுவதன்றோ? ஏன் "இன்னே முடிக!" என்ற ஒரு வேண்டுகோளையும் சேர்க்கின்றார்? இது சிறு வேண்டுகோள் அன்று - வேண்டுகோளின் சிறு சேர்க்கையுமன்று. இதுவே முக்கிய வேண்டுகோள். ஏன் வெற்றி தருவதோடு 'இன்னே* முடிக!' - இனிதே முடிக - எனவும் வேண்டுகின்றார் என்பதை உட்புகுந்து காண்போம்:

வெற்றிகள் யாவும் இனிமை பயப்பனவோ? இனிது முடிவனவோ? வெற்றி எல்லாம் இனிது முடிவதில்லை என்பதோ நக்கீரர் கருத்து? பல வெற்றிகளைப் பற்றிப் படித்திருக்கின்றேன்; கேட்டிருக்கின்றேன்; சிலவற்றைக் கண்டிருக்கின்றேன். யான் அறிந்த வெற்றியெல்லாம் துன்பத்தில் முடிந்தனவே. இன்னே முடிந்த வெற்றி ஏதாவது ஒன்றேனும் உளதோ இலதோ யான் அறியேன். சரித்திர ஆராச்சியாளர் கூற வேண்டும்.

---

*இனிதே என்றும் பொருள்படும். திரு. வி. க. அவர்கள் 'இன்மை' என்ற சொல்லிற்கு 'இனிமை' என்று பொருள் கொண்டது கருதத்தக்கது, அவர்தம் திருக்குறள் உரை பக்கம் 719, 724 பார்க்க. இன்னா = இன் + ஆ. (இன் = இனிமை ஆ = அல்லாத) இனிமை அல்லாத. இன்னே = இன் + ஏ (இன் = இனிமை. ஏ = தேற்றம்) இனிமையே; இனிதே இன = இனிமை; "இன்னமர் இளவேனில்" கலி 34 7.: "இன்வளர் இளம்பிறை" சிந்தாமணி; 1008. இது பின்னர் விளக்கப்படும்.

**வென்றாரை வெல்லும்வல் வித்திடுதல் அல்லால்போர்**
**வென்றாரும் நின்றமைவ தில்.**

என்பர். இது வெற்றியின் இயல்பு. வேலும் வாளும் வெடியும் குண்டும் தரும் வெற்றியின் இயல்பு இதுவே.

29 ஆண்டுகளுக்கு முன் முதலாவது உலகப் போர் நடந்ததை யாவரும் அறிவர். அப்பெரும் போரில் மாபெரு வெற்றி பெற்றனர்; பகைவரை அடக்கினர்; ஒடுக்கினர். அப்போது வெற்றியே வேண்டினர் போலும்! "இன்னே முடிகதில் லம்ம!" என்று வேண்டிலர் போலும்! அவ் வெற்றியின் முடிவு என்ன? இரண்டாவது போருக்கு வித்திட்டது. நக்கீரர் கருத்தும் இதுவோ? "வெற்றி தந்து இன்னே முடிக!" என்றமையால், வெற்றி, போரின் முடிவன்று என்பதோ அவர் கருத்து? முடிவு யாருக்கு இன்மை தருவது? வெற்றி வேறு; முடிவு வேறு. அம்முடிவும் இனிய முடிவு! இவை அளவற்ற எண்ணங்களை எழுப்பி விடுகின்றன. அம்மம்ம! பொல்லாக் கிழவர் இக்கீரர். இனி இவரைப் பின் பற்றி முற்றுறக் காண அறிவு போதியதன்று. ஒருவாறு காணினும்அவற்றை எல்லாம் எடுத்துக் கூறும் வன்மையும் போதியதன்று. கீரனர் தமக்கு வணக்கம்; இவர் அறிவுக்கு வணக்கம்; இவர் புலமைக்கு வணக்கம். இவர் புலமையின் நுட்பம் எண்ணற்கரியது; சொல்லற்கரியது; வானை அளாவித் திகழ்கின்றது; அதற்கப்பாலும்

தாவுகின்றது ; பாதாளம் ஏழினுள்ளும் செல்கின்றது !

இவ்வரசன் மனநிலையைக் குறித்து ஒரு புலவர் கூறியதும் நாம் இங்குக் கருதத்தகும்.

" வாடை நலிய வடிக்கண்ணாள் தோள்நசைஇ
ஓடை மழகளிற்றான் உள்ளான்கொல் !"

என்றார் அப்புலவர்.

அரசன் தன் காதலியைப் பிரிந்திருக்கின்றான். 'தன் காதலியைக் குறித்த ஓர் எண்ணமும் அரசற்குத் தோன்றவில்லையே !' என்று புலவர் வியப்புறுகின்றார். காதலன்பு மறத்தற்கெளியதோ ? ஆயிரம் மைல்களுக்கு அப்பால் செல்லினும், அமரிடைப்புகினும், இவ்வன்பு மனத்தை விட்டகலுமோ ? சிறிது ஓய்வு ஏற்படுந்தோறும் இவ்வன்பு மனத்துள் தோன்றும். காதலியை விட்டகன்ற நாட்கள் சிலவேயாயினும், பலவெனத் தோற்றும். படர் மெலிந்திரங்கலும் சில காதலரியல்பு. " நம் காதலியை மீண்டும் எந்நாள் அடைவோம் !" என அவர் மனம் ஏங்கி நிற்கும். இவை மனிதரின் பொது இயற்கை.

இவ்வரசன் மனத்திற் காதற்குறிப்பு ஒன்றேனும் காணப்படவில்லை. ஏன் புலவர் பெருமான் அரசன் காதலை ஒரு சிறிதும் அரசன்பால் வெளியிட்டிலர் ? காதலன்பு மிகச் சிறந்ததொன்றே ; ஆயினும், இஃது ஒரு சிற்றில்; ஒரு சிறு முற்றம்; உள் முற்றம். இம் முற்றம் அன்பெனும் சிறு மகவு அதன் குழவிப் பருவத்தில் நகரப்போதியது; நடைப்பழகப் போதியது. நடைகற்ற பிறகு இச்

சிறு முற்றம் போதியதன்று; வெளி முற்றத்தில் சென்று அஃது ஓடி ஆடுகின்றது; தெருவில் சென்று திரிகிறது. அக்குழவி இளமைப் பருவம் கடந்து விடலை ஆகின்றது. வெளி முற்றமும் இப்போது போதியதன்று; தெருவும்போதியதன்று. அகம் புறமாகின்றது; ஊரெலாம் அலைகின்றது; உலகெலாம் சுற்றித் திரிகின்றது. காதலிடம் பழகிய மனம் ஒன்றும் தன்மையைப் பெறுகிறது; உடல் இரண்டெனினும் உயிர் ஒன்றுகுமாறு கற்கின்றது. இக்காதல் உயரியதொன்று; மனிதன் மன நிலையை மிகப் பண்புறச் செய்வது. ஆயினும் இக்காதல் பெரும்பாலும் பொறியின்பத்தை ஆதியாகக் கொண்டு தோன்றுகிறது; பொறியின்பத்தின் தொடர்பையும் கொள்கிறது. இவ்வின்ப விருப்பம் - இவ்வின்ப உணர்ச்சி நழுவ நழுவக் காதல் தூய்மை அடைகின்றது; துக்கமெல்லாம் அகல்கின்றன. இவ்வின்ப உணர்ச்சி நழுவிய பின், துகள் அகன்றபின், இக்காதல் தெய்வத்தன்மை பெறுகிறது; தூய அன்பாக மாறுகின்றது. இக்காதலைப் பெற்ற மனம் அன்பில் முதிர்ந்து அன்புருவாகின்றது. அன்புருவாகிய பின் இதன் ஆற்றல் பெரிது. இவ்வன்பினை ஓரிடத்தில் அடைத்து வைத்தல் அரிது. காதலென்னும் சிறுவரையில் இது கட்டுப்படுமோ? காதலென்னும் சிற்றில்லில் இஃது அடைக்கப்படுமோ? காதலி அல்லாத மற்ற மனிதர் இனத்தை எல்லாம் இவ்வன்பு தாவுகின்றது; மா, புள், மரம், செடி இவைகளிடமும் செல்கின்

றது; உலகெலாம் பரவுகின்றது; இவைகளி லெல்லாம் ஒருமையை உணர்கின்றது; இவற்றே டெல்லாம் ஒன்றுகின்றது; இறைவனேடொன்று கின்றது. காதல் கடந்த நிலையை நக்கீரர் இங்கு உணர்த்துகின்றார்.

காதலியின் தோள்மிசை அரசன் கையமைத் ததைப் புலவர் பெருமான் இங்குக் காட்ட வில்லை; தாள் நோக்க நிலம் நோக்கும் கண்ணு ளைத் தழுவியதைக் காட்டவில்லை; மலரன்ன கண்ணுளைத் தழுவியதைக் காட்டவில்லை; வன் கண் காளையைத் தழுவியதைக் காட்டுகின்றார். கணவனைப் பிரியும் காதலி "யானும் உடன் வருவேன்," என்று இங்குக் கூறக் காண்கிலம். "செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை," எனக் கூறக் காணேம். வாய் பேசாத விலங்கினங்கள் அரச னைப் பின்பற்றிச் செல்கின்றன. பின்பற்றிச் செல்வள் தன் காதலி எனின், "உடன் வருதல் நன்றன்று," என அரசன் மறுப்பன்; "எண்ண ரும்பாசறைப் பெண்ணொடு புணரார்," என்னும் மரபு கூறி மறுப்பன். இவ்விலங்கினத்தை மறுக்க வெருட்டி ஓட்ட, மரபுமில்லை; அரசனுக்கு மனமு மில்லை. தன் காதலி உடன்வர அரசன் இசைந் தான் எனில், அக்காதலியின் உள்ளம் எவ்வாறு மகிழ்வுறும்? அவள் அரசனைத் தழுவுவாள். அவள் மகிழ்வுக்கும் அளவுண்டாமோ? இவ்விலங்குக ளைப் பின்பற்றவிட்டதன் பயன் என்ன? இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்த்தன. நன்று;

நன்று அரசன் நிலை! இன்பக் காதலி தழுவிய உடலை இருஞ்சேற்றுத் தூளிகள் தழுவின. இந்நிலை வியக்கத் தக்க தொன்றே! புலவர் வியந்ததும் நன்றே! இவ்வரிய நிலையை அடைந்தபின் அரசன் காதலியின் தோள் நசைஇ உள்ளானே என்னும் கேள்வி தோன்றின், அதற்கு விடை தோன்றவில்லை. இவ்வினா, 'இறைவனை அடைந்த அன்பு மீண்டும் சிற்றின்பம் விரும்புமோ?' என்னும் வினாவைப் போலும். இதற்கு விடை **சங்கரர்** கூற வேண்டும்; **காண்டு*** கூற வேண்டும்; **ஈகல்**† கூற வேண்டும்.

வாடைக் காற்று எங்கோ தொடங்கிற்று. அது நம்மை எங்கெங்கோ தள்ளிச் செல்கிறது. நாம் இப்போது எங்கிருக்கிறோம்? மேலே கண்டன வெல்லாம் கற்பனையா? கற்பனையன்று. நாம் கண்ட பகுதியில் ஓர் உவமையும் காணோம். கற்பனைக்கு இடமுமில்லை. "மேலே கூறியவற்றை எல்லாம் நினைத்து நக்கீரர் இப்பாட்டை எழுதினரா! இப்பொருளெல்லாம் தம் சிறு வரிகள், சிறு சொற்கள் உணர்த்துவன என்று கருதினரா!" என்னும் ஐயம் தோன்றுகிறது. இதற்கு விடை பகரத் தக்கது ஒன்றுளது. அது மாலை வெண்குடை; இக்குடை மழைக் குடையன்று; மாலை வெண்குடை; "முற்று நீர் வையம் முழுதும் நிழற்றும் கொற்ற வெண்குடை." செங்கோல், கொடி, குடை இவை அரசியல் உறுப்புக்களில்

* Kant † Hegel

சிறந்தன. இக்காலத்தும் பல நாட்டு அரசர்கள் செங்கோல் கொடி இவைகளைக் கையாளுகின்றார்கள்.

பண்டைக் காலத்தே வெண்குடையையும் இவற்றோடு சேர்த்திருந்தனர். செங்கோல், நீதி வழுவாது முறை செய்தற் கறிகுறி. கொடி, வெற்றிக் கறிகுறி. குடை, "நடை மிகுத்து ஏத்திய குடை"* உலகத்து நடையை மிகுத்து, உலக ஒழுக்கத்தை இறப்ப உயர்த்துவதற்கு அறிகுறி. இவை பிற்காலத்தே அரசர்களுக்கு வெற்றணி ஆயின போலும்! கொடுங்கோல் அரசரும் செங்கோல் தாங்கினர்; வெற்றியே அறியாதாரும் வெற்றிக் கொடி பிடித்தார். உலகத்தை இறப்ப இறக்கியவரும் குடையை ஏத்திப் பிடித்தனர். உலக நடையை உயர்த்த வேண்டுவது, உலக ஒழுக்கத்தைத் திருத்த வேண்டுவது, அரசன் கடமை. "நல் நடை நல்கல் வேந்தற்குக் கடனே."† வேறு எவரால் இஃது இயன்றது? அரசன்தான் இதனை எவ்வாறு செய்தல் கூடும்? அரசன் நீதியாய் ஆளலாம்; வெற்றியே பெறலாம். இவற்றால் உலகம் திருந்துமோ? நீதியாய் ஆளுவார், முறைப்படி தண்டிப்பார், அதிகம் ஆக ஆக, குற்றமும் அதிகமாகின்றது. இஃது உலகியல்.

* தொல். பொருள். புறத்திணை இயல், 91. 'நடை மிகுத் தேத்திய குடைநிழல் மரபு,' இதன் உரையையும் காண்க. † புறநானூறு, 312.

இவ்வுண்மையை இன்றும் காண்கின்றேம். நீதி மன்றங்கள் ஆண்டுதோறும் அதிகப்படுகின்றன. வழக்கறிஞர் தொகை ஒன்று பலவாகப் பெருகுகின்றது. வழக்குகள் குறைந்தனவோ? இல்லை. வெற்றியே பெற்ற நாடுகள், வெற்றிக் கொடியை உயர்த்திய நாடுகள், ஒழுக்கம் திருந்தினவோ? இல்லை. நண்பு பூண்ட அரசியல் கூட்டங்கள் (Allied Nations) உலகத்தைத் திருத்த இன்றும் எப்பாடு படுகின்றன! உலக நடையைத் திருத்துதல் எளியதொன்றன்றே! அரசன் எவ்வாறு உலக நடையைத் திருத்த முடியும்? இதற்கோர் எளிய முறையுளது; தான் திருந்தினல் பிறர் திருந்துவர். அரசன் திருந்தினல் உலகு திருந்தும். நாட்டின் தலைவர் அல்லது தலைமைக் கூட்டங்கள் திருந்தினல், நாடு திருந்தும். நடை மிகுத்த குடை அரசனைத் தவிர்த்த வையகத்துக்கு அன்று. வையகத்துள் அரசனும் அடங்குவன். அக்குடை நிழலில் வதிபவர்கள் குடிகள் மாத்திரம் அல்லர். அந்நிழலில் அரசன் முதலில் வதிகின்றான். குடிகள் ஒழுக்கம் உயருமுன் அரசன் ஒழுக்கம் உயர வேண்டும். அரசன் ஒழுக்கம் உயரக் குடிகள் ஒழுக்கம் தானே திருந்தும். இப்பாட்டில் படைகள் ஒழுக்கம் திருந்துமுன் அரசன் ஒழுக்கம் திருந்தியதைக் கண்டோம்.

அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி. இவற்றை எல்லாம் கருதியே நக்கீரர் இப்பாட்டின் இறுதியில் குடையைக் கூறுகின்றார் போலும்! இங்கும் இப்பாட்டில் மற்றெவ்விடத்தும் செங்கோலைக்

கூறவில்லை; திகிரியைக் கூறவில்லை; முரசைக் கூறவில்லை; கொடியைக் கூறவில்லை. இக் குடையை ஏன் கூற வேண்டும்? இக்குடையின் றியும் இப்பாட்டு இனிதே முடிவு பெறும்; இக் குடை இல்லை எனில் குறை ஏதும் கூறுவார் உண்டோ? இம்மாலை வெண்குடையை நக்கீரர் இங்குப் பொருத்திக் காட்டியது, "இப்பாட்டு வெறும்பாட்டன்று. இப்பாட்டில் உலகிற்குச் சிறந்ததொரு நடையை உணர்த்துகின்றேன். அதற்கு அறிகுறி இக்குடை - நடைமிகுத்து ஏத்திய குடை. ஆழ்ந்து நோக்குக!" என்று அறிவிப்பது போலும்.

இங்கு உணர்த்திய உலகஒழுக்கங்கள் யாவை? உயர்ந்த நடைதான் என்ன? தொகுத்துக் காண்போம்: "தோழமை கொண்மின்; வேற்றுமை அகற்றுமின்; உயர்வு தாழ்வில்லை. ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்மின்; அவற்றிலெல்லாம் ஒருமையைக் காண்மின்; அவற்றோடெல்லாம் இரண்டறக் கலமின்; ஒன்றே ஆகுமின். அவற்றிலெல்லாம் இருப்பவன் இறை. இவையே சிறந்த ஒழுக்கங்கள். இவையே சிறந்த உலக நடை. இவற்றைக் கைக்கொண்மின்; விடேன்மின். இவற்றைக் கைக்கொள்ளின், ஆழ்வன தீயவை; அமைவது அமைதி," என அரசன் சொல்லாமற் சொல்கின்றான். அரசன் நடை இவற்றைக் காட்டுகின்றது. அரசனும் அவன் கூட்டத்தாரும் அவ்வாறே ஒழுகிக்காட்டுகின்றனர்.

குரு நிலத்தில் பாரதப் போர் நிகழ்ந்ததை அறிவோம். அப்போது போர்முனை முன் கண்ண பிரானர் உலகிற்கு உயர்ந்த ஒழுக்கத்தை எடுத்தோதினர்; அதைக் கடவுட் பாட்டென (பகவத் கீதை) எடுத்தோதினர்; பற்றற்ற வினையை விளக்கினர்; உயிர் இறைவனேடொன்ருகுமாறெல்லாம் உணர்த்தினர். தமிழ் நிலத்தில் பெரும் போர் நிகழ்கின்றது; முடிவு பெறவில்லை. முன்னும் போர் பின்னும் போர் அதிர்ந்து நிற்கின்றது. இப்போருக்கிடையில் அன்பு நெறியை நக்கீரர் கூறுகின்ருர். உயிர் உயிர்களோடெல்லாம் ஒன்ருகுமாறு கூறுகின்ருர். இவர் கூறியது வாடைப் பாட்டு. போர் முனையே! இவ்வாறு உலக ஒழுக்கம் கூறத் தக்க இடம்போலும்! போர்க்களந் தான் உலகிற்குத் தக்க நீதியை உணர்த்தும் ஆற்றலைப் பெற்றுள்ளது போலும்! இன்று நடக்கும் உலகப் பெரும்போரும் போர்க்களமும் உலகிற்கு நற்புத்தி புகட்டுவன ஆமோ?

ஆடவர் இயல்பினைக் காணுமாறு தொடங்கினேம். ஆடவரில்அரசன் ஒருவனையே இதுகாறும் கண்டோம். அரசனேடு நாம் நெடுநேரம் திரிந்தோம். நள்ளென் யாமத்தில் தொடங்கினேம். அன்பின் ஞாயிறும் தோன்றியது. உலகத்தைச் சூழும் துன்பெனும் இருள் அகலுமாற்றைக் கண்டோம். நாம் செல்ல வேண்டிய தூரமோ, அதிகம்; செல்லும் வழியும் செறிந்த வழி. இனி விரைந்து செல்லுதல்தகும்.

ஆடவர் பல வகையினர். அவ்வகைகளுள் சிறந்தவர் சிலர்; சிறப்பிலார் பலர். ஆடவருட் சிறந்த அரசனை மேலே கண்டோம்; சிறப்பிலார் சிலரையும் இப்பாட்டிற் காண்கின்றோம்; கொடுங்கோல் கோவலரைக் காண்கின்றோம். முடலை யாக்கை முழு வலி மாக்களைக் காண்கின்றோம். இவர்கள் தன்மையை ஆராய்வோமாக:

### கோவலர்

கோவலர்களை அவர்களது மெய்கொள் பெரும்பனி நலியச் செய்கின்றது. அவர்கள் கையில் கொள்ளி நெருப்பு உள்ளது. அவர்கள் குளிரால் நடுங்குகிறார்கள்; பல்லோடு பல்மோதிப் பறை கொட்டுகின்றது. அந்தோ! கொடுமை! அவர்களைப் போல இப்பாட்டின்கண் எவரும் குளிரால் வருந்தவில்லை. குளிரால் வருந்துபவர்கள் மற்றோரிடத்தில் 'பகுவாய்த் தடவிற் செந்நெருப்பார'க் காண்கின்றோம். அக்கோவலர் பகுவாய்த் தடவினைக் கொள்ளப் பொருளற்றவர் போலும்! அவர்கள் புலம்பெயர் மாக்கள். அவர்களுக்கு நிலைத்த வீடில்லை; பகுவாய்த் தடவுமில்லை. வீடில்லை எனினும், தடவில்லை எனினும், போர்வை உண்டெனில், குளிரைத் தடுக்க முடியும்; அவர்களுக்குப் போர்வையுமில்லை; தக்க ஆடையும் இல்லைபோலும்! 'இருகோட்டறுவையை' அவர்கள்பால் கண்டிலோம். "புடைவீழ் அம் துகி"லைக் காண்கிலோம். அந்தோ! ஏழை மக்கள் என்

செய்வார்கள்! தக்க உடையுமில்லை. உடலெல்லாம் குளிர் கொள்கின்றது. நடுங்குகிறார்கள். அவர்கள் கையிலுள்ள கொள்ளி ஒன்றே அவர்கள் குளிரைப் போக்கத் தக்கது.

அவ்வெளிய மக்கள் துன்புறுகிற நிலையில் அவர்களுக்குக் 'கண்ணி' சூட்டி நக்கீரர் அழகு செய்து காட்டுகின்றனர். அரசனை மேலே கண்டோம். அவன் கண்ணி சூடவில்லை; தார் அணியவில்லை. அக்கோவலர்பால் விளங்குவது, "கோடல் நீடிதழ்க் கண்ணி."* தமிழ்நாட்டில் மலிந்து கிடந்தன தழைகளும் பூக்களும். இவைகளைக் கொள்ளக் கொள்ளும் எண்ணமே தேவை. வேறு எவையும் வேண்டா. அழகு செய்துகொள்ளக் கருதிய ஏழை மக்கள், பூ, தழை ஆகிய இவற்றையல்லால் வேறு எவற்றைக் கொள்ளத் தகும்!

அவர்கள் அணிந்த கண்ணி வாடை நாளுக்கு மிக ஏற்புடையது! அது காந்தளின் நீண்ட இதழ்களாற் கட்டியது; பெய்கின்ற மழை நீரைத் தன்னிடத்தே தேக்கத் தக்கது; குளிரை அதிகமாக்கத் தக்கது. அவர் தம் இன நிரையை விட்டாலும் விடுவர்; அக்கண்ணியை விடார் போலும்! என்னே முரண்! அவர் முரண்மிகு சிறப்பினர் போலும்! தலையில் குளிரை அதிகமாக்கும் கண்ணி, கையில் குளிரைத் தணிக்கும் கொள்ளி, என்னே அவர்கள் அறிவு!

* நெடுநல். 5, 6.

அவர்தம் செயலை இன்னும் சற்று ஆழ்ந்து கருதுவோம் : அவர்கள் "ஆர்கலி முனைஇய"* கோவலர். வெள்ளம், அவ்வெளிய மக்கள் இருப்பிடம் தேடிச் செல்கின்றது. வெள்ளத்திடத்தில் அவர்களுக்கு முனிவு,† கோபம், வெறுப்பு. வெள்ளம் அவர்கள் இடந்தேடிச் சென்றதோ ? அவர்கள் வெள்ளம் செல்லும் இடந்தேடிச் சென்றார்களோ ? காண்போம் : வெள்ளம் செல்வது பள்ளத்தில் ; "நிலம் நெளிமருங்கில்." இச்செயல் இயற்கையே அமைந்தது ; ஒருவர் வெள்ளத்திற்குக் கற்பித்ததன்று. வெள்ளம் செல்லத்தக்க இடம் எது, செல்லா இடம் எது என அறிந்து வெள்ளம் அணுகா இடத்தில் தங்கியிருத்தல் மக்கள் இயல்பு. இதற்கு முற்றிலும் மாருக, பள்ளமான இடத்தில் - வெள்ளம் செல்லத்தக்க இடத்தில் - அக்கோவலர் தங்கினர் போலும் ! அவர்தம் செயலே அவருக்குத் துன்பம் விளைவித்தது. வெள்ளத்தை நோவதேன் ? அதை முனிவதால் என்ன பயன் ? வெறுப்பதால் என்ன பயன் ? வெள்ளம் அவர்களைத் தேடிச் செல்லும் அறிவுடையதோ ? என்னே அவர்தம் பேதைமை ! - வெள்ளை உள்ளம் ! - கள்ளமில் மனம் !

அவர் வெள்ளத்தைத் தடுக்க முயல்பவர் அல்லர். அதை வேறு பக்கம் திருப்பிவிட முயல்பவரும் அல்லர். நனந்தலை உலகத்தே இடத்திற்கோ பஞ்சம் ! "வெள்ளமே, யாம் தங்கிய இடத்தைக்

* நெடுநல். 3. † தொல். உரி. 381.

கவர்ந்தாய் ; வாழ்ந்து போதிநீ !" என வேறு புலம் பெயர்கின்றனர். அவர்கள் புலம் பெயர் மாக்கள் ; இடப்பற்று அற்றவர்கள். அவர்களுக்கு 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்,' வெள்ளம் ஒன்றே அவர்கள் பகைவன். துன்பத்துடன் எதிர்த்துப் போர் செய்பவர் அவர் அல்லர் ; துன்ப மெல்லாம் பொறுப்பவர். துன்பத்திற்கு ஒதுங்கிச் செல்பவர். இத்தகைய மாந்தர் நக்கீரர் காலத்தும் இருந்தனர் ; இக்காலத்தும் உள்ளனர் ; இனியும் உள்ளவராவர்.

## முழு வலி மாக்கள்

கோவலரை விட்டு அப்பாற்சென்றால்,முடலை யாக்கை முழு வலி மாக்களைக்* காண்கின்றோம். அவர்கள் கோவலர்களுக்கு முற்றிலும் மாறான வர்கள் ; வலியுற்றவர்கள். அவர்கள் உடல் வலி மட்டும் பெற்றவர்கள் அல்லர் ; முழுவலியும் பெற்ற மாக்கள் ; அறிவின் வலிவும் பொருளின் வலிவும் பெற்றவர்கள். அவர்களைக் காண்பது "மாடம் ஓங்கிய மல்லல் மூதூ"ரில்,† "மல்லல் ஆவண"த்‡ தருகே. கோவலர் போன்று அவர் வீடற்றவர் அல்லர்; புலம்பெயர் மாக்கள் அல்லர் ; தமக்கென வீடுடையவர் ; ஓங்கு நிலை மாடம் உடையவர் ; தக்க செல்வர்போலத் தமக்கென ஓர் ஊர் அமைத்துள்ளவர் ; அவ்வூரை மல்லல் மூதூ ராக்கியவர் ; பொருள் வலி உடையவர் ; வெள்

*நெடுநல். 32. † ஷை 29. ‡ ஷை 45.

ளத்திற்கஞ்சி இடம்விட்டு ஓடுபவர் அல்லர். அவர் தம் ஊர் ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு* உடையது; புதுப்பெயல் பெய்து வெள்ளம் வரினும், அவ்வெள்ளத்தை எல்லாம் அத்தெரு கொள்ளத்தக்கது; கொண்டு அப்பாற் கடத்தத் தக்கது. வெள்ளம் வரின் அவர்தம் ஊரை என் செய்யும்? அவர்தம் உயர்நிலை மாடங்கள் என் செய்யும்? வெள்ளத்தின் செயல் ஒன்றும் அவர்கள்பால் செல்லாது. வெள்ளம் அவர்களுக்கு அஞ்சும்போலும்! அவர்தம் ஊரை விலகிச் செல்லும் போலும்!

கோவலரை வருத்திய வாடைக் குளிர்தான் அவர்களை என் செய்யும்? அவர்கள் "திணிதோள் முடலை யாக்கை" யர்கள். நன்றாக உண்டு பருத்தவர்கள் போலும்! குளிரைத் தாங்க அவர்கள் உடல் வலியே போதியது போலும்! அதனோடு செயற்கை வலிவும் சேர்ந்துள்ளது. "வண்டு மூசு தேற"லை† உண்டவர்கள். தேறல் சிறிதுட் செல்லின் தெறித்துஓடும்குளிர். இது குளிரைப் போக்கும் நாகரிக முறை; இன்றும் குளிர் நாட்டுள்ளவர் கையாளுவது; அறிவியல் மாக்கள் போற்றுவது. பொருளின் வலிவும் அறிவின் வலிவும் பெற்ற முழுவலி மாக்கள் நாம் இப்பாட்டில் கண்டவர்கள். அவர்கள் தேறலைத் தேடியுண்டும் தேர்ந்துண்டும் குளிர் தெறித்தோடத் திரிகின்றார்கள்; மகிழ் சிறந்து திரிகின்றார்கள்.

* நெடுநல். 30 † நெடுநல். 34

நாம் முன்பு கண்ட அரசனை இங்கு நினைவு கூர்வோம். அவன் முகனமர்ந்து திரிகின்றான். அவர்கள் மகிழ் சிறந்து திரிகின்றார்கள். அந்தோ! அரசன் அறிவிலியோ? சிறு கள் சிறிதே உண்டு சென்றால், அஃது எத்துணை நன்மை பயக்கும்! அரசன் முகம் மகிழ்சிறந்து விளங்கும்; மகிழ்ச்சி பொங்கும். அரசனும் நகைப்பன்; படைகளும் நகைக்கும். நகைக் கூத்தினை நாம் காணலாம். அவ்வரசனுக்குத் தேறல் பெறும் திறனில்லையோ? பொருள் இல்லையோ? இவை நிரம்ப உள. மாங்குடி மருதனார், மாறன் ஒருவனுக்கு அளித்த "இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய மணங்கமழ் தேற"லை* வேண்டினும் பெறுவன். நக்கீரரே, மற்றோர் அரசனுக்கு, 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறலை' † அளித்துள்ளார். ஈண்டுள்ள அரசன் அதனைக் கொள்ள விடார் போலும்!

ஈண்டு அரசன் "மகிழ்ந்தினிது உறை"யான்; "மகிழ் சிறந்து" விளங்கான்; இன்புற்று நகையான்; முகனமர்ந்து திரிவான். நக்கீரர் அமைதியுற்ற முகத்தை அரசனுக்களித்ததன் ஆழ்ந்த கருத்தைக் காண்மின், புலவர் பெருமான் மக்கள் குணங்களைக் காட்டும் ஆழ்ந்த குறிப்பினைக் காண்மின்.

## மூவகை ஆடவர்

மூவகை ஆடவர்களை நக்கீரர் இப்பாவின் கண் காட்டுகின்றார்; அரசனும் அவன் படைஞரும்

---

* மதுரைக்காஞ்சி, 779 - 80. † புறம். 56

ஒரு வகையினர்; தேறல் மாந்தித் திரிதரும் முடலையாக்கை முழுவலி மாக்கள் ஒருவகையினர்; ஆர்கலி முனை இய புலம் பெயர் மாக்கள் ஒரு வகையினர். வேறு மக்களை நக்கிரர் கண்டிலரோ? ஏன் இம் மூவகையினரையே இப்பாட்டில் கூற வேண்டும்? இவை நாம் கருதத் தக்கவை.

புலவர் இம்மூவகை மக்களைக் கூறும் முறையால் மக்களின் அறிவின் வளர்ச்சியை உணர்த்துகின்றார்; பொருள் வளர்ச்சியின் தன்மையைக் குறிக்கிறார். மக்கள் தொகுதியின் தோற்றம், வளர்ச்சி, அழிவு இவற்றை எல்லாம் உணர்த்துகின்றார். இவற்றை உணர்த்த இம்மூவகை மக்கள் போதியவர்கள் போலும்!

வெள்ளை உள்ளமும் கள்ளமில் மனமும் மலிந்த வாழ்க்கை முதல் முதல் தோன்றுங்கால் தோன்றும் இயல்புகள். தொடக்கத்தில் மக்கள் பொருட்பற்று அற்றவர்கள்; இடப்பற்று அற்றவர்கள்; எப்பற்றும் அற்றவர்கள்; ஆதாமும் ஈவ் அம்மையும் போன்றவர்கள். இயற்கையிற் கண்டன கண்டவற்றை உண்டனர்; உடுக்க உடையும் வேண்டிலர்; இருக்க வீடும் வேண்டிலர். மக்கள் தொகுதி வளர வளர, அறிவு முதிர முதிர, உடல் பற்றுக்கள், பொருள் பற்றுக்கள், இடப் பற்றுக்கள், ஏனைய பற்றுக்கள் படிப்படியே வளர்கின்றன. இடப்பற்றின்றி ஆனிரை காத்துப் புலம்பெயர் மாக்களையே தொகுதி வாழ்வின் தொடக்கத்தினர் என்பர். இது வரலாற்றறிஞர் கண்ட முடிபு. இது தமிழ் நாட்டிற்கே உரிய

தொன்றன்று; உலகத்தின் பொது வியல்பு-எல்லா மக்கள் தொகுதியின் தொடக்கமும் இதுவே.

புலம் பெயர் மாக்கள் இடம்பெறு மாக்களாக - நிலம்பெறு மாக்களாக - மாறுகின்றார்கள்; ஓர் ஊரில் தங்குகின்றார்கள். நிலங்கள் பண்படுகின்றன. "அங்கண் அகல் வயல்"கள்* தோன்றுகின்றன. "வண்டோட்டு நெல்"† வளந்தருகின்றது.

இவர்தம் ஊர் "மல்லல் மூதூர்"‡ ஆகின்றது. பண்டமாற்றுத் தோன்றுகின்றது; வாணிபம் சிறக்கின்றது. "மல்லல் ஆவணம்"§ தோன்றுகின்றது. உயர்நிலை மாடங்கள் ஓங்குகின்றன. கடியுடைவியனகர்¶ எழுகின்றது. அரியவும் பெரியவும் நெரியச் சேர்கின்றன.

அளந்தறியாப் பல பண்டம், வரம்பறியா வளந்தரு பொருள்கள் சேர்கின்றன. உண்பன உண்டு, பூசுவன பூசி, பூண்பன பூண்டு இன்பம் நுகர்கின்றனர். பல்கலைகள் - இசைக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை - நிறைகின்றன. ஆடல்கள் கொள்வார், பாடல்கள் கொள்வார், நூலறி புலவர் நிறைகின்றனர்.

அரசன் வளமுறுகின்றான். அவன் வளம் சிறக்கின்றது. அரசனுக்கு "ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்"% "வரிமலைச் சிலம்பிற் சிலம்புங்கோவில்"/ ஏற்படுகின்றது.

---

* நெடுநல். 22. † ஷை 22. ‡ ஷை 29. § ஷை 44. ¶ ஷை 49. % ஷை 107. / ஷை 100.

இவ்வளர்ச்சியும் பொருளும் என்றும் நிலைப்பனவோ? வளர்வன எல்லாம் அழிவன. இவ்வளர்ச்சியின் முடிவும் அழிவே. மாந்தர் தம்முள் ஒத்து வாழ்பவர் அல்லர். அரசரும் தம்முள் ஒத்து வாழ்தல் இலர். போர் மூள்கின்றது.

போரின் கொடுமையைக் கூறவும் வேண்டுமோ? அது தரும் அழிவிற்கு அளவும் உண்டோ? போரால் மாள்பவர்கள் மக்கள் மட்டுமோ! சீர், சிறப்பு, செல்வம் எல்லாம் மாள்கின்றன.

மக்கள் தொகுதிகள் வளர ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சென்றன. இவ்வளர்ச்சி ஒருகணத்தில் போரிடை அழிகின்றது. பலப்பல மக்கள் போற்றி வளர்த்தது பொருள். இப்பொருளும் அழிவில் முடிகின்றது. பல்லாண்டு பல்லாண்டு வளர்ந்தது அரும்பெறல் அறிவு. இதன் பயனும் அழிவுதானே? இவ்வழிவைத் தாண்ட மனிதனுக்கு ஆற்றல் இல்லையோ? அறிவில்லையோ? ஆற்றலும் உளது; அறிவும் உளது. மனிதன் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. போர் அழிவில் முடியாமல், 'இன்னே முடிக' என நக்கீரர் வேண்டுகின்றார். இஃதெவ்வாறு இனிதே முடியும்? தோழமை கொண்டால் இனிது முடியும்; வேற்றுமை அகன்றால் இனிது முடியும்; ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தால் இனிது முடியும். மனிதன் பல்லாண்டு பல்லாண்டுகளாக உடலை வளர்த்தான்; அறிவை வளர்த்தான்; அன்பை வளர்க்கவில்லை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன் நக்கீரர் கண்ட உண்மைகள் இவை; இன்றும்

இவை உண்மைகளாகவே உள. உண்மைக்கு ஒரு நாளும் இல்லை அழிவு.

நக்கீரர் கண்ட துன்ப நிலையே உலகில் இன்றும் நிலவுகின்றது; அவர் கண்ட நிலையிலேயே உலகம் இன்றும் நிற்கின்றது; ஒரு சிறிதும் மாற்றமில்லை. உலக நிலை சற்றும் உயர்ந்திலது. உயர்வு, தாழ்வு, வேற்றுமை, பிணக்கு, வழக்கு இவை இன்றும் உலகில் குடிகொண்டுள்ளன; ஒன்று பலவாகப் பெருகுகின்றன. இன்னும் போர் ஒழிந்தபாடில்லை. 'இன்னே முடிக!' என நக்கீரர் வேண்டினர். அவர் வேண்டிய முடிவு இன்றாகவில்லை போலும்! போர் பெரும் போராய், பெரும்போர் கடும் போராய் வளர்ந்து வந்துள்ளது. ஊர்ப் போர் நாட்டுப்போரானது. உள் நாட்டுப்போர் வெளி நாட்டுப் போராயிற்று. நாட்டுப் போர் எல்லாம், உலகப் போராய் வளர்ந்தன. என்னே அறிவின் அறியாமை! அறிவு வளர்ந்தது; அளவற்று வளர்ந்தது; அன்போ வளர்ந்திலது. அறிவு வளரவளர அன்பு தேய்ந்தது போலும்! நக்கீரர் வளர்த்த அன்பின் முளை காலத்தின் காலிடைப் பட்டுக் காணாதழிந்ததோ? அன்பிற்கும் உண்டோ அழிவு? இல்லை இல்லை. அன்பின் வித்து அழியா வித்து. அது முளைத்து முதிரப் பன்னூறு ஆண்டுகள் செல்லும். அதன் ஒரு முளை அழியினும், பல்வேறு முளைகள் தோன்றும். அன்று தமிழ் நாட்டில் தோன்றிய முளை, இன்று வடநாட்டில் தோன்றியுள்ளது. இதுவும் வளருமோ, வளராது அழியுமோ! இறைவன் செயல் இருந்தவாறு என்னே! யாரே அறிவார்!

III

## மக்கள் தொகுதி

### மகளிர்

மகளிர்தம் மாண்பு கொண்டது மக்கள் தொகுதி. மகளிர் உயர, மக்கள் தொகுதி உயரும். மகளிரின் மன நலன் திருந்த, மக்கள் மனநலம் திருந்தும். இவ்வுண்மைகளை நன்கறிந்தவர் நக்கீரர். இப்பாட்டின்கண் இம்மன நிலைக்கே உயர்வு தந்துள்ளார். இங்குப் பெண் எனப்படுவது பேதைமைத்தன்று; பெருநலம் பூண்டது. ஆடவரில் மூவகையினரை மேலே கண்டோம். மகளிர்தம்மிலும் மூவகையினர் காணப்படுகின்றனர். இம்மூவகை மகளிரும் ஆடவர் போலவே வெவ்வேறு குணமுடையவர்; வெவ்வேறு நடை உடையவர்; வெவ்வேறு மன நலமுடையவர்.

### வழிபாடியற்றும் மகளிர்

மகளிருள் முதலில் நாம் காண்பவர் நெல்லும் மலரும் தூவிக் கைதொழுபவர். பகற்பொழுது அகன்றது. இரவு தொடங்குகின்றது. இருண்டுள்ளது வானம். இரவென்றும் பகலென்றும் தெரிதற்கில்லை. பூந்தட்டிலிட்ட பித்திகை அரும்புகள் அவிழ்கின்றன. இவ்வரும்புகள் இரவில் தொடக்கத்தே மலர்வன; மலருங்கால் தெள்ளிய சிறு மணம் வீசுவன; மலர்ந்த பின் பெரு மணம் வீசுவன. அச்சிறு நறுமணங் கொண்டு இரவு தொடங்

கிற்றென அறிகின்றனர். இரவு தொடங்குமுன் இருள் தொடங்கிற்று ; ஆதலின், இவ்வரும்புகள் அவிழ்தலைக் கண்ணால் காணுதற்கில்லை. அவிழ் பதங் கமழ்வதைக் கொண்டு பகற்பொழுது சென்றதை உணர்கின்றனர் ; வீடுதோறும் விளக்கேற்றுகின்றனர். நெல்லும் மலரும் தூவி, மெத்தென் சாயல் மடவரல் மகளிர் மாலைவழிபாடு இயற்றுகின்றனர். இயற்கைப் பேரொளி மறையினும், செயற்கைச் சிற்றொளி இல்லந்தோறும் விளங்குகின்றது.

விளக்கின் ஒளி புறவிருளை நீக்குகின்றது. வழிபாட்டின் ஒளி அகவிருளைப்போக்குகின்றது. இம்மகளிர் வழிபாட்டின் வழியே அகவிருள் நீங்கியவர் போலும் ! வழிவழி வந்த வழிபாட்டில் ஆழ்ந்தவர் போலும் ! மற்றவர்களை வருத்திய குளிர் இவர்களை வருத்தவில்லை. இவர்களைக் காணுமுன் கோவலரைக் கண்டோம். அவர் குளிரால் பெருந்துயர் உற்றனர். இம்மகளிர்க்குப் பின்பும் சில மகளிரைக் காண்கின்றோம். அவர்களையும் குளிர் வருத்துகிறது. அவர்கள் வதியும் உயர்நிலை மாடங்களின் கதவுகள் அடைக்கப்பட்டுள்ளன. யாவரும் பகுவாய்த் தடவின் செந்நெருப்பாரக் காண்கின்றோம். வழிபாடியற்றும் இம்மகளிரோ, கதவடைத்துக்கொண்டு நெருப்பின் அருகே அமர்தல் இலர். வழிபாட்டினிடத்தில் இவர்களைக் காண்கின்றோம். வாடையின் குளிர், விளக்கின் திரியையும் ஈரமாக்குகின்றது ; இவர்களை ஈரமாக்கவில்லை. வழிபாட்டில் ஈடுபட்டவர்களைக் குளிர் வருத்தாது போலும் ! ஈரம் வருத்

தாதுபோலும்! மனம் வழிபாட்டில் செல்கின்றது; அதில் ஈடுபடுகின்றது; ஒன்றுபடுகின்றது. வழிபாடு, அதற்கியற்றும் பணி இவை தவிர வேறு எதையும் அப்போது மனம் நினைப்பதில்லை. வழிபாடியற்றும் மகளிர்க்குக் குளிர்காலம் என்னும் நினைப்பே தோன்றுதுபோலும்! முழுவலிமாக்கள் உடலுட் கொண்ட தேறல் அவர்கள் குளிரைப் போக்கிற்று. இம்மகளிர் உள்ளத்துட்கொண்ட வழிபாடு இவர்தம் குளிரைப் போக்கிற்று. தேறலோ, உட்கொண்டாரின் மனத்தை மயக்கி, அறிவை மழுங்கச்செய்து, குளிரைப் போக்குவது. வழிபாடு, மனத்தைப் பண்படுத்தி, அறிவைக் கொளுத்தி, குளிரைப் போக்குவது. தேறல் உடலுக்குத் தரும் வலிமையை வழிபாடு உள்ளத்திற்குத் தருகின்றது; உயிருக்குத் தருகின்றது. இதனை உணர்த்தவே போலும் தேறல் உண்ட ஆடவரை அடுத்து வழிபாடுண்ட மகளிரைப் புலவர் காட்டுகின்றார்!

வழிபாடு இன்று எந்நிலையில் நிற்கின்றது? வழிபாடு வந்த வழியைத் தேடி நிற்கின்றது; நாட்டை விட்டகல வழிதேடி நிற்கின்றது. ஆயினும், சிலரிடத்தேனும் வழிபாடியற்றும் வழக்கம் தங்கியுள்ளது. நக்கீரர் கூறிய வழிபாட்டின் உண்மையை, வழிபாடு தரும் வன்மையை, அவரிடத்தே இன்றும் காணலாம். புதுமைகள் புகாப் புண்ணியச் சிற்றூரிடைச் சிறிது செல்வோம். கிழவர்கள் கிழவிகள் மார்கழி நீராட, ஐப்பசி நீராடச் செல்

கின்றார்கள். இவர்கள் தளர்ந்த உடலினர்கள்; வழிபாட்டிடை வலிவு பெற்ற உள்ளத்தினர்கள். கண்ணொளி மழுங்கியவர்கள். ஞாயிறும் ஒளி தரவில்லை. இவர்கள் ஞாயிறு தோன்றுமுன் எழுந்து செல்கின்றார்கள். வழிபாட்டின் ஒளி இவர்களுக்கு வழி காட்டும் போலும்! வழிபாடு என்னும் செஞ்ஞாயிறு இவர்கள் உள்ளத்தில் தோன்றுகின்றது. குளிரைத் தூரத்தே துரத்துகின்றது. இவர்கள் பனியால் நனைவார்கள்; வெயிலால் உலர்வார்கள். இவை இவர்கள் உடலிற்கு இடர் செய்பவோ? செய்யா. உடலிற்கும் ஊறு செய்யா; உளத்திற்கும் ஊறு செய்யா. இவருடன் சேர்த்துப் புதியது புகுந்த பெருமக்கள் சிலரையும் சிறிது காண்போம். இவரோ, ஞாயிறெழுந்தும் படுக்கையினின்றும் எழார்; எழினும், முக்காடிட்ட தலையினராய், முழுதும் மறைத்த உடலினராய்த் திரிதருவார். ஏன்? சிறிது உடல் தெரியினும் வாடையும், பனியும், குளிரும் அதனைப் பற்றும்; பற்றி உட்புகும். ஈரல் நிலையைக் கலைக்கும்; இரத்தப் பையைக் கெடுக்கும். குளிர் உடல்மேற் படியவே இவ்விடரெலாம் நேரும். நீரில் இறங்கிலோ, நீராடிலோ இறந்தேபடுவர். இவ்விடர்ப்பாடுகளினின்றும் இம்முதியரை விலக்கியது வழிபாடு. என்னே வழிபாடு தரும் வன்மை! வழிபாடு முதியரையும் இளையராக்கும்போலும்! மெல்லியலாரையும் வல்லியலாராக்கும்போலும்! இதனை உணர்த்தவே போலும் நக்கீரர் முழு வலி மாக்களிடை

மெல்லியல் மகளிரை நிறுத்தி, இவ்விரு வகையினரும் குளிரால் துன்புறுமையைக் காட்டுகின்றார் !

> வழிச்சென்று வன்மை பெறுதியோ நெஞ்சே
> வழிபாடே இல்லாக் கடை ?

## அழகின் கலைதேர் அரிவையர்

வழிபாடியற்றும் மகளிரைத் தாண்டி அப்பாற் சென்றால், நாம் காண்பவர் தற்காலமகளிர்போன்ற மகளிர் ; நாகரிகத்தின் நலன்பெறு மகளிர்.

இவர்கள் பெருஞ்செல்வர்கள் ; வானை அளாவிய உயர்நிலைமாடங்களில் வசிப்பவர்கள் ; இன்ப நுகர்வில் இணையற்றவர்கள் ; நாளும் நறுமணத்திடையே திகழ்பவர்கள். வாடையாயினும், கோடையாயினும் நறுஞ்சாந்தணிபவர்கள். நறுஞ்சாந்தணியா நாட்கள் இவர்களுக்கு நலனற்ற நாட்களே போலும் ! இவர்கள் அணியும் சாந்தும் பல்வேறு வகையின ; பல்வித மணங்கொள்வன. அணிதற்கு அரைத்த சந்தனம் பயனற்றுக் கிடக்கின்றது. அதை இம்மகளிர் அணியவில்லை. சந்தனம் குளிரைத் தருவது ; குளிர் காலத்திற்கு ஏற்றதொன்றன்று. குளிர் காலத்தில் இம்மகளிர் சந்தனம் அணிவதில்லை என்றால், சந்தனத்தை ஏன் அரைத்தனர்? அதனை அரைத்தவர் அறிவிலார் போலும் ! சந்தனத்தின் மணம் மென்மை உடையது. இம்மகளிர் மனப்பாங்கிற்கு இம்மணம் பொருந்தியதன்று; வேறுஉயரியநறுமணம்தேவை. அரைத்திருந்தும் சந்தனத்தைத் தூர அகற்றினர்.

அது தென்புலத்தே கிடக்கின்றது. ஏவலாளர் வேறு நன்மணச் சாந்து கூட்டுகின்றனர்; பல்வகை மணம் சேர்த்து நறுஞ்சாந்து கூட்டுகின்றனர். சாந்தணிதலிலும் இவர்கள் செல்வம் தெரிகின்றது. சாந்தணிந்து உடல் நறுமணம் பெறுதல் போதியதன்று. உடலுடன் கூந்தலும் நறுமணம் பெற வேண்டுவார் கூந்தலுக்கும் நறும்புகை ஊட்டுகின்றார்.

இம்மட்டோ! இவர்கள் அழகு செய்து கொள்ளும் அழகையும் காண்போம். பூமாலைகள் உள்ளன. இம்மகளிர் அவற்றை அணியார். அவை குளிர்காலத்திற் கேற்றன அல்ல. அல்லவெனின், ஏன் அம்மாலைகள் கட்டப்பட்டன ? சந்தனத்தை அறிவிலார் அரைத்ததுபோல, அறிவிலிகள் மலர்களை மாலைகளாகக் கட்டினர்கள் போலும்! பல மலர் சேர்தலின் மாலைகள் பருமை பெறுவன. அவற்றை அணியின் கூந்தல் அழகு குறையுமோ? அல்லால் மறையுமோ ? கூந்தலின் அழகு தெரியுமாறு சில மலர்களையே அணிவார் போலும்! இச்சில மலர்களையும் தொடுத்து அணிவாரல்லர். மலர்களைத் தனித்தனியாக, மலர் மலராகவே அணிவர். மலர்களை மாலையாய்த் தொடுப்பதால் மலர்களின் வடிவங்கள் மாறும்; மறையும்; மறைந்து அழகு குன்றும். இயற்கையே மலர்கள் உள்ளவாறு அணிதல் அழகை அதிகப்படுத்தும் போலும்! இம்மலர்களும் 'சின் மலர்'கள் ;* சிறிய மலர்கள் ; கோவலர்

* நெடுநல், 54.

அணிந்த மாலையிற் பொதிந்த நீரலைக்கலாவும் நீடிதழ் மலர்கள் போன்றன அல்ல. இச் சின்மலர் களை இவர்கள் அணியும் முறையும் அழகுற அமைந்துள்ளது. இம்மலர்களை கூந்தலின் உட் புறத்திட்டு, மூடி முடியார்; இவற்றைக் கூந்தலில் செருகார். மலர்கள் கூந்தலிடத்தே பெய்யப்படு வன. மலர்களைக் கூந்தலிற் பெய்யின், இவை எவ்வாறு கூந்தலில் நிற்கும்? இம்மலர்கள் கூந்த லிடத்தே ஒட்டிக்கொண்டு தம் அழகுகாட்டி நிற் பனபோலும்! இவற்றை அணியும் முறை கூந்தலி டத்துப் பெய்ததுபோன்று தோன்றும் போலும்! இக்கால மகளிரும் இம்மகளிரிடத்தில் மலரணியும் முறையைக் கற்கவேண்டும் போலும்! அழகின் கலையெலாம் ஆய்ந்து ஆய்ந்து எடுத்த முறையோ இது! நன்று நன்று இவர் அழகு செய் முறை!

அரைத்த சந்தனமிருந்தும் மகளிர் அதை விரும்பார்; வேறு பல்கூட்டுச் சாந்து வேண்டுவர். விரைந்து ஏவலாளர் அதைக் கூட்டவும் வேண் டும். கட்டிய மாலை இருந்தும் அதை விரும்பார். தனித்தனி மலர் சில தேவை.

அரைத்த சந்தனத்தை அகற்றியவர் வேறு சாந்தின்றி இருந்தால் அவர்தம் சாயல் குன் றுமோ? சாந்துகள் எல்லாம் தண்ணீர் சிறிதே னும் சேர்த்தே அரைக்கப்படுவன; சிறிதேனும் நீரின் தன்மையை அன்றி நெய்யின் தன்மையை ஏற்று நிற்பன. சந்தனச் சாந்தானல் என்ன, வேறு எச்சாந்தானல் என்ன? சாந்துகள் எல்லாம் குளிரைத் தருவன. கட்டிய மாலையை அணிந்தால்

இவர்கள் அழகு இவர்களை விட்டு அகன்றோடி விடுமோ? என்னே பொருட்செலவு! இம்மகளிர் வீண் எண்ணங்களுக்கேற்பப் பொருள் பாழாக்கப் படுகின்றது! இதுதான் அழகு செய்யும் அரிய தொரு முறையோ? அல்லால் 'வீண்மை'யோ? வீண் எண்ணங்கள் குடிகொண்ட மனத்தின் தன்மையோ? அழகில் வீண்மை! அணிகளில் வீண்மை! அணிவன பெறுவன ஆயிரம் மாற்றம், ஆயிரம் வடிவம். பெண்மையின் வீண்மை! பெண்மையைப் பெற்ற நாளே பெற்றனர் வீண்மை போலும்! அன்னையீர்! அன்னையீர்! நுந்தம் பெருந்தகு முன்னோர் இம்மகளிர். கீரர் பெருங் கிழப் புலவர் - பொல்லாக் கிழவர் - என்பதை முன்பே கண்டோம். உங்கள் மனங்களின் உட் புறம், வெளிப்புறம், மூலை முடுக்குகள், மூடிய எண்ணம், முற்று எண்ணம், யாவையும் கண்டவர் இப்புலவர். இவர் கண்ணிற் படாமல் ஒளிந்தன யாவுள? அன்னையீர்! ஒன்றை விட்டு ஒன்றைப் பற்ற உங்களைத் தூண்டுவது எது? உண்மையை ஒளியாது உரைப்பீர். வீண்மை! வீண்மை! வெறு வீண்மை! வெறி தரும் வீண்மை!

அழகின் கலைதேர் இவ்வரிவையரோடு முன்பு கண்ட வழிவழி வந்த வழிபாடியற்றும் மகளிரை ஒப்பிட்டு நோக்குவோம்: வழிபாடியற்றும் மகளிர் ஒரு பூவும் அணிந்திலர். நக்கீரர் அவர்களுக்கு ஒரு வித அழகும் செய்துகாட்டவில்லை. அவர் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர்; பொன் தொடி

அணிந்திலர். அவ்வளையலை அணியும் முறையிலும் அழகைக் காணேம். அவை கையுடன் இறுகின நிலையில் உள்ளன. அவை அழகினை அகற்றுவ தோடு அணிந்த கைக்குத் துன்பமும் தருவன போலும்! மெத்தென் சாயலை உடலிற் காண்கின் றேம். சாந்தணிந்த சாயலைக் காணேம்; நறும் புகையூட்டிய கூந்தலைக் காணேம். பூத்தட்டு நிறை யச் செவ்விய அரும்புகள் உள. இவற்றில் ஒன்றை யேனும் அம்மகளிர் அணிந்திலர். அவர்களின் மனம் புதுமை புகுந்த மகளிரின் மனத்தின் முற் றிலும் மாறுனது போலும்! அவர்கள் உளப் பாங்குதான் என்னே!

இறைவன் படைப்பில் எழில்சிறந்தவை மலர் கள். இவை தரும் மணமும் அழகும் எவை தரும்? எவை பெறும்? ஒழுங்குற அமைந்த இதழ்கள், ஒளி தரும் பல்வகை நிறம், பல்வகை வடிவம், பல் வகை மணம் - இவற்றின் அழகில், இவற்றின் மணத்தில், இவற்றின் நிறத்தில், ஈடுபடாத மாந்த ரும் உளரோ? இவை தரும் இன்பம் உயரிய இன் பம்; தூய இன்பம்; கட்புலன் கவர்ந்து கருத்துட் புகுவது. எல்லையில் இன்பம் இவைதருவது. இவை தரும் இன்பத்திற்கு இவை பெறும் கைம்மாறு என்ன? கிள்ளப்படுவது; கட்டப்படுவது; கசக்கப் படுவது; பெண்மைக்கு அடிமையாய்க் கொள்ளப் படுவது; பெண்மையின் வீண்மைக்கு அடிமை யாய்க் கொள்ளப்படுவது. அந்தோ! இறைவனது சிறந்த படைப்பிற்கும் இதுவோ முடிவு! ஊன்

உடலுக்கு அழகு செய்யவோ இவை பொருந்துவ? எழில்மிகு மலர்கள் இறைவனுக்குரியன ; இறைவன் வழிபாட்டிற்குரியன. இம்மகளிர்தம் கையில் மலர் இருந்தும் அவற்றைத் தாம் அணியார்; அவை தரும் இன்பம் விழையார். அவைதரும் மணத்தை இம்மகளிர் நுகர்ந்தது பொழுதறியும் பொருட்டு ; இன்புறுதற்பொருட்டன்று. அம்மலர்கள் அனைத்தையும் இறைவன் வழிபாட்டிற்கே அளிக்கின்றனர் ; ஒளி வடிவில் இறைவனை வழிபடுகின்றனர். 'வழிபாடதற்கே வனப்புறு மலர்கள் வேண்டும்' என்பதோ இம்மகளிர் எண்ணம் ! "பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி ; அப்பனிமலரெடுக்க மனமும் நண்ணேன்!" என்ற பெரியார்* நிலையை இம்மகளிர் எய்திலர். இம்மகளிர் பனிமலர் கொய்வார்; ஆனால், அம்மலரை ஊனத்தை உடலுடன் பொருத்தார் ; இறைவன் இணையடிதமக்கே இடுவார்.

அன்பர்காள், வழிபாடியற்றும் அகத்தழகு காட்டிப் புறத்தழகு செய்யும் புன்மையை அல்லால், தன்மையை உணர்த்தும் குறிப்பினைக் கருதுமின் ; காண்மின் !

அழகினில் ஆழ்ந்த இம்மகளிரின் செயல்களை இன்னும் சற்றுக் காண்போம் : பகுவாய்த் தடவு உள்ளது. அதில் புகையற்ற நெருப்பு - கனகன வென்று கனிந்த நெருப்பு-செந்நெருப்பு-உள்ளது. இம்மகளிர் அதன் வெம்மையை நுகர்கின்றனர்.

---

* தாயுமானவர்.

குளிர் நாட்டிடைச் சென்ருர். இத்தடவின் அரு மையை அறிவார்; இது தரும் வெம்மையின் இனி மையை உணர்வார். கோடையின் கொடுமையை மாற்றுவது தென்றல்; வாடையின் கொடுமையை மாற்றுவது தடவுகொள் நெருப்பு. இத்தடவினைச் சூழ்ந்து வீட்டிலுள்ளார் யாவரும் அமர்வர்; வெம்மை தரும் இன்பத்தை நுகர்வர். தனித்தனி திரிவார், தனித்தனி உறைவார், இளையவர், முதிய வர், ஆடவர், மகளிர், யாவரும் கூடும் இடம், இத் தடவுகொள் இடம். இவ்வாறு கூடும்கூட்டத்தின் அழகும், மக்கள் அப்போது பெறும் இன்பமும், குளிர்மிகு நாடுகளில் இன்றும் காணலாம். இவற் றைப் பாடிய குளிர்நாட்டுப் புலவர் பலர். மகளிர் தம் மேனிகொள் நறுமணம் வீசுகின்றது; பரவு கின்றது; தடவிருக்கும் இடத்தைக் கொள்கின் றது. அவர்தம் கூந்தலில் பெய்த மலர்கள் அழகினை அவ்விடத்துள் பெய்கின்றன. செந்நெருப்பு, தடவில் கனிகின்றது, அதனின்றும் செம்மைச் சிறொளி ஒளிர்கின்றது. புறத்தே காரிருள் சூழ்ந்து நிற்கின்றது. கல்லென் துவலை தூவுகின்றது. வாடை வீசுகின்றது. இவற்றை எல்லாம் ஒரு சேரக்காண்மின்! இவை தரும் நோக்கை அல்லது காட்சியை மனக்கண்ணல் கண்டு களிகூர்மின்!

இம்மகளிரின் இன்ப நுகர்வு இவற்றோடு முடிந்திலது. இவற்றோடு ஆடல் காணவேண்டு வர்; பாடல் கேட்க வேண்டுவர். ஆடலுக்குப் பாடல் வேண்டும்; பாடலுக்கு யாழிசை வேண்

டும். யாழ் இல்லையேல், பாடலுமில்லை ; ஆடலு மில்லை. யாழை எடுத்து இசை கூட்டுகின்றனர். யாழின் இசை, நரம்பின் இசை ; நரம்புகள் சேர்ந்து தரும் இன்னிசை. யாழ் நரம்பில் ஒவ் வொன்றும் ஒவ்வொரு வகை ஒலியைத் தருவது. ஒவ்வொரு நரம்பு தரும் ஒலியும் ஒழுங்கு பெற வேண்டும். ஒவ்வொரு நரம்பிற்கும் ஒவ்வொரு திவவு உள்ளது. அத்திவவினை இறுக்கியும் இளக்கி யும் ஒவ்வொரு நரம்பின் ஓசையும் ஒழுங்குறச் செய்வர். இணை, கிளை, பகை, நட்பான நரம்புகள் பெயருந்தன்மை, அவற்றின் மாத்திரை அறிந்து வீக்குவர். இதனை யாழ் பண்ணல் என்பர். ஒவ் வொரு நரம்பின் ஒலியையும் மற்றைய நரம்பின் ஒலிகளோடுஒப்பிட்டு அளந்துகாண்பர்.ஒவ்வொரு நரம்பின் ஒலியும் ஏனைய நரம்பின் ஒலிகளுடன் சென்று இயைதல் வேண்டும் ; ஒன்றுபட வேண் டும். இவ்வாறு ஒற்றுமைப்படினே யாழ் இன் னிசை தரும். இப்போது யாழ் நரம்புகள் எல்லாம் குளிரால் திரிந்தன. அவற்றின் ஒலிதரும் தன்மை திரிந்தது. அவற்றினின்றும் அவற்றிற்குரிய ஒலி கள் எழுந்தில ; எழும் ஒலிகளும் ஒழுங்குற்றில ; யாழின் நரம்புகளை மகளிர் உடல்மேலெல்லாம் தடவினும், அந்நரம்புகள் தக்க ஒலி தரும் தன் மையை மீண்டும் பெற்றில. யாழ் பண்ணும் முறை யிலேயே - யாழ் பண்ணுகின்ற முறையிலேயே - யாழை மீட்டுகின்ற முறையிலேயே - யாழ் நிற்

கின்றது; நிறுத்தப்பட்டது.* மகளிர் புலம்புகின்றனர். இவர்கள் இன்புற நறுமணச் சாந்துள்ளது; மலர் உள்ளது; செந்நெருப்பின் வெம்மையும் உளது. இவற்றின் இன்பம் எல்லாம் நுகர்ந்தும், இசையின்பம் ஒன்றின் குறைவால் வருந்துகின்றனர். ஏழைக் கோவலர்கள், வாடையின் குளிரை அகற்றும் வழியைக்காண அறிவற்றவர்கள்; அகற்றும் முறையைக் கைக்கொள்ளப் பொருளற்றவர்கள்; வருந்துகின்றார்கள். இம்மகளிரோ, குளிரைப் போக்கும் வகையெலாம் அறிந்தவர்; அதனைப் போக்கும் வளமெலாம் பெற்றவர். இவர்களும் வருந்துகின்றார்கள். "கூழுக்கு உப்பில்லை என்பார்க்கும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் கவலை ஒன்றே" என்பர். இதேபோலும் இவர்தம் நிலையும்.

இம்மகளிர், காதலரைப் பிரிந்தவர்; காதலர் பிரிவை இசை இன்பத்தில் மறக்க நினைத்தனர். மற்றைய இன்பங்கள் இப்பிரிவை மறைக்கத்தக்க வன்மையுடையவை அல்ல. மற்றவை பிரிவின் துன்பத்தை அதிகப்படுத்துவன. இசை ஒன்றே அத்துன்பத்தை மறைக்கச்செய்வது போலும்!

---

* 'நில்' என்னும் அடியாகப் பிறந்தன, 'நிற்க', 'நிறுத்த', 'நிறுப்ப' முதலிய சொற்கள். 'நில்' என்பது 'செல்' என்பதன் எதிர்மறை. ஆதலின், 'நிறுப்ப' என்னும் சொல், செலுத்ாது நிறுத்துதலைக் குறிக்கும் என்று இங்குக் கொள்ளப்பட்டது.

**ஊனை வளர்த்தும் உயிரைப் பிணிக்கவல்**
**தானை உடைத்தாம் இசை**

என்பதை இம்மகளிர் அறிவார் போலும்! இத் தானைக்குக் கைக்கூலி கொடுத்துத் துன்பத்தைத் துரத்தி ஓட்ட எண்ணினர். இசையோ, இம்மகளிரை முன்பே அறியும். இவர்தம் வீண்மையைக் கண்டு அஞ்சிற்றோ? சாந்து இவரிடம் பட்டதை இசை அறியும்; மலர்கள் இவரிடம் பட்டபாட்டையும் அறியும். இவர்தம் கைப்பட்டால் தன்னையும் இவர் அடிமைசெய்வர் என இசை இம்மகளிர்க்கு அஞ்சியது போலும்! அம்மம்ம! காதலரைப் பிரிந்த மகளிர்க்கோ இவ்வளவு கொண்டாட்டம்! காதலரும் இவருடன் இருந்தாலோ! இவர்தம் இன்ப நுகர்வின் எல்லையை யாரே காண்பார்! இந்திரனும் இவர்தம் இளமாணுக்கன் ஆவான் போலும்!

## கோப்பெருந்தேவி

காதலர்ப்பிரிந்த மகளிரைக் கடந்துசென்றால், அரசன் தேவியைக் காண்கிறோம். அரசனைப் பிரிந்த கோப்பெருந்தேவி துயரத்தில் ஆழ்ந்துள்ளாள். இவ்வரசி, மேலே கண்ட மகளிரோடு முற்றிலும் மாறுபட்டவள் - மாறுபட்ட நடையுடையவள் - மாறுபட்ட குணமுடையவள். அம்மகளிர் தம் இன்பத்திடையே துன்பம் சேர்வதைக் கண்டோம். அவர் இன்பம் பெருமைக்குத் துன்புறக் கண்டோம். இனி நாம் காணப்புகுவது துன்பத்

தின் நிலை-இன்பம் அனைத்தையும் அகற்றிய துன்ப நிலை-துன்பத்தின் கொடிய நிலை-முன் கண்ட மகளிர் மனநிலைக்கு முற்றிலும் மாருன நிலை, இந்நிலை யாது ? இஃது உணர்த்தும் அரசியின் செயல்கள் எவை எனக் காண்போம் :

கோப்பெருந்தேவி உறையும் அரண்மனை, திண்மையும் அழகும் திகழ அமைந்துள்ளது. அதன்கண் காணுதற்கினிய உறையுள் பல உள. அவற்றில் ஒன்றில் வேலைப்பாடமைந்த கட்டில் ஒன்றைக் காண்கின்ருேம். அதன்மேல் மெல்லிதாக விரித்த படுக்கை உளது. அப்படுக்கையின் மேல் துகளறக் கழுவிய தூமடி விரித்திருக்கின்றது. அதன்மேல் கோப்பெருந்தேவி அமர்ந்துள்ளாள். இவளழகு குன்றியுள்ளது. இவள் புனையா ஓவியம்போல அழகின்றித் தோன்றுகின்ருள். இவள் சாந்தணியவில்லை. நறுஞ்சாந்து அரைப்பார் இவள் அருகிலும் இலர். இவள் கூந்தலுக்கு நறும் புகை ஊட்டவில்லை ; கூந்தலில் மாலை சூடவில்லை ; மலர் அணியவில்லை. அரசி உறையும் இடத்தில் யாழிசை கூட்டுவாரிலர், ஆடல்கொளப் புகுவார், பாடல்கொளப் புகுவார், எவரும் இலர். இவ்வரசியின் மனநிலை இவற்றை வேண்டுவதுமன்று ; ஏற்பதுமன்று. இவையனைத்தையும் விலக்கினள் போலும் ! இவற்றை விலக்கி வேறு எவற்றைக் கொண்டனளோ ! காண்போம் :

இவள் மார்பிடத்தே பின்னுதல் அமைந்த நெடிய மங்கல நாண் ஒன்றே தொங்குகின்றது. முத்தாரங்களைக் காண்கிலோம். தலைமயிர் முடி

யப் பெற்றிலது ; பின்னப் பெற்றிலது ; நெற்றியின்மேல் உலறிக் கிடக்கின்றது. காதிலிருந்த மகரக் குழைகள் களையப்பட்டன. கையிலிருந்த பொன் வளையல்களும் களையப்பட்டன. அரசி பூந் துகில் அணிந்திலள் ; பருத்தி நூற்புடைவையே அணிந்துள்ளாள். கச்சும் அணிந்திலள். இஃதென்ன கோலம் ! துன்பத்தின் உருவோ ! துயருண்ட மனத்தின் தோற்றமோ !

இன்பந் தருவனவற்றை விலக்கல் கணவனைப் பிரிந்த கற்புடைய மகளிர் இயல்பு. அரசியும் சாந்து, மலர், நறும்புகை ஆகிய இவற்றை விலக்கினள். அணிகலன்களையும் ஏன் விலக்கினள்? அணிகலன்கள் அழகைத் தருவன. 'இவை தரும் அழகைக் காணக் கணவன் அருகில்லாதபோது அணிகலன் எதற்கு ! அழகு எதற்கு !' என அவற்றை அகற்றினள் போலும்! தவநெறி புகுவாரும் அணிகலன் களைதல் இயல்பு. தவநெறியிற் புகுதலுற்றபோது விசயமாதேவியும் தன் அணிகலன்களை அகற்றினள் ; 'அரும்பொன் மாலை அலங்கலோடாரம்', 'பைம்பொன் மகர குண்டலம்', கழுத்தின் அணியல் இவை யாவையும் அகற்றினள். 'வீக்கி மின்னும் கலைஎலாம் துறந்தாள் !' 'உடுத்தாள் கல் தோய் நுண் கலிங்கம்'. கோப்பெருந் தேவியோ, மங்கலம் குறிக்கும் சில அணிகளைத் தவிர மற்ற யாவையும் அகற்றினள் ; வீக்கி மின்னும் கலையையும் துறந்தாள் ; நுண் கலிங்கமே பூண்டாள். ஆனால், அக்கலிங்கம் கல் தோய்ந்திலது.

துறவியர் உடுப்பது துவர்தோய் ஆடை - கல் தோய் ஆடை. இவ்வரசி துறவியல்லள்; துறவொழுக்கம் பூண்டவள் அல்லள். ஆதலின், கல் தோய் ஆடை அணிந்திலள். இவ்வரசி இல்லத் துறைபவள்; இல்லறம் பூண்டவள். இல்லத்திருந்தும் தவநெறி புகுந்தாள் போலும்! இவள் கையில் கடிகைநூல் - காப்புநூல் - கட்டி உள்ளது காண்மின்! இக்காப்பு நாண் இவ்வம்மை இயற்றும் நோன்பிற்கறிகுறி. அரசி நோன்பு மேற்கொண்டுள்ளாள்; நோற்கின்றாள்; தவஞ் செய்கின்றாள். 'நோற்பாரின் நோன்மை உடைத்து'*, இவ்வம்மையின் நோன்பு.

மற்றும் அரசியின் தன்மையைச் சற்று ஆழ்ந்து நோக்குவோம். அரசி அணிந்ததோ, நூற்புடைவை. அப்புடைவையும் மாசூர்ந்துள்ளது - அழுக்கேறி உள்ளது. ஆனால், இவள் இருப்பது துகளறக் கழுவிய தூமடிமீது. இஃதென்ன முரண்! ஏவல்மகளிர் படுக்கையின் மேல்விரிப்பை நாள்தோறும் மாற்றுவர் போலும்! ஆதலின், படுக்கைமேல் காணப்படுவது தூயதொரு மடி. அரசி தன் உடையை ஏன் மாற்றிலள்? மாற்ற உடையற்றவளோ? அல்லள் அல்லள். அரசன் மனைவிக்கோ ஆடைகளுக்குப் பஞ்சம்! கழுவிய மடி விரித்துள்ளது, கழுவா உடையை அணிந்துள்ளாள். உடையைக் கழுவ நேர்ந்திலது போலும்! நீரிற் படியுங்கால் உடையைக் கழுவ நேரும். அரசி

* திருக்குறள், 48.

நீரிற்படிந்திலள். நீரிற்படியா அவளுடலும் மாசுண்டதோ ! புனையா ஓவியம்போலத் தோன்றுகின்ருள்.

புனையா ஓவியம் என்பது யாது ? அஃது எவ்வாறு தோன்றும் ? ஓவியம் தீட்டுதல் இருவகைத் தொழில்களால் இயன்றது. அத் தொழில்கள் 'வரைதல், புனைதல்' என்பன. இத்தொழில்களில் ஒன்றை அடுத்து மற்ருென்று நிகழும். முதலில் நிகழ்வது வரைதல்; அதன்பின் நிகழ்வது புனைதல். முதலில் வரையுங்கால், கருதிய ஓவியம் கணக்குற அமையும் வரையில் திருத்தப்படும்; மாற்றப்படும். திருத்திய சுவடும் மாற்றிய சுவடும் புனையுமுன் சிலவேனும் தோன்றுவ. இஃது ஓவியம் வரைதலின் இயல்பு. இச்சுவடூர்ந்த ஓவியம் மாசூர்ந்தது போலத் தோன்றும் ; மங்கிய தோற்றம் பெறும். புனைதலே இம்மாசுகள் அனைத்தையும் மறைக்கும். மாசெலாம் மாற்றும். திருத்தும் சுவடுபடாது செம்மையே வரைந்த ஓவியம் எனினும், புனையா ஓவியம் பொலிவு பெருது ; மங்கியே தோன்றும். புனைதலே பொலிவைத் தருவது ; அழகிய தோற்றத்தைத் தருவது. புனையா ஓவியம்போன்று இவ்வம்மையும் பொலிவற்று விளங்கினள். சேடியர் மேனியும் 'தளிர் ஏர் மேனி'யாய் விளங்குகின்றது. அரசியின் மேனியோ, விளக்கமுற்றிலது ; மங்கித் தோன்றுகின்றது. மெத்தென் சாயலும் தோன்றவில்லை. இவள் மேனி எலாம் மாசூர்ந்து மங்கியது போலும்! அந்தோ! கோப்பெருந்தேவி உடையை

மாற்ற மறந்தாள் ; உடையைக் கழுவ மறந்தாள் ; உடையையே மறந்தாள் போலும் ! நீராட மறந்தாள்; உடலையே மறந்தாள்போலும்! "அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை."* துயரிடைப்பட்டு உடை மறந்து உடல் மறந்த இவ்வரசியின் ஒழுக்கம், கைம்மிக்கது ; அரசிதன் கைக்கு மீறியது.

அரசிதன் செயல்கள் அவள் வயத்தன ஆகில; சேடியர்கைக்கும் மீறின. சேடியர்களால் அவற்றை அடக்கமுடியவில்லை ; தணிக்க முடியவில்லை. செவிலித் தாயர் கூடினர். கைம்மிகல் அறிந்து ஓடோடியும் குழீஇனர் போலும்! உண்ணா நோன்புகொள் ஒருவன் கைம்மிகக் குழீஇய அன்பரின் கூட்டம் போலும் இச்சேடியர் கூட்டம்! இவ்வரசியும் உண்டியை வெறுத்தும் பசியடங்கின்றும் கைம்மிக்கனளோ! அறியோம். கைம்மிகக் குழீஇய செவிலியரையே புலவர் காட்டுகின்றார் ; கைம்மிகுதற்குக் காரணம் கூறினாரிலர். அரசியைச் சூழ்ந்த செவிலித்தாயர், அரசியின் துயரத்தைப் போக்க முயன்றனர் ; 'உகத்தவை'† மொழிந்தனர் ; உயர்ந்தன மொழிந்தனர். 'இனிதே மீள்குவர் !' என இயம்பினர் ; குறுகக் கூறினர் ; நீள உரைத்தனர். துயரம் தணிந்தபாடில்லை. அரசி மிகக் கலுழ்ந்தாள்; மனம் ஒருமைப்படாது நொந்தாள்.

---

* அப்பர் தேவாரம், 6-ஆம் திருமுறை 25, திருவாரூர்த் திருத்தாண்டகம், 7.

† தொல். உரி. 306. 'உகப்பே உயர்தல்.'

நோன்பு மேற்கொண்டும் அரசி ஏன் இவ்வாறு நோகின்றாள்; இவள் துயருறக் காரணம் என்ன? அரசன் தன் உடன் இருக்கவேண்டியோ இவ்வாறு கொடுந்துயர் உறுகின்றாள்? அரசன் தரும் இன்பம் வேண்டியோ இவ்வாறு வருந்துகின்றாள்? காமம் தரு நோயின் குறிகளுள் யாதொன்றும் காணப்படவில்லை. மேனிமேல் ஊரும் பசப்பைக் காண்கிலம். 'நினைந்தவர் புலம்பல்' இல்லை. உறுப்பு நலனழிதலும் இல்லை.

காதலர்ப் பிரிந்தோர் சிலரை முன்பு கண்டோம். அவர் பூசுவன பூசிப் பூண்பன பூண்டனர்; சிறிதே புலம்பினர். அதுவன்றோ நாகரிகப் புலம்பல்! இவ்வரசி யாது நினைந்து இவ்வாறு பெருந்துயர் உற்றனள் - இன்னா அரும்படர் எய்தினள்? எவ்வாறு இவள் மனத்தில் நிகழ்வதைக் காண்பது! நக்கீரர் அன்றி இதற்கு வழிகாட்டுவாரிலர். இவ்வின்னா அரும்படர் நக்கீரரையும் வருத்திற்றுப் போலும்! இவ்வரும்படர் தீரப் புலவர் மருந்து தேடுகின்றார்; மருந்து வேண்டுகின்றார். இவர் வேண்டும் மருந்தை அறியின் இவள் நோயை ஒருவாறு காணலாம். நக்கீரர் வேண்டும் மருந்து யாது?

இவ்வரிவைக்கு "இன்னா அரும்படர் தீர விறல் தந்து இன்னே முடிகதில் அம்ம!" எனப் புலவர் வேண்டினர். வெற்றி வேண்டியது அரசன் துயர் தீர அன்று. இவ்வம்மையின் துயர் தீர வெற்றி வேண்டுகின்றார். அம்மம்ம! போரிடைச் சென்று பொழுதெலாம் உழைத்தும் நள்ளென் யாமத்தும்

பள்ளியும் கொள்ளாது திரிந்த அரசன் துயர்பெரி தன்று ; அரசியின் துயரே பெரிது. நன்று நன்று நக்கீரர் செயல்! பெண்ணெனில் மயங்காப் புலவரும் இலரோ!

இவ் வேண்டுகோள் யாரைக் குறித்ததாயினும் ஆகுக! அஃது ஈண்டு நாம் ஆராய வேண்டுவதன்று. நாம் காண வேண்டுவது அரசி உற்ற பெருந்துயரின் மூலம். மருந்தைக் கொண்டு நோயைக்காண எண்ணினேம். இன்னா அரும்படர் தீர நக்கீரர் என்ன வேண்டினர்? வெற்றி வேண்டினர் ; முடிவு வேண்டினர் ; அரசன் வருகையை வேண்டிலர் ; இனிய* முடிவே வேண்டி

* வேண்டியது வருகையெனின், 'இன்னே' என்னும் சொற்கு 'இப்பொழுதே' என்ற பொருள் பொருந்தும். வேண்டியதோ வருகையன்று ; முடிவு. பாசறைத தொழில்கள், போர்த் தொழில்கள் எனக் கொள்ளினும் அன்பின் தொழில்கள் எனக் கொள்ளினும், எல்லாம் நள்ளென் யாமத்தே நிகழ்ந்தன. அப்பொழுதே பாசறைத் தொழில்கள் எவ்வாறு வெற்றியைத் தருவன? போர்த் தொழில்கள், பகைவன் போர்க்கெழாத அப்பொழுதே - நள்ளென் யாமத்தே - எவ்வாறு வெற்றியைத் தருவன ? எவ்வாறு அவை அப்போதே முடிவன ? நக்கீரர் ஈண்டுப் பெய்துள்ள சொற்கள் ஆழ்ந்து நோக்கத் தக்கன. போர் முடிக என்று வேண்டினரிலர் போர்த் தொழில் முடிக என்று வேண்டினரிலர். 'இன்னே முடிக * * * பாசறைத் தொழிலே' என்றே வேண்டினர். இவற்றை எல்லாம் கருதுங்கால், 'இன்னே' என்னும் சொற்கு விரைவுப் பொருளினும் இனிமைப் பொருளே கீரர் கருத்து என்பது தோன்றுகின்றது. 37-ஆம் பக்கம் அடிக் குறிப்பினையும் காண்க.

னர். அரசன் வருகையினும் அரசி விரும்பியது போரில் வெற்றி ; இனிய முடிவு. வேறு எதையும் வேண்டிலள். போர் இனிதே முடியின், கோப்பெருந்தேவி அரசனை அடைந்த ஞான்றினும் பெரிதுவப்பள் போலும்! அரசனைப் பலர் எதிர்த்து நின்றனர். பெரும்போர் நிகழ்கின்றது. அரசன் பாசறையிலுள்ளான். இப் பாசறை "புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்"* ஆமோ, அன்றேல் இங்குத் தொல்லுயிர் வயங்கிய அவிப் பலி நேருமோ!* யாரே அறியவல்லார்! அரசன் வெற்றி பெறுவானோ? போரின் முடிவை யாரே அறிவர்! வெற்றி பெறினும் அஃது இனிதே முடியுமோ? அரசியின் மனத்தில் இக்கவலைகள் - இவ் வெண்ணங்கள் குடி கொண்டன. "கிழவோன் செய்வினைக் கச்சம்"† இவளை வருத்தியது. நோன்பு பூண்டாள் ; நோற்றாள். கவலை மிகமிக அச்சம் மிகமிக பகைவர் வலியை நினைக்க நினைக்க இவள் துயரம் மைம்மிக்கது போலும்!§

இக்கொடுந்துயர் எவ்வாறு தணிந்தது? அரசி எவ்வாறு ஆற்றியிருக்கின்றாள்? காண்போம் : படுக்கையில் இருந்துமனத்தேற்றம்பெறாது தவித்தாள் ; ஒருமைப்படாதுமிகக்கலுழ்ந்தாள். இவள்

*தொல். பொருள். புறத்திணையியல், 76. †தொல். பொருள். கற்பு, 148. §நச்சினார்க்கினியர் உரை கூறியவாறு, 'உரோகிணியைப்போல யாமும் பிரிவின்றி இருத்தலைப்பெற்றிலேம்!' என்று நினைத்தாள் அல்லது வருந்தினாள் என்று பொருள் கொள்ளுதல் சிறந்ததாகத் தோற்றவில்லை.

இருந்த படுக்கையின் மேலே அமைத்த முரண் மிகு சிறப்பிற் செல்வனெடு நிலைஇய உரோகிணி யின் படம் இவள் கண்ணிற்பட்டது. அதைக் குறித்து நினைக்கத் தொடங்கினாள். துக்கத்தின் வேறாய் நினைப்புத் தொடங்கவே கிழவன் செய் வினைக்கு அச்ச நினைப்புத் தானே அகன்றது. அப் படத்தை நினைக்க நினைக்க, இவள் மனம், மிக்க ஆறுதலை அடைந்தது ; பெரு மூச்சு விட்டாள். கனையாழி பெற்ற சீதையின் *உயிர்ப்புப் போலுமோ இம்மையின் வெட்டுயிர்ப்பு ? கண் ணீரைத் துடைத்தாள் ; ஆறுதலைப் பெற்றாள் ; ஆற்றியிருக்கின்றாள் ; சேடியர் செவிலியர் அனை வரையும் விலக்கினள் ; தனியே இருக்கின்றாள். மெழுகு செய்படமிசைத் தீட்டிய ஓவியம் வாழி ! ஓவியக்கலை வாழி ! இவையன்றோ நம் அரசியின் துயரைத் தணித்தவை ?

ஓவியம் இவ்வரசிக்கு இயற்றிய உதவி பெரிது. உணரவல்லார்க்குஓவியம் ஒப்பற்றதுணை; உயரிய நன்மை தருவது. அரசி ஓவியம் உணர வல்லவள் ; உணர்ந்து எண்ண வல்லவள். ஓவியத் தால் இவ்வரசி உணர்ந்தன யாவை ? உணர்ந்து என்னென்ன எண்ணினள் ? இவள் கண்ட அப் படத்தின் தன்மை யாது ? காண்போம் :

திங்களஞ்செல்வனும் உரோகிணியும் அப் படத்தில் எழுதப்பட்டிருந்தனர். இவ்விருவரைப்

* கம்ப. இரா. சுந்தர. கா. உருக்காட்டு படலம், 66.

பற்றிய நிகழ்ச்சிகள் நினைவு கூரற்பாலன. அந் நிகழ்ச்சிகளை அறிந்த பின்னரே அப்படம் உணர்த்துவது விளங்கும். திங்களஞ்செல்வற்கு உரோகிணி ஒருத்தியே மனைவியல்லள்; இருபத் தேழு மனைவியர் உளர். இவர் அனைவரிடத்திலும் திங்களஞ்செல்வன் ஒத்த அன்பினன் அல்லன்; உரோகிணியிடத்தே மிகுபற்றுடையவன். இவன் பொறி இன்பத்தின் பொல்லா வாயிடைப் பட்ட வன். இப்பொறி இன்பத்தை அதிகமாய்த் தந்த வள் உரோகிணி போலும்! இவன் இவளிடத்தி லேயே உறைபவன் ஆனான்; மற்ற மனைவியரைப் புறக்கணித்தான். ஓயாது உடல் நலம் உண்பார் பெறுவது உடற் குறை நோய்; உடலின் உறுப் பழி தொழுநோய். இக்கொடிய நோயையும் இவன் பெற்றான். இவன் சிறப்பு முரண் மிகு சிறப்பு; நேரிய சிறப்பன்று; நல்லொழுக்கம் தந்த சிறப்பன்று. ஆதலின் புலவர் இவனுக்கு 'முரண் மிகு சிறப்பிற்செல்வன்' எனப் பெயரிட்டனர். தெய்வக் கற்பின் திறம் பெறு மகளிரோடு உரோ கிணியை வைத்தெண்ணுதல் இல்லை. திங்கள் உரோகிணியோடு நிலைஇய பண்பிது; தன்மை யிது. இவர்களைக் கொண்ட அப்படமும் இம் முரண்மிகு சிறப்புத்தோன்ற எழுதியதுபோலும்!

அப்படத்தைக் கண்ணுறுவார், இயல்பாக எண்ணுவது யாது? "அந்தோ! உரோகிணியால் திங்களஞ்செல்வன் அருங்கேடு உற்றான்!" என எண்ண நேரும்; "பூவலர் கொடியனார்கள்

போகமே கழுமி, மேலும் பாவமும் பழியுமுற்ருர் பற்பலர் !"* என எண்ணுதல் இயல்பு. "பழியுற்ருர் பலரினும் திங்கள் முதன்மை பெற்றவன்" எனவும் எண்ணுவர். திங்களைத் தனியே காணில் இவ்வெண்ணங்கள் எளிதே தோன்ரு ; வேறு எண்ணங்கள் தோன்றும். திங்களும் உரோகிணியும் சேர்ந்த படத்தைக் காணின், இச்சேர்க்கை தந்த தீமையையன்றி வேறு எவை எளிதே நினைவிற்கு வருவன ? இப்படத்தைக் கருதிய அரசியின் செயலை நுணுகிக் காண்போம் ; அவள் மனத்தில் நிகழும் எண்ணங்களையும் அறிவோம். முரண்மிகு சிறப்பிற்செல்வனெடு நிலைஇய உரோகிணியை அரசி நினைப்பவள் ஆனுள்; நினைந்து நோக்கினுள். நினையுமுன்பன்ரே நோக்குதல் நேரும் ? நோக்குதல், நோக்கியபின் நோக்கியவற்றை நினைதல் இயல்பு. நினைந்தபின்பு அல்லது நினைக்கின்றபோது நோக்குவது ஏன் ? நினைப்பில் ஆழ்ந்தவர்களுக்கு நினைவின்கண் சில உண்மை தோன்றும். தோன்றியவுடன், ஒன்றையும் நோக்காது நினைப்பில் ஆழ்ந்த கண்கள், திடீரெனக் கருதிய பொருளை நோக்கும் ; தாம் கருதியது உண்மையோ என ஒப்பிட்டுக் காண்பதுபோல நோக்கும். இஃது ஆழ்ந்த நினைவில் அந்நினைவின் காரணமாயமைந்த பொருளை நோக்கும் இயல்பு. இவ்வரசியின் ஆழ்ந்த நினைவில் நிகழ்ந்தவை யாவை ? "உரோகிணி அன்னுய், உன்னைப்போன்று என் கணவனை

* சீவக. நாம. 206.

என்னுடன் உறையுமாறு செய்திலேன்; 'வினையே ஆடவர்க்கு உயிர்'* என உணர்வேன்; என் கணவனை வினைமேற் செல்லுமாறு விடுத்தேன். அந்தோ! திங்களின் பழிக்கும் நோய்க்கும் நீயே காரணம்!" என நினைந்தனள்போலும். இங்ஙனெலாம் குறிக்கும் அரசியின் நோக்கு. முனிவு மெய்ந் நிறுத்திய† நோக்கிது; உரோகிணியின் செய்கையில் வெறுப்புத் தோன்ற நோக்கிய நோக்கு. உரோகிணியைத் தன்னோடு ஒப்பிட்டவள், திங்களைத் தன் கணவனோடு ஒப்பிட்டு நோக்கலும் இயல்பே. ஒப்பிடின், திங்களைக் குறித்து என்ன நினைவுகள் நிகழும்? "ஐய, என் கணவன் உன்னைப்போல 'இன்பம் விழையான்; வினை விழைவான்';‡ உன்னைப்போல இன்பம் விழைந்து இடர்ப்படுவான் அல்லன்" என எண்ண நேரும். தன் கணவனும் தானும் திங்களையும் உரோகிணியையும்போன்று தீமை இழைத்தவர் அல்லர் என்னும் நினைவையும் உணர்த்தும் நோக்கிது.

இந்த நினைவோடு இவ்வரசியின் மனம் நின்றதோ? இல்லை. திங்களை நினைந்தவள் ஞாயிற்றை§யும் நினைக்கின்றாள். "ஞாயிறு ஈண்டு (மெழுகுசெய் படத்தில்) எழுதியது அன்று". இந்த நினைப்பைக்

---

* குறுந்தொகை, 135. † தொல். மெய்ப்பா. 271.

‡ திருக்குறள், 615.

§ 'மண்டிலம்' என்னும் சொல்லின் வட்டமாயோடுகை, ஞாயிறு என்னும் இரு பொருளும் ஈண்டுக் கூறும் கருத்துக்களுக்குப் பொருந்துவன.

குறிக்கவே அதனை இப்பாட்டில் புலவர் குறிப்பிடு கின்ருர். திங்களை ஞாயிற்ருேடு ஒப்பிடுகின்ருள். ஞாயிற்ருேடே மாறுபாடு மிக்கவன் திங்கள். "எம்மெய்யாயினும் ஒப்புமைகோடல்"* அரசிதன் மனநிலையின் இயல்பு. அரசனை (தன் கணவனை) ஞாயிற்ருேடு ஒப்பிடுகின்ருள். அரசன் ஞாயிறு போல்பவன்; ஞாயிறேபோலத் திறல் மிக்கவன்; முரண்மிகு சிறப்பிற் செல்வன் அல்லன் அரசன்; ஞாயிறேபோலத் திறன்மிகு சிறப்பிற் செல்வன்; அறன்மிகு சிறப்பிற் செல்வன் என ஒப்பிட்டுக் கருதுகின்ருள்; ஆராய்கின்ருள். ஒப்புவழி அரசியின் மனம் உவப்படைகின்றது. †முரண்மிகு சிறப்பிற் செல்வர் இடர் உறுவர்; அழிவர். அறன்மிகு செல்வனை அரசன் இடர் உருன்; அழியான். ஞாயிறு அழிதலும் உண்டோ? இல்லை. தன் கணவன் பெருமையை, அறிவை, ஆற்றலை, ஒழுக்கத்தை நினைக்கின்ருள். அழிவென்பதெதுவும், இடர் என்பதெதுவும் தன் கணவனை அணுகாது-சற்றும் அணுகாது என்னும் துணிவைப் பெற்ருள்; தேறுதல் பெற்ருள்; கவலையின் அகன்ருள்; அச்சத்தின் அகன்ருள்;‡ தன் மனத்தில் பதிவுற்ற அச்சம் எனும் பெருங்கல்லைப் பெயர்த்து எறிந்தாள். கைம்மிகச் செய்த கவலையைத் தூர எறிந்தாள். மனத்திலிருந்த பெரும்பாரம் அகன்றது. பெருமூச்சு வந்தது. நெட்டுயிர்ப்பு உணர்த்தும்

* தொல். மெய்ப்பா. 270. † தொல். மெய்ப்பா. 270

‡ தொல் மெய்ப்பா. 271.

மனநிலையைக் காண்க! அரசியின் கருதல்நிலையைக் காண்க! ஆராய்ச்சி நிலையைக் காண்க! விரைந்து தொழிற்பட உள்ளம் தேறுதல் அடைந்த நிலையைக் காண்க! உயிர்ப்பின் நிலையைக் காண்க!*

படத்தைக் கருதக் கருத, ஆராய்ச்சி எழஎழ, அச்ச நினைவுகள் அகன்றன; துயர நினைவுகள் ஒழிந்தன. கண்ணீர் அரிப்பனியானது; இடைவிட்டு இடைவிட்டு விழும் துளிகளாயின†. அரசி கண்ட ஒப்புமை, அரசி ஒப்பு வழி உவந்தது. அச்சத்தின் அகன்றது எனும் இவை எலாம் கண்ணீரை அடைத்தன; கண்ணீர் கலுழ்கை நின்றது. ஆனால், முன்பு வந்த கண்ணீர்த் துளிகளில் சிலவற்றைக் கண்ணிதழ்கள் தாங்கி நின்றன. அவ்வாறு தாங்கும் துளிகள் கண்ணிதழின் ஓரமெல்லாம் தங்கா; கண்ணின் மூலைகளில் தங்கும்; அரசியின் கடைக்கண்ணில் அவை தங்கியிருந்தன; அரசியின் செவ்விய விரல்கள் கடைக்கண்ணைச் சேர்கின்றன; ஆங்கிருந்த நீர்த்துளிகளைத் துடைக்கின்றன. அவ்விரல்கள் துடைத்ததோடு அமைந்தனவோ? இல்லை. துடைத்த துளிகளைத் தூரத்தே தெறித்தன; எறிந்தன. துடைத்ததோடமையாது, அத்துளிகளை அரசி ஏன் தெறித்தனள்? "என் மனத்தில் பதிந்திருந்த கவலையும் அச்சமும் முன்பே தெறித்தோடின. நீர் ஏன் இங்குளீர்? உம்மையும் தூர எறிவேன்!" எனத் தெறித்தாள் போலும்!

---

* தொல். மெய்ப்பா. 260. 'கருதலாராய்ச்சி விரைவுயிர்ப் பெனஅ.' † புறநா. 154 : 5. உரை.

"ஞாயிறு போன்ற அரசன் செய்வினைக்கு அஞ்சியது, என்னே பேதைமை! பேதைமை உணர்த்தும் பேதைத் துளிகாள்! அகலுவீர் அகலுவீர்!" எனத் தெறித்தனள் போலும்!

இவ்வாறு தேறுதல் பெற்று ஆற்றியிருந்த அரசி, என்ன செய்கின்றாள்? சேடியர் பின் வரச் சென்று உலாவுகின்றனளா? செவிலியரோடு சிறப்புறக் குலாவுகின்றனளா? இல்லை. படமன்றோ இவளுக்கு நல்லறிவு தந்தது! படக்காட்சிக்குச் சென்றனளோ? இல்லை. புலம்போடு வதிகின்றாள். சூழ் இய செவிலியரைக் காண்கிலோம். அடி வருடிய சேடியர் அங்கிலர். எங்கே சென்றனர்? யாண்டு ஒளித்தனர்? கண்ணினின்றும் துடைத்தெறிந்த கண்ணீர் சிதறியவாறு இவர்களும் தெறித்து ஓடினர் போலும்! அரசியின் அரும்படர் தீர்ந்ததெனை அகன்றனரோ! அரசியின் இன்னு அரும்படரும் தீர்ந்ததோ? இல்லை. அவள் மனம் அரும்படரை மூடிற்று; ஆறுதலைத் தந்தது; அமைதியைத் தந்தது. இத்தேறுதல் அடைய அவள் மனம் சென்றவழி எல்லாம் சென்றோம். தேறுதல் அடைந்த பின் இம்மனத்தில் என்ன நிகழ்கின்றதெனக் காண்போம்:

அரசி ஏன் தனிமையுற்றாள்? ஏன் சேடியர்களை - செவிலியர்களை - விலக்கினாள்? அல்லால், அவர்களே ஏன் நீங்கினார்கள்? அரசி வாய் திறந்து ஒரு சொல்லும் ஓர் உரையும்-வழங்கினாள் இலள்!

இவ்வரசியின் "கட்டுரையின்மை"யைக்* காண்கின்றோம். இத்தனிமையின் இயல்பு என்ன ? இத்தனிமையை எவர் விரும்புவர் ? ஏன் விரும்புவர் ? தனிமையுற்ற அரசியின் தன்மை என்ன ?

தனிமையை - தனியே இருப்பதைச்-சிலரே விரும்புவர். மனம் ஒருமைப்பட்டவர் - அல்லால் மனத்தை ஒரே வழியில் நிறுத்த முயல்பவர் - தனிமையை விரும்புவர். அவர் எவருடனும் உரையாட எண்ணார் ; பிறர் எவரும் அருகிருக்க விரும்பார். பிறர் அருகிருப்பின், அவர் சிறு சொல்லும், சிறு புடை பெயர்ச்சியும் ஒருமைப் பேற்றிற்கு ஊறு செய்யும். இத்தன்மையை வேண்டி அழுவார் பலர் ; இல்லறம் துறந்தார் பலர் ; காட்டிடைச் சென்றார் சிலர் ; மலையிடைத் திரிந்தார் சிலர் ; முழையிடைப் புகுந்தார் சிலர். அரசியோ, இல்லிடத்தே இத்தனிமையைப் பெற்றாள் ; தன் கணவனுடன் உறங்கிய கட்டிலிடத்தேயே தனிமை எய்தினள். தனிமை என்னும் உயர்நிலையோடு† தான் வேறு தனிமை வேறு எனாது அரசி உறைபவள் ஆயினாள். அரசியின் மனம் ஒருமை எய்தியதை மெய்ப்பாடுகளால் அறிந்த சேடியரும் செவிலியரும் தாமே அகன்றனர் போலும் ! தாம் அருகிருப்பின், அவ்வொருமை கலையும் என அகன்றனர் போலும் ! ஓவியம் 'அரசியின் அச்சத்தை அகற்றியது. அச்சம் அகல அகல அரசி

* தொல். மெய்ப்பா. 271. † 'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.' தொல். சொல். 92.

யின் எண்ணங்கள் கணவன்றன் பெருமை வினைத் திறம் முதலியவற்றின்மேற் சென்றன. ஒன்றும் வாய் பேசாது அவள் மனம் தன் கணவனிடமே சென்றுவிட்டது ; அவனையே நினைந்து நின்றது போலும் ! "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே !"* கணவனோடு ஒருமைப்பட்டனள் ; பிரிவில் கூட்டம் †எய்தினள்.

புலவர் பெருமான் மன நூல் வல்லுநர் போலும் ! ஒருமைப்படும் மனத்தின் நுட்பமெல்லாம் காட்டுகின்றனர். துன்பத்திற்படும் மனத்தின் இயல்பெல்லாம் காட்டுகின்றனர். புலவர் புறத்தழகைக் களைந்து அகத்தழகைக் காட்டும் திறத்தைக் காண்மின் ! புறத்தணி கலன்களை நீக்கி, அகத்தணி கலன் அணிவித்ததைக் காண்மின் ! இவ்வரசிக்கு 'நலங்கிளர் அரிவை' எனப் பெயர் வழங்குகின்றனர்; இவ்வரிவைக்கேற்ற அழகிய பெயரை தெரிந்தெடுத்தார். இவ்வரிவையிடம் எந்நலம் கிளர்கின்றது ? துன்பத்தின் நலம் கிளர்கின்றது ; துன்பம் தரும் தூய்மை நலம் கிளர்கின்றது. பெண்மை நலம் கிளர்கின்றது ; பெண்ணின் பெருநலம் கிளர்கின்றது ; கற்பின் நலம் கிளர்கின்றது. இந்நலம், உடல் நலமன்று; உயிர் நலம். பொறியின்பம் தரும் நலம் அன்று ; உயிரின்பம் தரும் நலம். இஃது ஈருயிர் ஒருயிரான நலன் ; இரண்டறக் கலந்த

* அப்பர் தேவா. 6-ஆம் திருமுறை, திருஆரூர் - 25.

† தொல். மெய்ப்பா. 271.

நலன் ; ஒருமை பெற்ற நலன் ; உயர்திரு நலன். இங்கு நாம் சற்று நின்று இந்நலங்கிளர் அரிவையை நோக்குவோம் ; நக்கீரர் தரும் நோக்கைக் காண் போம் : தனித்துத் தனித்தும், பிரித்துப் பிரித்தும் நாம் இவ்வம்மையைக் குறித்துக் கண்டனவற்றை எல்லாம் ஒருசேரக் காண்போம் :

கோப்பெருந்தேவி அரசிக்குரிய ஆடை ஒன் றும் அணிந்திலள் ; அரசிக்குரிய அணிகலன் ஒன் றும் பூண்டிலள்; எளியோர்போல நூற்புடைவை ஒன்றை உடுத்தியுள்ளாள். அப்புடைவையும் அழுக்கேறி உள்ளது. இவள் மேனியும் மாசூர்ந்து மங்கித் தோன்றுகின்றது. இவள் முகத்தைக் காண்போம். துயருண்ட முகம்! நெற்றியில் கூந்தல் உலறிக்கிடக்கின்றது. கண்ணீர் வழிகின்றது.கவலை கைம்மிகுந்தது. செவிலித்தாயர் கவலையுற்றுச் சூழ்ந்து நிற்கின்றனர். அவர்கள் என்ன கூறியும், அரசியின் துயர் தணியவில்லை. மனம் ஒருமைப்பா டெய்திலது. அந்தோ ! துயருற்றுத் தவிக்கின்ருள். திங்களோடு உரோகிணி அமைந்த படம் இவள் கண்ணிற் படுகின்றது. அதைக் குறித்த நினைவுகள் எழுகின்றன. நினைப்பில் அரசி ஆழ்ந்தாள், நினை வனைள் கண்களைக் காண்மின் ! கருதிக் கருதி, ஆராய்ந்து நினைவில் ஆழ்ந்திருக்கிருள் அரசி.அவள் கண்கள் அசைவற்றிருக்கின்றன. அதோ ! அவை புரள்கின்றன : அசைவற்றிருந்த கண்கள் புரள் கின்றன ; படத்தை நோக்குகின்றன. நோக்கு வதைக் குறிமின். அதோ ! மார்பு உயர்கின்றது.

நெட்டுயிர்ப்புத் தோன்றுகின்றது. பெருமூச்சு விடுகின்றாள். அம்மம்ம! அரசியின் மனத்திருந்த பெருஞ்சுமை அகன்றது. கண்ணீர்நின்றுவிட்டது. கண்ணீர்த் துளிகளிற் சில கடைக்கண்ணில், தங்கியுள்ளன. அரசியின் விரல்கள் அவற்றைத் துடைத்து எறிகின்றன. மனமும் ஒருமைப்பாடு எய்தியது; பிரிவில் கூட்டத்துள் இழுத்துச் செல்கின்றது. செவிலியர் அகன்றனர். சேடியர் விலகினர். தனியே வதிகின்றாளை நோக்குமின்! நோக்குமின்! கீரர் தரும் நோக்கைக் காண்மின்!

அரசியின் துக்க நிலையும் துக்கங்கொண்ட மனநிலையும் அரியன. நக்கீரர் இவற்றை உணர்த்தும் முறையும் அரியது. 'ஐயகோ!' என்று அரசி அரற்றவில்லை; "கணவனை என்று காண்பேன்!' என்று ஏங்கவில்லை; ஏங்கி அழவில்லை; வயிற்றைப் பிசையவில்லை; வாயைத் திறக்கவில்லை; தரையில் விழவில்லை; விழுந்து புரளவில்லை; எழுந்து புலம்பவில்லை; கண்ணீர் ஆறெனஓடவில்லை; கடலெனத் தேங்கவில்லை. கண்ணீர் வழிவதைக்கூட நக்கீரர் நாம் காண விட்டிலர். கண்ணீரிற் சில துளிகளையே இறுதியிற் காட்டுகின்றார்; புனைந்துரை எவையும் இன்றி, எவ்வாறோ நம் உள்ளத்தே துன்ப உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றார்; அரசி துன்புறுவதை எல்லாம் நாம் நேரே காணுமாறு செய்கின்றார். அரசி துன்புறும் முறையிலும் பெருந்தன்மை தோன்றுகின்றது; அமைதி தோன்றுகின்றது; அழகு தோன்றுகின்றது. இவற்றை

எல்லாம் நக்கீரர் மெய்ப்பாடுகளைக் கொண்டே உணர்த்துகின்றார். இவரிடம் ஆடல் கொளப் புகுவார் மெய்ப்பாடுகள் கற்கத் தகும். ஆடல் கற்பிக்கும் நட்டுவரும் இவரிடம் நட்டுவம் பயிலத் தகும்!

ஓவியத்திற்கு நக்கீரர் தந்த உயர்வு நாம் ஊன்றி உணர்த்தக்கது. விசயைக்குக் கூளியின் உருவம் கொண்டதொரு தெய்வம் தோன்றித் தேறுதல் அளித்தது. அனுமான் கடல் தாண்டிச் சென்றும், கணையாழி காட்டியும் சீதைக்கு ஆறுதல் அளித்தான். அவர்கள் பெற்ற ஆறுதலை ஓவியம் இவ்வரசிக்கு அளித்தது. ஓவியம் அரசியின் மனத்தை மாற்றிய தன்மையைக் கண்டோம்; வன்மையைக் கண்டோம். ஓவியம் யாதானல் என்ன? ஓவியம் தரும் நலம் ஓவியத்தை உணர்வோன் ஆற்றற்குத் தக்கதாகும். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே."* ஓவியத்தை இங்கே பொருத்திக் காட்டி, அது மனத்தை மாற்றுமாறு அமைத்த புலமை புகழத் தக்கது! கீரர் காலத்தே ஓவியக் கலை ஓங்கித் தழைத்தது போலும்! ஓவியத்திலிருந்தே கீரர் உவமையும் தந்தார். கீரர் ஓவியம் வல்லுநர் போலும்! அன்றேல், ஓவியக்கலை எல்லாம் உற்றறிந்தவர் போலும்!

## மன நிலைகளின் பொருத்தம்

புலவரையும், அவர் புலமையையும் பற்றிய புற நினைவுகளை நீக்கிப் பொருள்மேல் செல்வோம்:

* தொல். சொல். உரி. 393

புலவர் கூறிய மூவகை மகளிரின் தன்மைகள் உலக இயற்கையோடு பொருந்தியவோ, அல்லால் புனைந்துரையோ, ஆராய்வோம் :

மகளிர் வழிபாடியற்றக் கண்டோம். புலவர், வழிபாடியற்றும் தன்மையை மகளிர்க்கென ஏன் அமைத்தனர்? ஆடவர் வழிபாடியற்ற வல்லார் அல்லரோ? ஆடவர் எவரும் இப்பாட்டில் வழிபாடியற்றக் காண்கிலோம். வழிபாட்டிற்கும், மகளிர் மனத்திற்கும் இயற்கையே இயைபு உண்டு போலும்! வழிபாடியற்றுதற்கு வழிபடும் மனமே தேவை. பிடித்தது சலியா மனம் வேண்டும்; கொண்டது விடாத கொள்கை வேண்டும்; பசுமரத்தாணிபோலப் பதியும் அன்பு வேண்டும். இவை ஆடவரினும், மகளிர்பால் மிக்குக் காணப்படுவன. அறிவியல் குழப்பங்களால், அரசியற் குழப்பங்களால் ஆடவர் மனம் எளிதில் அசைவது. ஆளும் அரசற்கேற்ப, அரசியல் தலைமைக் கூட்டத்திற்கேற்ப, ஆடவர் கொள்கைகள் மாறுவன; வழிபாடுகளும் மாறுவன. இம்மாறுதல்கள் இழிந்தன ஆகாவிடத்து. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' எனும் உயர் பெயர் பெறுவன. இத்தகைய மாறுபாடுகள் மகளிரை எளிதில் அணுகா. இன்றும் வழிபாடியற்றும் ஆடவரினும், வழிபாடியற்றும் மகளிரே அதிகம் எனவும் கூறத் தகும். அறிவியல் மிகுந்த இந்நாளிலும் வழிபாடு சிலரிடத்தேனும் சிறக்கத் தோன்றுகின்றது. வழக்கொழிந்து இறந்துபடவில்லை. இது நிலைத்துள்ளது யாரால்? மகளிரால். இதனைக் காத்தளித்தவர் யாவர்?

மகளிரே. மகளிர் மனத்தின் தன்மையை எவ்வாறு நுணுகிப் புலவர் ஆய்ந்துள்ளார் என்பதைக் காண்க! வழிபாட்டை மகளிரிடம் அமைத்துக்காட்டிய இயற்கை நலனைக் காண்க!

அழகினை வேண்டும் ஆவலும், அது தரும் வீண்மையும் மகளிர்க்கே மிகவும் பொருந்தியவை. அழகு செய்துகொள்ளும் ஆடவரும் உலகில் காணப்படுகின்றனர். எனினும், அவர் சிலரே. இத்துறையில் ஆழ்ந்தவர் மகளிரே; ஆடவர் அல்லர். ஆடவர் வேண்டுவது ஆண்மை. ஆண்மையே ஆடவர்க்கழகு செய்வது. மகளிர் வேண்டுவது உடலழகு, உடையழகு, அணியழகு. வருவாய் மிக மிக, பொருள் சேரச்சேர, இவ்வழகு செய்துகொள்ளும் ஆவல் வீண்மையில் முடிகின்றது. இஃது இவ்வாறு முடிவதை இன்றும் காண்கின்றோம். இவ்வீண்மையை மகளிர்பால் புலவர் பெய்தது இயற்கைக்கு மிகவும் இயைந்தது.

அரசிபாற் காட்டும் கற்பின் திறமும் அரியது: அரியதெனினும், இஃது உலகிற் காணப்படுவதொன்றே. அரசி நோன்பு பூண்டிருந்தாள் எனக் கண்டோம். அந்நோன்பிடைக்கொண்ட தெய்வம் யாது? வழிபாடியற்றிய மகளிர் ஒளி வடிவில் இறைவனை வழிபட்டனர். இவ்வரசியோ, உருவ வழிபாட்டைக் கடந்தாள் போலும்! இவள்நோன்பிடை உருவ வழிபாட்டைக் காண்கிலம்; தெய்வ வழிபாட்டையும் காண்கிலம். இவ்வம்மை, 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்' போலும்!

வழிபாடியற்றும் மனம் அறிவியல் துறைகளில் ஈடுபடுங்கால் அழகில் ஈடுபடுகின்றது ; இசையில் ஈடுபடுகின்றது ; கலைகளில் ஈடுபடுகின்றது ; உருவ பழிபாட்டைக் கடக்கின்றது. கண்ணின்முன் ஓர் உருவம் இன்றியே மனத்தால் வழிபடும் நிலையை அடைகின்றது ; ஒருமைபெறும் தன்மையை அடைகின்றது. மன வளர்ச்சியின் இயல்பை, மனம் முதிரும் தன்மையை, மன மாற்றங்களின் இயல்பை நக்கீரர் இம்மூவகை மகளிர்பால் உணர்த்தும் நீர்மையை நினைக !

இசையையும் ஓவியத்தையும் மகளிர்பால் புலவர் அமைத்துக்காட்டுகின்றார். இசை தரும் இன்பத்தைப் பெற்றோ, பெருமலோ இப்பாட்டில் வருந்தக் காண்பவர் மகளிர் ; ஆடவர் அல்லர். ஓவியத்தைக் குறித்து நினைந்ததும், நினைந்து உணர்ந்ததும் ஒரு மகளின் செயல் ; ஆடவன் செயலன்று. ஆடவர் தம்மினும் மகளிர்க்கே இவை பொருந்துவன என்பதோ புலவர் கருத்து !

## பெண்மை

கீரர் பெண்மைக்குத் தந்துள்ள பெருமை பெரிது. இவர் உணர்த்திய பெண்மை, "வெண்ணெய்க் குன்றெரி யுற்றென்ன விரைந்து பின் ஏகும்," பெண்மை அன்று ; கற்பெனும் திண்மையில் திளைக்கும் பெண்மை. "மங்கையரால் வரும் காமமில்லையேல், கேடெனும் நாமமில்லை, நரகமு மில்லையே" என்று கீரர் கருதார் போலும். மங்கையர் இல்லெனில், இசையில்லை, ஓவியமில்லை, அழகில்லை, அன்பில்லை, மனநலமில்லை,

மாந்தரும் இல்லை எனக் கொள்வார் போலும்! கீரர் காட்டிய பெண்மைக்கும் பேதைமைக்கும் தூரம் அதிகம். பேதைமையை வழிபாடியற்றும் மகளிரிடம் காண்கிலோம்; அரசியிடம் காண்கிலோம். கீரர் பேதைமையைப் பெண்மையினின்று அறவே அகற்றியுள்ளார். அகற்றியதோடமையார்; பேதைமையை ஆண்மக்களிடமே பெய்து காட்டுகின்றார். பேதைமையைக் கோவலரிடம் கண்டோம். கள் உண்டு ஆடவர் திரிவதைக் காட்டுகின்றார்; பெண்களிடத்தில் தீய ஒழுக்கம் எதையும் காட்டினாரிலர். இங்குப் பெண்மையின் தூய்மை ஒளிர்கின்றது; பெண்மையின் பெருமை பிறங்குகின்றது; பெண்மையின் திண்மை திகழ்கின்றது. கீரர் பெண்மைக்குத் தந்துள்ள உயர்வை உன்னுக!

## உயர்குடிப் பிறப்பு

கோப்பெருந்தேவியையும் அவள் மனம்சென்றடைந்த அரசனையும் சேர்த்துக் கருதுவோம். இவர்கள் உயர் குடிமக்கள். இவர்கள் உறுதுயர் இப்பாட்டில் யார் உற்றனர்? கோவலர் துயரத்தைக் கண்டோம். இந்த உயர் குடிமக்கள் பெற்ற துயருக்குக் கோவலர் துயரும் ஈடாகுமோ! 'வாழ்ந்து போதி!' என வெள்ளத்தை முனிந்து கோவலர் அப்பால் சென்றனர். அரசனோ, துன்பத்தோடு போர் தொடுத்து நிற்கின்றான். அரசன் வெல்வானோ, துன்பம் வெல்லுமோ அறியோம். அரசனிலும் அதிகம் துன்புற்றனள் அரசி. அந்தோ! உயர்குடி மாந்தர் ஏன் இவ்வாறு துன்புறு

கின்றனர் ? "தெறுவதம்ம இத்திணைப் பிறத்தல் லே."* உயர் குடிப்பிறந்தார் வாழ்வின் கோவலர் வாழ்வும் இனிதே போலும் ! "மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பமல்லது தொழுதக வில்லென "† அன்றோ நக்கீரர் இங்கு உலகிற்கு உணர்த்துகின்றார் ?

ஓங்கிய சிறப்பில் உயர்ந்த கேள்வி **மாங்குடி மருதனார்** அரசன் ஒருவனுக்குப் பெரும்பேர் உறுதி வேண்டியது, நாம் இங்கு நினைத்தற்பாலது "இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய மணங் கமழ் தேறல் மடுப்ப நாளும் மகிழ்ந்தினிது உறை மதி !"‡ என்று அவர் வேண்டினர். நக்கீரர் ஈண்டு அவ்வாறு வேண்டார். அந்தோ ! உயர்குடி மக்கள் இப்பாட்டில் படும் பாடு பெரிது, பெரிது ! நக்கீரர் உயர்குடி மக்களை உறங்கவும் விடார். **நப்பூதனார்** தம் அரசனைச் சிறிது உறங்கவிட்டார். நக்கீரரோ, அரசனைப் படுக்கவும் விடார்; நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளவிடார்; 'திரிக! திரிக!' எனத் துரத்துகின்றனர். அந்தோ! உயர்குடிப் பிறந்தார் நக்கீரருக்கு என்ன தீமை இழைத்தனர் ! புலவர் ஏன் அவர்களைத் துன்புறச் செய்கின்றனர்? 'உயர்ந்தார் திருந்தினால் உலகம் திருந்தும்,' என்பது நக்கீரர் கொள்கை போலும் ! உயர்குடி மக்களே உலகிற்கு வழி காட்டுவார் எனக் கொண்டனர் போலும் ! ஏழைமக்கள் உயர்குடி மக்களின் பின்னே கண் மூடிச் செல்பவர்கள். அவர்கள் வயிற்றிற்குத்

---

* குறுந்தொகை, 45. † சிலப்பதிகாரம், காட்சிக் காதை, 103-104. ‡ மதுரைக்காஞ்சி, 779-781.

தோடவே வாழ்நாள் போதுவதன்று. அவர்கள் எண்ண, எண்ணித் துணிய, காலமும் உண்டோ ? உயர் குடிப்பிறந்தீர், நீவிர் மருதனுரைப் புகழ்வீர்; பூதனுரைப் போற்றுவீர்; கீரனுரை வெறுப்பீர். உம் வெறுப்பும் விருப்பும் நக்கீரரை என் செய்ய வல்லன ? இறைவனையும் எதிர்த்தவர் கீரர். "முற்றும் நீர் கண்ணுனுலும் மொழிந்தநும் பாடல் குற்றம் குற்றமே!" என்று கூறிய முழுவலிப் புலவர் கண்டீர் ! உயர்குடிப் பிறந்தார்க்கும் உலகத்தார்க்கும் கீரர் கூறிய உறுதியே உறுதி ! "ஆகுல நீரபிற" தொழுமின் கீரரை ! கீரர்க்கு எடுமின் விழா ! எடுமின் சிலைகள் ! எடுமின் கோவில் ! கோவில் கொளத்தக்கவர் கீரர்.*

* மதுரை மேலமாசி வீதியின்கண் நக்கீரருக்கு ஒரு கோவில் உள்ளது. இதனை இப்போது 'சங்கத்தார் கோவில்' எனக் கூறுகின்றனர்.

# IV

## ஏனைய உயிர்த் தொகுதி

மக்கள் தொகுதியின் இயல்பினைக்காண நெடு வழிச் சென்றோம். ஆடவரியல்பினைக் கண்டோம். மகளிரின் தன்மையைக் கண்டோம். இவற்றோடு உலகஇயல்பு முடிந்ததோ? இல்லை. உலகில் காணப் படும் உயிர்வகைகளுள் மாந்தராவார் சிலர். மாந்த ரின் அதிகம் மாந்தரல்லா ஏனைய உயிர் வகை. இவை வேறு வேறு இயற்கைய; வேறு வேறு உருவின; வேறு வேறு வகையின. இவைகளிற் சிறந்தன சில; சிறவாதன பல. இவற்றுட் சில வற்றையேனும் அறிந்தாலன்றி, உலகியல் அறிவு நிறைந்ததாகாது; முதிர்ந்ததாகாது. மக்களல்லாப் பிற உயிர்களை மா, புள், மரம் என முப்பாற்படுத் திக் காணுதல் மரபு. நக்கீரரும் மா, புள், மரம் என்பவற்றுட் சிலவற்றை எடுத்துக் காட்டிச் செல்கின்றார். அவர் காட்டியவற்றுள் கருதத் தக் கன - கருதி ஆராயத்தக்கன - பல உள.

### மா

இப்பாட்டிற் காணப்படும் விலங்குகளுள் கீரர் பசுவைப்பற்றியும் பிடியைப்பற்றியும் கூறி யவை முக்கியமானவை; நுட்பம் வாய்ந்தவை. இவற்றின் தன்மையைக் காண்போம்:

பசு அன்பிற் சிறந்தது ; விலங்குகளில் ஒரு தனி இயல்புடையது ; பன்னூறு ஆண்டுகளாய் மனித வாழ்க்கையோடு ஒன்றுபட்டு வாழ்வது. கன்றை உடைய ஆவின் அன்பு, மனிதன் இறைவன்பால் கொள்ளும் அன்பிற்கு எடுத்துக்காட்டாக ஆளப்படுவது. கற்றுமனமெனக் கதறியும் பதறியும் அன்புசெய் நிலையை மாந்தர் வேண்டுவர். ஈன்ற கன்றிடம் ஏனைய விலங்குகளைவிட மிகுபற்றுடையன பசுக்கள். இவை, "குழவி உள்ளி நிரையிறந்து" ஓடி வருவன. சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றுகள் தாயைப் பிரிந்து அலமருவன. இவை பெறும் பிரிவின் துன்பம் பெரிது. கதறவும் பதறவும்பெறும் தாயின் துன்ப நிலையும், தாயைக் காணக் கன்று தவித்து நிற்கும் நிலையும் உள்ளத்தை உருக்குவன. பின் கன்றும் தாயும் சேருங்கால் இவை பெறும் இன்ப நிலையும் கருதத்தக்கது. தாயின் செயலெலாம், சேயின் செயலெலாம் அன்புநலம் கனிவன ; பாமணம் கமழ்வன ; புலவர் பலர் தம் பாக்களில் இடம் பெறுவன. ஆனல், இவை நக்கீரர் தம் 'வாடை'யில் இடம் பெற்றில. இவற்றிற்கு இப்பாவில் இடங் கொடாததோடு கீரர் அமைந்தார் இலர் ; இச் செயல்களுக்கு மாறுன செயலைக் காட்டுகின்றுர். கறவை கன்று கோள் ஒழிந்தது. இம்மட்டோ ! கன்றை உதைத்தும் தள்ளிற்று. இஃதென்ன மாறுபாடு ! ஏன் இவ்வாறு முரண்பாடு உணர்த்துகின்றுர்? இவ்வன்பின் செயலெலாம் புலவர் பலநும் மென்று மென்று சுவை போக்கியவை என விலக்கினரோ ! பிறர் மென்று துப்பியவை எனத்

தாம் கையாளக் கூசினரோ! பிறர் கூறும் முறையை இப்புலவர் எளிதில் கையாளுவதில்லை. வாடைக்குளிர் பசுவின் அன்பையும் மாற்றிவிட்டது என்று உணர்த்துகின்றாரோ! அல்லால் துன்பம் வருங்கால் அன்பெலாம் பறக்கும் என்று உணர்த்தப் புகுந்தார் போலும்! ஈதன்றி, இதனால் பெறப்படுவன வேறு எவையேனும் உளவோ? மேற்சென்று காண்போம்:

தாயன்பில் சிறந்த பசுவைப்போலக் காதல் அன்பில் சிறந்தன களிறும் பிடியும். இவைதம் காதலன்பு அறிவோடியைந்த காதலன்பு. இவ்வன்பின் இயல்பை இலக்கியங்களிற் பல இடத்தும் காணலாம்.

'பிடியூட்டிப் பின்உண்ணுங்களிறு!'* என்னே இவைதம் அன்பும் அறிவும்! தான் உண்ட பின்னரே தன் மனைவி உண்ண வேண்டுமென்னுங் கோட்பாடுடைய மனிதனும் உளன்; மனைவியுடனுண்ணுக்கோட்பாடுடையானும் உளன். களிறோ, பிடியுண்டபின்னே தான் உண்ணும். இவ்வொழுக்கத்தையும் அன்பையும் எவரிடம் கற்றவோ இவ்விலங்குகள்!

பின் உண்பது ஒன்றோ களிற்றின் சிறப்பு?

> 'புன்தலை மடப்பிடி யுணீஇய
> படிஞிமிறு கடியுங் களிறு'†

---

* கலித்தொகை, 11 : 9. † அகம், 59 : 6, 9.

பிடி உண்ணும் வரையில் வண்டுகள் அதன் மேல் படியாதபடி அவற்றை ஓட்டி நிற்கும்; இவ்வாறு ஓட்டி நிற்பதோடு அமையுமோ? அமையாது; பிடியை உண்பிக்கும்; உணவை எடுத்து ஊட்டும். 'ஈயினம் இரிய வீசி, வயப்பிடியின் வாயுறக் கொடுத்த செவ்'வியும் உளது. 'பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை, பருகவாயினிற் கையினின் றளிப்பது பாராய்'* எனக் கம்பர் காட்டுகின்றார். பிடியை இவ்வாறு உண்பிப்பதன்றி, அதனைக் களிறு காக்கும் காதற் பெருநலனும் கருதத்தக்கது. 'குழவிப்பிடி குஞ்சர மாழ்குமெனத் தழுவிச் சுடு வெவ்வழல் தாங்குவன' களிறுகள்; தம் பிடிகளைத் காணுவிடிலோ, அழைத்து அழைத்துத் திரிவன. 'பிழைத்த பிடியைக் காணுதோடிப் பெருங்கை மதவேழம் அழைத்து'த் திரிந்து உறங்கும் காட்சி, ஞானபோனகர் மனத்தையும் கவர்ந்தது.

பிடிக்கும் களிற்றிற்கும் நிகழும் காதலன்பு இத்திறத்தது; அறிவோடியைந்த அன்பின் திறத்தது. பிடியைக்கூறிய நக்கீரர் ஏன் இக்காதல் அன்பின் ஒரு சிறிதையும் உணர்த்திலர்? இக்காட்சிகளைக் கண்டிருந்தாலன்றே இவை பாவலர்தம் பாட்டில் இடம்பெறும்? இத்தகைய காட்சிகளை நக்கீரர் கண்டிலரோ? கண்டிலர் என்று கூறுதற்கில்லை. மற்றோர் இடத்து இக்காதல் அன்பை இவர் சிறப்பித்துக்கூறும் பாட்டு மிக அழகியது!

* கம்ப. அயோ. சித்திர. 10.

163934

வாடைப் பாட்டின் பொருள் திறத்தை ஆய்ந்து தெளிதற்கு அப்பாட்டின் கருத்தும் அறியற் பாலது. அதனையும் காண்போம் :

'நனந்தலைக் கானத்து யாளி யஞ்சிப்
* * *
பொறிநுதல் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின் ஏமுறத் தழூஉவக்
கடுஞ்சூல் மடப்பிடி நடுங்கும்'*

எனக் காட்டுகின்றார். காதற்பிடியும் வயக்களிறும் யாளியைக் காண்கின்றன. பிடி நடுங்குகின்றது. அதன் நடுக்கத்தைப் போக்கக் களிறு அதனை ஏமுறத் தழுவிக்கொள்கின்றது. தழுவியும்,பிடிக்கு நடுக்கம் தீரவில்லை. இக்களிற்றின் உள்ளப் போக்கைச் சற்று நினைக ! யானைகளின் பெரும் பகை, யாளி.

'யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விழும்பிளிற்றி யாங்கே.'†

யாளியைக் கனவில் காணினும் யானை இறக்கும்என்பர். இப்பெரும்பகை விலங்கு எதிரே நிற்கின்றது ; இன்னும் சற்று நேரத்தில் பிடியையும் களிற்றையும் கொன்று வீழ்த்தத்தக்கது. சில வேளைகளில் களிறுகள் யாளியை எதிர்ப்பதும் உண்டென்பர். யாளியைக் கண்ட இக்களிறு யாது

*அகம். 78. †யாப்பருங்கலம், 67 உரைமேற்கோள்.

செய்தது ? பயந்தோடிற்றோ ? இல்லை. யாளியை எதிர்த்ததோ ? எதிர்த்ததும் இல்லை. தன் பிடியைச் சென்று தழுவியது ; அதனை ஏமுறத் தழுவிக்கொண்டது. யாளியைப் பொருட்படுத்திற்றில்லை. "என்னை யாளி கொல்லின் கொல்க! என் பிடியை விட்டு யான் பிரியேன் ! இறப்பின் இருவேமும் இறப்பேம் ! பிடியைத் தழுவியவாறு இறத்தலின் இனிய சாக்காடும் உளதோ ?" என எண்ணிற்றுப் போலும்! 'யாளியீர், யாம் உமக்கு அஞ்சுவேம் அல்லேம். நமனையும் அஞ்சேம். காதலாற் கட்டுண்டு ஏமுறத்தழுவியவாறு இறத்தலின் விழுமிய இன்பமும் உளதோ ? எழுக ! பாய்க ! கொல்க!' என்று அறைகூவுவனபோல இவை நிற்கின்றன. உயிரைப் பொருட்படுத்தாது இவை ஒன்றை ஒன்று, தழுவிநிற்கும் நிலையை நோக்குக! இந்நிலைக்கு எதனை ஒப்பிடத்தகும்? இது வண்டிற்கஞ்சி நடுங்கிய சகுந்தலையைத் துஷ்யந்தன் தழுவிநின்றதை ஒக்குமோ ? ஒவ்வாது. அஃது அவ்விருவரும் பொறியின்பம் கருதித் தழுவியநிலை என்பர். நக்கீரர் காட்டும் நிலையோ, பொறியின்பத்தைக் கடந்த உயரிய காதல் ; உயிரையே பொருட்படுத்தாத விழுமிய காதல். தன் காதலியுடன் புதைக்கப்படவேண்டும் என்று கருதிச் சென்று இறந்த 'உரோமியோ' (Romeo) மனநிலைக்கு ஒருவாறு ஒப்புடைத்து இக்களிற்றின் மனநிலை. ஷேக்ஸ்பியர் மக்களிடைப் பெய்துகாட்டிய தூய காதலைக் கீரர் விலங்கிடைப் பெய்துகாட்டுகின்றார்; அச்சத்திடத்

தில் வீரத்தைக் காட்டுகின்றார்; அச்சத்திடத்தில் அன்பைக் காட்டுகின்றார்; ஈர அன்பினில் வீரத்தைக் காட்டுகின்றார்.

ஏனைய புலவர் கூறும் களிற்றின் காதல்நிலையையும் நக்கீரர் காட்டும் காதல் நிலையையும் சீர்தூக்கித் தெளிக! நக்கீரர் காட்டும் காதல், செய்கடன் அறிந்து தெளிந்த காதல்; கலங்கா உள்ளத்தில் கனிந்த காதல்; வீரக்காதல். இங்கே காட்டிய வீரம் பிறர்க்குத் துன்பம் செய்யும் வீரமன்று; பிறரைக் கொல்லும் வீரமன்று; கொன்றன்ன இன்னா வரினும், கொண்டது விடாத வீரம்; துன்பெலாம் தான் பொறுத்து நிற்கும் வீரம். இவ்வீரம் உடல் வலி காட்டும் வீரமன்று; உயிர்வலி காட்டும் வீரம்; உயரிய வீரம்; உண்மை வீரம். வெற்றி பெற்ற போது வீரத்தைப் பெய்து காட்டிய புலமைத் திறனை முன்பு கண்டோம். இங்கு 'ஈர அன்பினில் யாதுங் குறைவிலா' வீரத்தைக் காட்டும் விறலையும் காண்க!

இவ்வாறு களிற்றின் காதல் அன்பில் ஈடுபட்ட புலவர், இப்பாட்டின்கண் இக்காதலன்பை ஒருசிறிதும் காட்டினரிலர். ஏன்? இஃது ஆழ்ந்து கருதத்தக்கது. காட்டாது இவ்விலங்கினத்தை அடியோடு இப்பாட்டினின்றும் விலக்கினரா! அஃதுமில்லை. அப்பிடி, தன் காதலன்பைப் 'போக மாற்றி' அவ்வன்பினும் தூய அன்புள் புகுந்தது; அகப்பாட்டின்கண் பொறியின்பத்தைத் தாண்டித் தூய காதலில் திளைத்தது; இப்போது அதனை

யும் கடந்து சென்றது; தன் இன அன்பைத் தாண்டிற்று; அரசன்பால் அன்பு பூண்டது; அவன் பின்னே செல்கின்றது.

இவ்வரிய அன்போடு ஆவின் அன்பை ஒப்பிட்டு நோக்குவோம்: அஃது ஒளி மழுங்கிப் போகின்றது. ஆவின் அன்பு ஒரு சிற்றன்பு; இன அன்பு; பேதைமையன்பு. இப்பேதைமை அன்பைக் குளிர் வருத்தும். துன்பம் வர இவ்வன்பு பறந்தோடும். கோவலர் கோல்கொடு தாக்கின், வாலெடுத்தோடும். பேரன்பு பூண்ட பிடியைக் குளிர் வருத்திற்றில்லை. பேரன்பைத் துரத்தும் ஆற்றல் துன்பத்திற்கில்லை. இவற்றைக் கருதியே போலும் கற்றாவின் அன்பினுக்குக் கீரர் தம் பாட்டில் இடம் தந்திலர்! இடம் தராததோடு அமையாது, இவ்வன்பை வெறுக்கும் நிலையையும் காட்டுகின்றார். அறிவியல் துறையில், உளநூல் துறையில் திருவள்ளுவரையும் கீரர் திருத்துமாறு கண்டோம். அன்பியல் துறையில் மணிவாசகப் பெருமானையும் மாற்றுவார் போலும்! கீரர் கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டார். களிற்றின் மனம்போலக் கலங்காத நிலையை வேண்டுவர் போலும்! வீர அன்பே வேண்டுவர் போலும்! என்னே கீரர்தம் நுண்மாண் நுழைபுலம்! நுண்ணிய புலமை!

## புள்

புட்கள் வாழ்க்கையிலும் புலவர் இத்தகைய நுட்பமே காட்டுகின்றார். விலங்குகளில் காதற்

சிறப்புடைய களிறும் பிடியும்போலப் பறவைகளில் காதல் நலன் பெற்றது புறு எனக் கூறத் தகும். புறுவின் காதற்செயல்களைச் சங்க இலக்கியங்களில் பலவிடத்துங் காணலாம். 'இரை வேட்டெழுந்த சேவல் உள்ளிக் குறுநடைப் பேடை தயங்கூ இருந்து புலம்பக்கூவும்'.* 'வெண்சிறைப் பெடையொடு விளையாட்டு விரும்பிக் கண்பொரிக் கள்ளிக் கவர்சினை ஏறிக் கூப்பிடும்'† ஆண் புறு. இவை காதல்செய் முறையும் அழகிது. பெடையைச் சுற்றிச் சுற்றி ஆண்புறு வணங்கிச் செல்லும்; குனிந்து குனிந்து புலம்புதரு குரலொடு கூவும். 'புன்புறப் பெடையொடு பயிரி இன்புறவு இமைக்கண் ஏதாகின்றோ!'‡ எனப் புலவர் கூறுவர். இவற்றைப்பற்றி நக்கீரர் யாது கூறுகின்றார்? காண்போம்: மனையுறை புறவு இன்புறு பெடையோடு மன்று தேர்ந்து உண்ணவில்லை; இரவும் பகலும் மயங்கிச் செயலற்று விட்டின் கொடுங்கைகளில் கால்மாறி கால்மாறி உறைகின்றன. புலவர் இவற்றின் விளையாட்டை உணர்த்திலர். அன்றிக் காதல்செய் முறையையும் உணர்த்திலர்; ஒன்றின் பிரிவால் மற்றொன்று வருந்துவதைக் கூறிலர்; இவைதம் செயலற்ற நிலையை உணர்த்துகின்றார்.

உணவினால் பெறும் இன்பத்தை இவை விரும்பவில்லை. இரைதேர்ந்து உண்ணும் இன்பத்

*குறுந்தொகை, 155 : 3, 4, 6. †பெருங். 17 : 52; 46 : 50. ‡குறுந்தொகை, 285 : 5, 6.

தினும் உடன் உறையும் இன்பம் பெரிதெனக் கொண்டனவோ ! செயலற்ற நிலையில் புட்களும் இன்பம் காண்பன போலும் ! செயலற்ற நிலையில் புட்கள் ஆணும் பெண்ணுமாய் உடனுறைந்து இன்புறுவதைக் காட்டுகின்றார். இக்காட்சி, அப்பர்பெருமான் 'யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்றபோது' கண்ட காட்சியைப் போலுமோ ! அவர் வரிக்குயில் பேடையோடாடி வருவன கண்டார் ; சிறையிளம் பேடையோடாடிச் சேவல் வருவன கண்டார் ; நற்றுணைப் பேடையோடாடி நாரை வருவன கண்டார் ; விலங்குகள் பறவைகள் ஆணும் பெண்ணுமாய் வருவன கண்டார் ; அவற்றில் அளவுபடாததோர் அன்புடைமையைக் கண்டார்; இறைவன் அம்மை அப்பராம் தன்மையைக் கண்டார்.* நக்கீரரும் புறவின் செங்காற் சேவல் இன்புறு பெடையொடு உறைவன கண்டார் ; அந்நிலையை உணர்த்துகின்றார் ; இஃதோடு நின்றிலர் ; அம்மையப்பராம் தன்மைக்கு மேற்பட்ட நிலையையும் உணர்த்துவார் போலும் ! இதனை மேலே சென்று காண்போம்.

மனையுறை புறவினை விட்டு அப்பால்செல்லின், அரசன் அரண்மனை முற்றத்தில் குறுங்கால் அன்னத்தைக் காண்கின்றோம் ; மயிலைக் காண்கின்றோம். இவற்றின் செயலையும் உற்று நோக்குவோம் ; மயில் தன் பெடையின்றியே செருக்கி

*அப்பர் தேவாரம், 43 : 1-11.

ஆரவாரிக்கின்றது. ஒரே அன்னமுள்ளதுபோலும்! அஃது ஆணோ பெண்ணோ அறியோம்! இஃது தனியே இருந்து வருந்துகின்றதோ? இல்லை. துணையைப் பிரிந்து வருந்துகின்றதோ? இல்லை. கவரிமாவோடு தாவித் திரிகின்றது; உகளுகின்றது; தாவி விளையாடுகின்றது. விலங்கோ, பறவையோ, அவை அவை இனம்பற்றி ஆணும் பெண்ணும் விளையாடுதல் இயல்பு. அல்லால், தாயும் குட்டியும், தாயும் குஞ்சும், விளையாடுதல் இயல்பு. ஈதென்ன நக்கிரர் காட்டும் புதிய காட்சி! விலங்கும் பறவையும் உகளுகின்றன. "மடப் பிணை தழீஇத் திரிமருப்பிரலை புல்லருந்துகளும்," என்பர்; "வன்பரல் தெள்ளறல் பருகிய இரலைதன் இன்புறு பெடையோடு உகளும்," என்பர். இவ்வாறு உகளுதல் புலவர்கள் கூறப் படித்திருக்கின்றோம். 'திரிமருப் பிரலையொடு மடமானுகளுதலைக் காட்டுவர் முல்லைப்பாட்டாசிரியர்.'* ஆனால், நக்கிரரோ, மான் மானோடு உகளுதலைக் காட்டவில்லை; பிணையோடு மான் ஏறு உகளுதலைக் காட்டவில்லை; மான் தன் குட்டியோடு உகளுதலையும் காட்டவில்லை; மான் ஏறு, அன்னத்தோடு உகளுதலைக் காட்டுகின்றார். விலங்கு ஓர் இனம்; பறவை மற்றோர் இனம். விலங்கும் பறவையும் எவ்வாறு அன்பு பூண்டனவோ! இவ்விலங்கும் பறவையும் ஆண் பெண் எனும் தன்மையைக்

---

* முல்லைப்பாட்டு, 99.

கடந்தனபோலும்! காதற்சிறுவரையைக் கடந்தன போலும்! தம் இன உணர்ச்சியையும் கடந்தன போலும்! இஃதும் ஓர் அரிய அன்புநிலை. பிடியின் அன்பு நிலையை முன்பு காட்டக் கண்டோம். பிடி அரசனிடத்தில் பேரன்பு பூண்டதைக் கீரர் காட்டினர்; விலங்கு மனிதனிடத்தில் அன்ப பூண்டதைக் காட்டினர்; இங்குப் பறவை விலங்கினிடம் அன்பு பூண்டதைக் காட்டுகின்றார். அரசனுக்கு விலங்கிடத்தன்பு-விலங்கிற்கு அரசனிடத்தன்பு - விலங்கிற்குப் பறவையிடத்தன்பு-பறவைக்குவிலங்கிடத்தன்பு-எல்லாம் அன்பின் தொடர்பு. உயிரெலாம் ஒன்றையொன்று அன்பால்பிணிக்கின்றன. இவ்வன்பு காமத்தைத் தரும். அன்போ? அன்று. காதலைத் தரும் அன்போ? அன்று. இவற்றை எல்லாம் கடந்த அன்பு. அப்பர் ஐயாறடைகின்றபோது காதல் மடப்பிடியோடுங் களிறுவருவன கண்டார். நக்கீரரோ, அதற்கு அப்பாலும் சென்றார்; காதல் மடப்பிடி களிற்றோடுவருவதைக் காண்கிலர்; அரசனோடு வருவதைக் கண்டார். மடப்பிடி காதல் நிலையைக் கடந்தது; அன்பின் அரும்பிடியாகி அரசன் பின் செல்வதைக் கண்டார். இவ்வரிய அன்பின்நிலையை உன்னுக உன்னுக! உன்னி உன்னி உளங்கொள்க!

ஈதெலாம் பகற்கனவோ, பாவிடைக் கண்ட கனவோ? பகற்கனவன்று; இராக்கனவன்று; பாக்கனவன்று; பாவிடைக்கண்ட உண்மைகள். கீரர் கூறுவது கூதிர்ப் பாசறை. இப்பாசறை 'காமம்

நீத்த பாலினுல்'* திகழ்கின்றது. காமம் கடந்த நிலையை அரசனிடம் கண்டோம். மனிதப் பிறவி ஒன்றே காமத்தைக் கடக்கத்தக்கதோ? மா, கடப்பன; புட்களும் கடப்பன; விலங்கும் காமம் நீத்த பாலதாவதைக் காண்மின்! புள்ளும் காமம் நீத்த பாலதாவதைக் காண்மின்! இம்மட்டோ? 'அருளொடு புணர்ந்த அகற்சி'யால்† இப்பாசறைப் பாட்டுத் திகழ்கின்றது. அன்பின் அகற்சி அருளென்ப. அருளொடு புணர்ந்த வாழ்வின் அகற்சியால் இப்பாசறை திகழ்கின்றது. முன்பே காதலின் இயல்பு கூறப்பட்டது; அன்பின் இயல்பு கூறப்பட்டது; அஃது அகன்று செல்லுமாறு கூறப்பட்டது. அவற்றைச் சற்று ஈண்டு நினைவு கூர்க! காமம் காதலாக மாறுகின்றது. புள்ளிடத்து மாறுகின்றது; விலங்கிடத்து மாறுகின்றது; மக்களிடத்து மாறுகின்றது. காதல் அன்பாக மாறுகின்றது. அன்பு அகன்று அகன்று செல்கின்றது; தன் இனமல்லாத இனத்தை எல்லாம் தாவுகின்றது. காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினைக்‡ காண்மின்! அருளொடு புணர்ந்த அகற்சி ஆமாறு காண்மின்! இவற்றை எல்லாம் பாவிடைப்பதித்த புலமையைக் காண்மின்! நுண்மாண் நுழைபுலம் தரு நுன் புலமையைக் காண்மின்! காண்மின்!

---

* தொல். பொருள். புறத்திணை. 76.

† ஷை ஷை ஷை 76.

‡ ஷை ஷை ஷை 76.

## மரம்

கீரர் மரங்களைப்பற்றிக் கூறியனவும் மிகு நுட்பம் வாய்ந்தவை. இப்பாட்டிடை முதல் முதல் காண்பது செடியும் கொடியும் சேர்ந்ததன்று. புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப் பொன்போற் பீரமொடு புதன்புதன் மலர்வதைக் காட்டுகின்றார். வேறு கொடிகள் இல்லையோ? ஏன் இப் புன்கொடியைக் கொண்டு தொடங்குகின்றார்? புதரைக்கொண்டு தொடங்குகின்றார்? அழகிய பூக்களைத்தரும் கொடிகள் பல உள. கண்கவர் நிறங்கொள் பூக்களைத் தரும் கொடிகள் பல உள. மணமிகு பூக்களைத் தரும் கொடிகள் பல உள. இத்தகைய புதர்களும் பல உள. புன்கொடி முசுண்டையோடும் புதரோடும் மர வாழ்வைத் தொடங்கியதன் நோக்கம் யாதேனும் உளதாமோ? இதனைச் சற்று நின்று கருதுவோமாக:

கொடிகள் படர்வன; செடிகள் நிமிர்ந்து வளர்வன. இவைகளே மரங்களின் மூதாதைகள் போலும்! முதலிற் கொடி தோன்றிப் பிறகு செடி தோன்றிற்றோ? விலங்கு நிமிர்ந்து நடப்பதன்று. கொடியும் தானே நிமிர்ந்து வளர்வதன்று. விலங்கிலிருந்து வளர்ந்த மனிதன் நிமிர்ந்து நடக்கின்றான். கொடியிலிருந்து வளர்ந்த செடியும் நிமிர்ந்து வளர்கின்றது போலும்! மர நூல் இன்னும் வளப்பம் பெற்றிலது. மர நூல் அறிஞரால் இஃது ஆராயத்தக்கது.

'அகன்ஞாலத்துள்' தோன்றிய உயிருக்கு இப்போதுதான் வாழ்க்கைப் போர் தொடங்குகிறது. இரண்டு கொடிகள் படருமியல்பைச் சற்று உற்று நோக்கவேண்டும். ஒன்றை மற்றொன்று மீறவிடாது, ஒன்றின்மேல் ஒன்று ஏறிப் படரும். இவை இரண்டும் மற்போரிடுவன. புன்கொடி முசுண்டையோ, அற்பக்கொடி; நுண்ணியகொடி. இதனோடு போரிடுவது, இதனினும் பருத்த பீரம். இவ்விரண்டு வகைக் கொடிகளும்-ஒரு நுண்ணிய கொடியும் வலிவுற்ற கொடியும் - சேர்ந்து படருவதன் முடிவு என்ன ? வாழ்வெனப்படுவது வல்லோர்மாட்டே. புன்கொடி முசுண்டைக்கும் புகவிடம் உண்டோ ?

இவ்விரு கொடிகளும் நிலத்தில் கிடந்தே போரிட்டுப் புரள்வனவோ ? அல்ல. இவை மேன்மேல் வளரப் பார்க்கின்றன. கொடிகள் வளர, கொழு கொம்புகள் தேவை. அந்தோ ! கொழு கொம்பு வேண்டிக் கொடிகள் தவித்து நிற்பன. ஒவ்வொரு கொடிக்கும் கொழுகொம்பு நடுவார் உலகில் யார் உளர் ? மனிதன் வாழ்க்கைப்போரே பெரிது. கொடிகளுக்கெல்லாம் கொழு கொம்பு நடுதற்கு மனிதனுக்குக் காலம்உண்டோ? அல்லால், எண்ணந்தான் உண்டோ? யாரால் இயல்வது இப் பெருஞ்செயல்? படரும் முல்லைக்குப் பரிந்து தேர் அளித்த பாரியோ உலகுள மக்கள் ? நக்கீரர் காட்டும் அரசனிற் பெரியார்போலும் இப்பாரி! அரசன் விலங்கிடத்தில் அன்பு பூண்டான். பாரியின்

அன்போ, கொடியிடத்திலும் பரவிச் சென்றது. பாரியைத் தழுவ அக்கொடி ஆசைப்பட்டு நின்றதோ! 'அப்பா, உன்னை அணைக்க எனக்கு ஆசை பொங்குதே!' என்று கூறுவதுபோலக் கைநீட்டித் தவித்துநின்றது போலும் அக்கொடி!

மனிதன் இவற்றிற்கெல்லாம் கொழுகொம்பு நடான் எனினும், அவனால் நட இயலாதெனினும், இறைவனே இவற்றிற்குக் கொழுகொம்பு அமைக்கின்றான். அவன் கடனன்றோ இவற்றை மீண்டும் தன்னிடம் அழைப்பது? புதர்கள் தோன்றுகின்றன. புதரில் கொடிகள் தாவிப் படர்கின்றன. இப்போது இரண்டுகொடிகள்(முசுண்டையும் பீரமும்) ஒவ்வொரு புதரையும் தாக்குகின்றன. அந்தோ! அப்புதர்கள் எப்பாடுபடும்! அவை கொடியை மீறி வளர முயல்கின்றன; தளிர் விடுகின்றன; கிளை விடுகின்றன. அத்தளிர்களில் எல்லாம், கிளைகளில் எல்லாம் தாவிக் கொடிகள் பற்றுகின்றன. கொடிகள்தம்முள் போர்; கொடிகளுக்கும் புதர்களுக்கும் போர். வாழ்க்கைப்போர் வளர்கின்ற முறையைக் காண்மின்! மரங்கள்வாழப் போர்; புழுக்கள்வாழப் போர்; ஊர்வன வாழப் போர்; பறப்பன வாழப் போர்; நடப்பன வாழப் போர்; மனிதன் வாழப் போர். - கொடியிடைத் தொடங்கிய வாழ்க்கைப் போர், அரசனால் இனிதே முடிக்க நிற்கும் போரில் முடிகின்றது. நக்கீரர்காட்டிய அப்போர் அன்றோடு நின்றுவிட்டதோ? இன்றும் நடைபெறுகின்றது. ஒருவர் வாழப்போர்; ஒரு கூட்டத்தார் வாழப்

போர். ஒரு மக்கள் தொகுதியார் வாழப் போர் ; ஒரு நாட்டார் வாழப் போர். முதலாளர் வாழப் போர் ; தொழிலாளர் வாழப் போர். ஆயுதத்தால் போர் ; அறிவால் போர் ; வஞ்சத்தால் போர். அன்றும் போர் ; இன்றும் போர் ; இனியும் போரே. என்றும் போர்; எங்கும் போர்; எல்லாம் போரே. இங்கு நடக்கும் உலகப் போர்தான் யாது? ஒரு பெரு வாழ்க்கைப் போர். வாழ்க்கைப் போர் அன்றி வேருமோ ? கருதுக !

இச்செடிகளையும் கொடிகளையும் கடந்து சென்ருல் காணப்படுவன, வண்தோட்டு நெல், முழுமுதற் கமுகு. இவை மனிதனுல் திருத்தப் பெற்றவை. இவை மனிதனுல் பண்பு படுத்தப் பட்டநிலையில் புலவர் இவற்றை உணர்த்துகின்ருர்.

செடி கொடிகளிடையே, ஏனைய பயிர்களி டையே நெற்பயிர் தானே வாழத்தக்கதோ ? வள ரத் தக்கதோ ? மனிதன் துணையின்றேல் இவை வாழ்க்கைப் போரில் மாள்வன. மனிதன் இவற் றைக் காத்தளித்திலனேல், களைகளே இவற்றை அழிப்பன. மனிதனுல் இவை பயன் பெற்றன. இவற்ருல் மனிதன் பயன்பெறுகிருன். நெல் அல் லது அதனைப் போன்ற புல்வகை தரும் உணவுப் பொருள்கள் - மரவகை தரும் உணவுப் பொருள் கள் - இல்லையேல், மனிதன் எவ்வாறு வாழ்வான்? மனிதன் உயிர் வாழ இவை பெருந்துணை ; இவை உயிர் வாழ மனிதன் அருந்துணை. இஃது உலகிய லில் ஒன்றை ஒன்று பற்றி நிற்கும் தொடர்பு. இஃது உலக இயல்பு. இவ்வுலகில் தானே தழைத் தல் அரிது.

நெற்பயிர் போல்வதே கமுகு. இவை இரண்டும் புறக்காழ் உடையன. காட்டில் ஏனைய பெரு மரங்களுடன் பொருது மேற்கிளம்பிக் கமுகும் தானே வாழும் தகுதியற்றது.

இவற்றை அடுத்துக் காண்பது விரவு மலர் வியன் கா. கமுகு பெருங்குலையைத் தாங்கி நிற்கின்றது. வீங்கிப் புடை திரண்ட அதன் காய்கள், முற்றுகின்றன. இவ்வியன் காவில் எம்மரமும் காய்த்தில; பழுத்தில; பிஞ்சும் கொண்டில போலும்! எல்லா மரங்களும் பூத்தே அமைகின்றன. இது பூங்காப் போலும்! இதிலுள்ள மரமெலாம் பூவே தருவனபோலும்! பூவாதே காய்க்கும் மரமுள. காயாதே பூக்கும் மரமும் உள போலும்! பூக்களில் ஆண் துகளும் பெண் துகளும் ஒன்று சேருங்கால் காய்கள் உண்டாவன. ஆண் பெண் துகள்கள் சேராத நிலையை மரங்களும் பெறுவன போலும்! வயது முதிர்ந்த மரங்கள் காய்ப்பதில்லை. காமஞ்செல்லாக் கடைக்கோட்காலை மரங்களுக்கும் உண்டென்பதைக் காண்கிறோம். காமம் நீத்த மரங்களும் உளவோ என்பது மர நூலறிஞர் ஆராயத் தக்கது. புலவர், காமம் நீத்த மனிதனைக் காட்டினார்; காமம் நீத்த விலங்கினைக் காட்டினார்; காமம் நீத்த பறவையைக் காட்டினார். இவற்றை எல்லாம் முன்பு கண்டோம். இங்குக் காமம் நீத்த மரத்தைக் காட்டுகின்றார் போலும்! விரவு மலர் வியன்கா, மர வகையில் காமம் நீத்து அன்பு பூத்து அமைந்ததை உணர்த்தும் போலும்!

V

## தொகுத்து முடித்தல்

மக்கள், மா, புள், மரம் எனும் நாற்பாற் பிறவியின் தன்மையைக்குறித்து நக்கிரர் கருத்துக் கள் மேலே கூறியவற்றோடு முடிவு பெறும். இது காறும் நாம் கண்டவற்றை எல்லாம், புலவர் இந் நான்கு பிறவியின்கண்ணும் கூறிய நிகழ்ச்சிகளை எல்லாம், பொருள் நலனை எல்லாம், சுருக்கமாகத் தொகுத்துக் காண்போம் :

கோவலர் வருந்துகின்றனர். முழு வலி மாக் கள் தேறல்மாந்தித் திரிகின்றனர். காதலர்ப் பிரிந் தோர் புலம்புகின்றனர். அரசி தன்மனம் கணவன் பாற் சென்று அழுந்திய நிலையில் புலம்பொடு வதி கின்றாள். (இவ்வம்மையின் மனநிலையும் காதலும் அரியவெனினும், இன உணர்ச்சியைக் கடந்தவை யல்ல.) அரசன் தூய அன்புருவாய்த் திகழ்கின் றான்.

மா மேயல் மறக்கின்றன. மந்தி கூர்கின்றன. கறவை கன்றுகோள் ஒழிகின்றன. பல்லுளைப் புரவி, புல்லுணாத் தெவிட்டி நிற்கின்றன. இவை தம் புலம்பு தரு குரல் பிரிந்தோர் புலம்புவதைப் போலும். கவரி மான் அன்னமோடுகளுகின்றது. பாய்பரிக் கலிமாவும் பிடியும் அன்புநெறி உற்று அரசனுடன் செல்கின்றன.

பறவை படிவன வீழ்கின்றன. மென்பறைத் தொழுதிக் கொக்கும் நாரையும் இரைதேர்கின்றன. புறு, தன் இன்புறு பெடையோடு அமர்கின்றது. மயில், தன் பெடையின்றிச் செருக்கி நிற்கின்றது. அன்னம், கவரிமானுடன் அன்பு பூண்டு ஒழுகுகின்றது.

செடிகளுக்கும் கொடிகளுக்கும் வாழ்க்கைப் போர், வண்தோட்டு நெல்லின் வருகதிர், வணங்கி நிற்கின்றது. கமுகு, வயிறு வாய்த்து நிற்கின்றது; வியன்கா, மலர் பூத்து ஒளிர்கின்றது.

ஒரு பிறவிக்குக் கூறிய நிகழ்ச்சிகளை மற்றைய மூன்று பிறவிகளின் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு நோக்குவோம். எல்லாப் பிறவி நிகழ்ச்சிகளிலும் ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது. அவையெலாம் துன்பத்தில் தொடங்குகின்றன; அன்பில் முடிகின்றன. ஏனைய இடைநிகழ்ச்சிகளிலும் ஒருபுடை ஒப்புமை காணப்படுகின்றது. அந்த அந்தப் பிறவியின் இயல்புக்கேற்பச் சில இடைநிகழ்ச்சிகள் மிகுகின்றன; சில குறைகின்றன. உலகில் தோன்றுவன எல்லாம் துன்புறுகின்றன. உணவு தேடி அலைகின்றன சில; சில உண்டு அமைகின்றன; களிக்கின்றன சில; இணைதல் விழைந்து ஏங்குவன சில. இணை விழைச்சு இறுதியில் எல்லாப் பிறவியிடத்தும் அன்பாய் மாறுகின்றது. மனிதப் பிறவி ஒன்றில் மட்டுமே, இந்நிகழ்ச்சிகள் நிகழ்வன அல்ல; எல்லாப் பிறவிகளிலும் நிகழ்வன.

ஒவ்வொரு பிறவியையும் அன்பே ஆக்கும். அவ்வன்பே அப்பிறவியை மாற்றும், உயர்த்தும் போலும்! ஆருயிர் 'அகன்ஞாலத் தகத்துள் தோன்றி'* மீண்டும் இறைவனிடம் 'வருந்துணை யும்' அவ்வன்பே பிறவிதொறும் பிறவிதொறும் உயர்த்தி உயர்த்திச் செலுத்துகின்றது. புல்லி லிருந்து புழுவாக்கியதும் அன்பு; 'என்பிலதனை' - என்பிலாப் புழுவை - என்போடியைத்து ஏனைய பிறவிகளில் உயர்த்திச் செலுத்துவதும் அன்பு.

> 'அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
> என்போ டியைந்த தொடர்பு'†

என்பர் திருவள்ளுவர்.

> 'அன்பைப் பெருக்கி ஆருயிரைக் காக்கவந்த
> இன்பப் பெருக்கே!'

என்று இறைவனை அழைப்பர் தாயுமானவர். ஆருயிர், மனிதன் உயிர் ஒன்றோ? மனிதராவார் இடத்துமட்டுமோ அன்பு பெருகும்? ஆருயிர் புல் லில் இருந்தும் தொடங்குகின்றது. கல்லிலிருந்தும் தொடங்கும். அணுவிலிருந்தே தொடங்கும் என் பர். இது நாம் ஊனக்கண்ணால் காண்பதொன் றன்று. உலகில் தோன்றிய நாள்தொட்டு அன் பைப் பெருக்கிப் பெருக்கித் தன்னிடம் 'வருந்

---

* அப்பர், 6-ஆம் திருமுறை, பெரிய திருத்தாண்டகம், 5.

† மணக்குடவர் உரையும், திரு. வி. க. அவர்கள் உரையும் ஈண்டுக் கருதத்தக்கன.

துணையும்'* 'அருந்துணை'யாய் நிற்பவன் இறைவன்.

'......எவ்விதத் தோற்றமும்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை அன்பே ஆக்கும்.
சிற்றறி வாதலால் முற்றும்நாம் உணரோம்'†

என்றார் அறிவியல் அறிஞராகிய புலவர். 'ஆருயிர்க்கெலாம் அன்பு செயல் வேண்டும்' என்றார் இராமலிங்க அடிகள். ஆருயிரெல்லாம் அன்பு செய்வதைக் காண்மின்! ஆருயிர்க்கெலாம் அன்பு செய்வதையும் காண்மின்!

உருவத்திலிருந்து உருவம் தானே தோன்றும்; ஒன்று பலவாகப் பெருகும்; உயரும் என்பர், டார்வின் ஆதியோர். எவற்றிலிருந்து எவை வந்தன எனத் தேடித் திரிவர். உள்ளிருந்தியக்கும் - உயர்த்தும் - ஒன்றினை அறியார்போலும்! 'அறிவு வளர உருவம் வளரும்; உயிர் வளரும்' என்பர் ஒரு சாரார். மேல்நாட்டிடை அறிவு வளர்ந்தது. அஃது உலகிற்கு நன்மைபயப்பதை அறிவீர்கள். இதனால், உயிர்கள் வளர்வதையும் அறிவீர்கள். இவ்வறிவு தந்தது அருந்திறல் அமைந்த குண்டுகளை - படைமுகமே அறியாரையும் தாக்கும் குண்டுகளை யாதும் தீமை புரியார், தீமையேதும் நினையார், தீமையேதும் அறியார் - ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர் - எல்லோர் மீதும்

---

* அப்பர், 6-ஆம் திருமுறை, பெரியதிருத்தாண்டகம், 5.
†மனோன்மணீயம், அங். III, களம். 4, வரி, 189-192.

குண்டுகளை வீழ்த்துவதும் அறிவு. அறிவு வளர வளரத் தீமை வளர்ந்ததோ, உடல் வளர்ந்ததோ, உருவம் வளர்ந்ததோ, உயிர் வளர்ந்ததோ, ஆராய்ந்தறிக!

'அறிவே முத்தி தரும்' என்பாரும் உளர். அறிவே வேண்டா வேண்டா என்று அழுதாரும் உளர். கல்வி என்னும் தொல் கடலினின்றும், பல் கடலினின்றும் தப்பிப் பிழைக்க வேண்டினர் மாணிக்கவாசகர். 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்!' என்றார் தாயுமானவர். இதனை இனியும் விரிக்கிற் பெருகும்; போரிடைப் புகுத்தும்; இலக்கியச்சுவையையும் மறைக்கும். ஈதோடு அமைவோம். அறிவின்றியும் அன்பே முத்தி தருவது என்று கொண்டது தமிழ்நாடு போலும்! ஆதலின், தமிழ் நாட்டிடையே தோன்றிய விலங்கும் ஆறறிவு பெறுமுன்னமே முத்திக்குரியதானது; புள்ளும் முத்திக்குரியதானது; இவை முத்தியும் பெற்றன.

அன்பு! அன்பு! உயிரெலாம் அன்பு! ஊரெலாம் அன்பு! நாடெலாம் அன்பு! உலகெலாம் அன்பு! இவ்வன்பே உலகிடை நிலைபெறும்; அல்லால் நிலைபெறவேண்டும் என நக்கீரர் கனவோ கண்டார்! நடை மிகுத்தேத்திய குடை நம்முன் மீண்டும் சற்றுத் தோன்றுமாக! இவ்வன்பின் நெறியிற் செல்லும் நடையே, உலகத்தை உயர்த்தும் நடை, உயிர்களை உயர்த்தும் நடை எனப் புலவர் காட்டுவார் போலும்! உயிர்களிடத்திலுள்ள பிணக்கெல்லாம் தீர, வழக்கெல்லாம் தீர,

அன்பினும் வேறில்லை மருந்து எனக் காட்டுகின்ருர் போலும்! வாடைத் துன்பத்தைத் துரத்தியதும் அன்பு; ஏனைய துன்பத்தைத் துரத்துவதும் அன்பு. அன்பே மனத்தைத் திருத்தும் மருந்து; மக்களைத் திருத்தும் மருந்து; மாவைத் திருத்தும் மருந்து; புட்களைத் திருத்தும் மருந்து; மரங்களைத் திருத்தும் மருந்து எனக் காட்டுகின்ருர். உயிரை வளர்ப்பது அன்பு; ஒன்ருமாறு உய்ப்பது அன்பு; எங்கும் உள்ளது அன்பு; எல்லாமாவது அன்பு. அன்பே கடவுள்.

இவ்வன்பின்நெறியை உலகம் கொள்ளுமோ? பிணக்கெலாம் அற்று, வழக்கெலாம் அற்று, வேற்றுமை ஒழிய, ஒற்றுமை ஓங்க, உலகெலாம் அன்பு ஒளிவிடும் நாளும் உளதாமோ! இவ்வுலகில் முதல் முதல் உயிர் தோன்றி 50 கோடி ஆண்டுகளாயின என்பர். இன்னும் மாந்தர் தம்முள் ஒத்துவாழ்வரிலர். உலகப் பெருமக்கள் ஒன்று கூடி, மக்கள் ஒத்து வாழ, அமைதியின் வாழ, நெறிகள் வகுத்தார்கள்-வகுக்கின்ருர்கள். இந்நெறி எலாம் மனிதனைக் குறித்தவையே. மனிதரல்லா ஏனைய உயிர்களும் இந்நெறிக்கண் இடம்பெறுவனவோ? பெரு. உலக மாந்தர் தம்முள் ஒத்து வாழ வேண்டுமென்ற எண்ணம் தோன்ற - இவ்வுண்மை தோன்ற - 50 கோடி ஆண்டுகள் ஆயின. மனிதன் ஏனைய உயிர்களிடத்தும் ஒத்து வாழ வேண்டும். அன்பு பூண்டொழுக வேண்டும். மக்களுக்கென்ற நெறியுள் ஏனைய உயிர்களும் இடம்பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்ற இன்னும் எத்தனை எத்தனை

கோடி ஆண்டுகள் செல்லுமோ! இவ்வுண்மையை- இவ்வன்பின் நெறியை - உயர்ந்த உலக நடையெனப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே உணர்த்திய கீரர் அறிவுதான் என்னே! இவற்றை எல்லாம் ஒரு சிறு பாட்டிடைப் பெய்து, பெய்தவிடம் தெரியாது மூடிப் பாமணமே கமழுமாறு காட்டிய புலமைதான் என்னே! பா வன்மைதான் என்னே!

அம்மம்ம! நல்ல வாடை! நல்ல வாடை! கீரர் தம் வாடை நல்ல வாடை! இவ்வாடை மக்கள் நலம் காட்டிற்று; மா நலங் காட்டிற்று; புள் நலங் காட்டிற்று; மர நலங் காட்டிற்று. உயிரெலாம் நல்லவையாக்கும் வாடை, உலகையே நல்லதாக்கும் வாடை, நல்ல வாடை! இம்மட்டோ! கீரர் தமையும் நல்கீரராக்கிய வாடை, நல் வாடை. வாடை தொடங்கிய இடத்தைச் சற்று நினைவு கூர்க! எங்குத் தொடங்கினது? எங்கெங்கு இழுத்துச் சென்றது? நெடுக, நெடுக, நெடுவழி எல்லாம் இழுத்துச் சென்றது; நீண்டு நீண்டு உயிர் வகை எல்லாம் தாவிற்று; உயிர் இயல்புகளை எல்லாம் தாவிற்று; உயிருள்ள இடமெல்லாம் புகுந்தது; உலகியல் எல்லாம் தன்னுள் அடக்கிநின்றது; இம்மை எல்லாம் காட்டிற்று; இன்னும் நீளுகின்றது; இம்மைக்கு அப்பாலும் தாவுகின்றது; மறுமையையும் தொட்டு நிற்கின்றது. மறுமைக்குள்ளும் நீண்டு நீண்டு செல்லும் போலும் இந்நெடு வாடை! என்னே நீளம்! எவ்வளவு நீளம்! நெடுவழி நெடுவழிச் சென்றும் இதன் நீளத்தின் எல்லையைக்

கண்டிலோம். அரிது அரிது நெடுவாடைதன் நீளம் அறிதல் !

நல்கீர ! நக்கீர ! கீரர் பெரும ! நும்மை* எவ்வாறு புகழ்வோம்! நும் புலமையை எவ்வாறு போற்றுவோம் ! நும் வாடையை அறிதொறும் அறிதொறும் எம் அறியாமையே காண்கின்றேம்! நும் அறிவின் எல்லையைக் கண்டிலோம். இறைவனை எதிர்த்தது நும் செயலன்று ! நும் அறிவின் செயல் போலும் ! புலமையின் செயல் போலும் ! உண்மையை ஒளித்துக் கூறா உரத்தின் செயல் போலும் ! " நூலறி புலவன் "† நும் முருகனோ ? நீரோ ? முருகனை நீர் கண்டீர் போலும் ! நாங்கள் முருகனைக் காணும் நல்வினை செய்திலோம்! அவன் புலமையைக் காட்டும் நூல்களைக் கண்டிலோம் ; கற்றிலோம் ! நும் சிறு பாட்டையே கண்டோம்; அப்பாட்டிடை நும் புலமையைக் காணக் காண, நும் அறிவை அறிய அறிய விதிர்விதிர்க்கின்றேம்; பேச நாவெழவில்லை; புகழ நாவெழவில்லை; எழுதக் கைஎழவில்லை. சிலவேனும் சொல்லச் சிலவேனும் எழுதச் சொற்களைத் தேடுகின்றேம். அவைகளும் ஓடுகின்றன ; ஓடி ஒளிகின்றன. நும் பேரறிவிற்கும், நும் பெரும் புலமைக்கும் பணிந்து நடந்த சொற்கள், புன்மையேம் எமக்கும் பணிவனவோ? எவ்வாறு புகழ்வோம்! எவ்வாறு போற்றுவோம்! புலவர்தம் அரசே ! நும் அருமைச் சிறு சொற்

* ஈண்டுக் காணும் வழுவமைதிகள் ஓசை நலன் கருதியும் கருத்து நலன் கருதியும் கையாளப்பட்டன. † திருமுருகு. 261.

களை நுமக்கே அணிவோம். ஒருமையால் கூறியன உமக்கே உரியன !

" நூலறி புலவ ! பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே ! அந்தணர் வெறுக்கை ! அறிந்தோர் சொன்மலை ! அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்க் கீர ! நின்னளந்தறிதல் மன்னுயிர்க்கரிது ! "* அரிது ! அரிது !

வாடை வாழ்க ! வாழ்கநல் வாடை !
நீடு நிலவுக நெடுநல் வாடை !

---

* திருமுருகு. 261, 263, 268, 269, 278.

# நெடுநல்வாடை

நச்சினார்க்கினியம்

# நெடுநல்வாடை

**வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென**

---

இப்பாட்டிற்கு நெடுநல்வாடையென்று பெயர் கூறினார். இப்பெயர் நெடிதாகிய நல்ல வாடையென விரிதலிற் பண்புத்தொகையாயிற்று. வாடையென, வாடைக் காற்றிற்றோன்றின கூதிர்ப்பாசறையை உணர்த்தலிற் பிறந்தவழிக் கூறலென்னும் ஆகுபெயராய் நின்றது. இப்பாட்டினுட் "கூதிர்நின் றன்றாற் போதே" (72) எனவும், "கூதிர்ப் பானாள்" (12) எனவுங் கூறுகின்றாராதலின், இது "வாகை தானே பாலையது புறனே"* எனப் பாலைக்குப்புறனாகக் கூறிய வாகைத்திணையாய் அதனுள், "கூதிர் வேனி லென்றிரு பாசறைக் காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்"† எனக்கூறிய கூதிர்ப் பாசறையேயாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஒரூழி போல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத்தொடுங்கிப் போகந்நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும், அரசன் போகம்வேண்டிப் பொதுச்சொற் பொருனாய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றி யெய்தலின், வாகைத்திணையாயிற்று; இப்பாட்டுச் சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் அகப்பொருளாமேனும்,

---

*தொல். பொருள். புறத்திணை. 18

† ஷை ஷை ஷை 21

ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ

---

"வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (176) என அடையாளப்பூக்கூறினமையின், அகமாகாதாயிற்று.

1 - 2. [வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப், பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன:] பொய்யா வானம் வையகம் பனிப்ப வலன் வளைஇ ஏர்பு புதுபெயல் பொழிந்தென - பருவம் பொய்யாத மேகம் உலகெல்லாங் குளிரும்படியாகத் தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்திருந்து கார்காலத்து மழையைப் பெய்ததாக.

3. ஆர்கலி முனைஇய கொடு கோல் கோவலர் - வெள்ளத்தை வெறுத்த கொடிய கோலினையுடைய இடையர்,

4. ஏறு உடை இனம் நிரை வேறு புலம் பரப்பி - ஏற்றையுடைய இனங்களையும் பசுக்களையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்தே மேய விட்டு,

எருமையையும் ஆட்டையும் 'இனம்' என்றார்.

5. புலம் பெயர் புலம்பொடு கலங்கி - தாம் பயின்ற நிலத்தைக் கைவிட்டுப்போம் தனிமையினாலே வருத்தமெய்தி,

ஊர்க்கு அண்ணியவிடத்தே மேய்த்து ஊரிற்றங் காமையிற் 'புலம் பெயர் புலம் என்றார்.

5 - 6. கோடல் நீடு இதழ் கண்ணி நீர் அலை கலாவ - காந்தளினது நீண்ட இதழ்களாற்கட்டின கண்ணி நீரலைத்தலாலே கலக்கமெய்த,

மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்

---

7 - 8. மெய் கொள் பெரு பனி நலிய பலருடன் கை கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க - தம் உடம்பிடத்தே கொண்ட பெரிய குளிர்ச்சி வருத்துகையினாலே பலருங்கூடிக் கையிடத்திலே கொண்ட நெருப்பினையுடையராய்ப் பற்பறை கொட்டி நடுங்க,

கையை நெருப்பிலே காய்த்தி அதிற்கொண்ட வெம்மையைக் கவுளிலே அடுத்தலிற் 'கைக்கொள் கொள்ளியர்' என்றார்.

கோவலர் (3) பலருடன் (7) பரப்பிக் கலங்கிக் (5) கலாவக் (6) கொள்ளியராய்க் கவுள்புடையூஉ நடுங்க (8) என்க.

9. மா மேயல் மறப்ப-விலங்குகள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்க, மந்தி கூர-குரங்கு குளிர்ச்சி மிக,

'குன்னுக்க' என்பாருமுளர்.

10. [பறவை படிவன வீழ :] படிவன பறவை வீழ-மரங்களிலே தங்குவனவாகிய புள்ளுக்கள் காற்று மிகுதியால் நிலத்தே வீழ,

10 - 11. [கறவை, கன்றுகோ ளொழியக் கடிய வீசி :] கறவை கடிய வீசி கன்று கோள் ஒழிய - பசுக்கள் குளிரின் மிகுதியாற் கடியவாய் உதைத்துக் கன்றை எற்றுக்கோடலைத் தவிர,

குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த ஈர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்

---

12. குன்று குளிர்ப்பன்ன கூதிர் பால் நாள் - மலையைக் குளிர்ச்சிசெய்யுமாறு போன்ற கூதிர்க்காலத்து நடு யாமத்தே, புலம்பொடு வதியுமரிவைக்கு (166) என மேலே கூட்டுக.

13 - 4. புல் கொடி முசுண்டை பொறி புறம் வால் பூ பொன் போல் பீரமொடு புதல் புதல் மலர - புல்லிய கொடியினையுடைய முசுட்டையில் திரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூப் பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறு தூறுகடோறும் விரிய,

15 - 9. [பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி, யிருங்களி பரந்த வீர வெண்மணற், செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக், கயலறலெதிறக் கடும் புனற் சாஅய்ப், பெயலுலங் தெழுந்த :]

கடு புனல் சாஅய் கயல் அறல் எதிர - கடிதாய் ஓடின நீரினின்றும் ஒருகால் பற்றிக் கயல்கள் அற்ற நீர்க்கு எதிரே வருகையினாலே,

பெயல் உலந்து எழுந்த (19) பைங்கால் கொக்கின் மெல் பறை தொழுதி (15) - மழையாலே வருந்தி அது சிறிது விட்ட அளவிலே எழுந்த பசிய காலையுடைய கொக்கினது மெல்லிய சிறகரையுடைய திரள்.

செ வரி நாரையொடு (17) இரு களி பரந்த ஈரம் வெள் மணல் (16) எ வாயும் கவர (17) - சிவந்த வரியினை

பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப
அங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை

---

யுடைய நாரைகளோடே கரிய வண்டலிட்ட சேறு பரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக்கயலைத் தின்ன,

19 - 20. பொங்கல் வெள் மழை அகல் இரு விசும்பில் துவலை கற்ப - பொங்குதலையுடைய வெள்ளிய மேகம் அகன்ற பெரிய ஆகாயத்தே சிறு துவலையாகத் தூவ மேற்கற்கும்படியாக, கூதிர் ஈண்டு நின்றது (72) என மேலே கூட்டுக.

‘கற்ப’ என்னுஞ் செயவெனெச்சம் ஈண்டு எதிர்காலமுணர்த்திற்று.

‘துவலை கற்ப’ என்றார், மிகப்பெய்தலே தனக்கு இயல்பென்பது தோன்ற.

21 - 2. அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த வள் தோடு நெல்லின் வரு கதிர் வணங்க - அழகிய இடத்தையுடைய அகன்ற வயல் நிறைந்த நீராலே மிக்கெழுந்த வளவிய இலையினையுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர் முற்றி வளைய,

புல்லாதலின் ‘தோடு’ என்றார்.

23 - 4. முழு முதல் கமுகின் மணி உறழ் எருத்தின் கொழு மடல் அவிழ்ந்த குழூஉ கொள் பெரு குலை - பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியை

நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்

---

ஒத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பாளை விரிந்த திரட்சியைக் கொண்ட தாறுகளில்,

25 - 6. [நுண்ணீர் தெவிள வீங்கிப் புடை திரண்டு, தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற :] தெள் நீர் பசு காய் நுண்ணிய நீர் தெவிள வீங்கி புடை திரண்டு சேறு கொள முற்ற - தெளிந்த நீரை உள்ளே உடைய பசிய காய் நுண்ணிய நீர்தான் திரளும்படியாக வீங்கிப் பக்கந்திரண்டு இனிமை கொள்ளும்படி முற்ற,

27. [நளிகொள் சிமைய விரவு மலர் வியன்கா :] விரவு மலர் நளிகொள் சிமையம் வியல் கா-முன்பு விரவின பூக்கள் செறிதலைத் தன்னிடத்தே கொண்ட உச்சியினையுடையவாகிய அகன்ற பொழில்கள்,

28. குளிர்கொள் சினைய குரூஉ துளி தூங்க - குளிர்ச்சியைத் தம்மிடத்தே கொண்ட கொம்புகளை உடையவாகி அவற்றில் ஏற்று நின்ற நிறத்தையுடைய மழைத்துளி மாறாமல் வீழ,

29 - 30. மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ஆறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில் - மாடங்களுயர்ந்த வளப்பத்தையுடைய பழையவூரில் யாறு கிடந்தாற் போன்ற அகன்ற நெடிய தெருவிலே, திரிதா (35) என்க.

படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தன்துளி பேணார் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயின் திரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்

---

31 - 2. படலை கண்ணி பரு ஏர் எறுழ் திணி தோள் முடலை யாக்கை முழு வலி மாக்கள் - தழை விரவின மாலையினையும் பருத்த அழகினையுடையவாகிய வலியினையுடைய இறுகின தோளினையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பின மெய் வலியினையுமுடைய மிலேச்சர்,

33. வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து - வண்டுகள் மொய்க்கும் கள்ளையுண்டு மகிழ்ச்சி மிக்கு,

34 - 5. [துவலைத் தண்டுளி பேணார் பகலிறந், திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர :]

துவலை தண் துளி பேணார் இரு கோடு அறுவையர் வேண்டு வயின் திரிதர - சிறு துவலையாகிய தண்ணிய துளியை அஞ்சாராய் முன்னும் பின்னுந் தொங்கலாக கால விட்ட துகிலினையுடையராய்த் தமக்கு வேண்டின இடத்தே திரிதலைச் செய்ய.

'பகலிறந்து' என்பதனை மேலே கூட்டுக.

36 - 7. [வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத் தோண், மெத்தென் :] வெள்ளி வள்ளி வீங்கு இறை மெத்தென் பணை தோள் - வெளுக்கப்பட்டதாகிய சங்கு வளை இறுகின இறையினையுடைய மெத்தென்ற பணை போலுந் தோளினையும்,

மெத்தென் சாயல் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து

---

37. மெத்தென் சாயல் - மெய்ம்முழுதும் கட்புலனாய்த் தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும்,

முத்து உறழ் முறுவல் - முத்தையொத்த பல்லினையும்,

38. பூ குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழை கண் - பொலிவினையுடைய மகரக் குழையிட்ட அழகிற்குப் பொருந்தின உயர்ந்து தோன்றுகின்ற அழகினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

இனி உருபு மயக்கமாக்கிக் 'குழையிடத்தே சென்றமர்ந்த கண்,' என்று முரைப்ப,

39. ஏந்து (38) மடவரல் மகளிர் - உயர்ந்து தோன்றுகின்ற மடப்பத்தினையுடைய மகளிர்,

தோள் (36) முதலியவற்றையுடைய மகளிரென்க.

39 - 41. [பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் |பித்திகத், தவ்வித ழவிழ்பதங் கமழ :] பிடகை பெய்த, பைங்காற் பித்திகத்து செவ்வி அரும்பின் அ இதழ் பகல் இறந்து (34) அவிழ் பதம் கமழ - பூந்தட்டிலே இட்டு வைத்த பசிய காலினையுடைய பிச்சியினுடைய அலருஞ் செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள் பகற்பொழுதைக் கடந்து விரியுஞ் செவ்வி மணக்கையினாலே,

'செவ்வரியரும்பு' பாடமாயின், 'சிவந்த வரியினையுடைய அரும்பு' என்க.

அவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
இரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன இருப்பக்

---

41. பொழுது அறிந்து - அந்திக்காலமென்று அறிந்து,

என்றதனாற் ‘ கூதிரால் இரவும் பகலும் தெரியா ’, என்றார்.

42. இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ - இரும்பாற் செய்த தகளியிலே நெய் தோய்ந்த திரியைக் கொளுத்தி,

விளக்கு : ஆகுபெயர்.

43. நெல்லும் மலரும் தூஉய் கை தொழுது - நெல்லையும் மலரையுஞ் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்கி,

44. மல்லல் ஆவணம் மாலை அயர - வளப்பத்தையுடைய அங்காடித் தெருவெல்லாம் மாலைக் காலத்தைக் கொண்டாட,

மகளிர் (39) கமழுகையினாலே பொழுதறிந்து (41) திரி கொளீஇத் (42) தூவித் தொழுது (43) அயரவென்க.

45.-8. [மனையுறை புறவின் செங்காற் சேவ, லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா, திரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப்பள்ளி மாறுவன விருப்ப :]

கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்

---

இரவும் பகலும் மயங்கி (47) - இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குகையினாலே,

மனை உறை புறவின் செ கால் சேவல் (45) இன்பு உறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது (46) - மனையின்கண்ணே யிருக்கும் புறவினுடைய சிவந்த காலினையுடைய சேவல் தான் இன்பம் நுகரும் பெடையோடு மன்றிலே சென்று இரை தேடி உண்ணாமல்,

கை அற்று (47) மதலை பள்ளி மாறுவன இருப்ப (48) - செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகைகளிலே பறவாதிருந்து கடுத்த கால் ஆறும்படி மாறிமாறி இருக்க,

இனித் 'தலை மாறியிருப்ப' என்பாருமுளர். மதலைப்பள்ளி - கபோதகத்தலை.

'இறையுறை புறவு'ம் பாடம்.

49 - 50. கடி உடை வியல் நகர் சிறு குறு தொழுவர் கொள் உறழ் நறு கல் பல கூட்டு மறுக - காவலையுடைய அகன்ற மனைகளில் சிறியராகிய குற்றேவல் வினைஞர் கருங்கொள்ளின் நிறத்தையொத்த நறிய சாத்தம்மியிலே கத்தூரி முதலிய பசுங்கூட்டரைக்க,

51 - 2. வடவர் தந்த வான் கேழ் வட்டம் தென் புலம் மருங்கில் சாந்தொடு துறப்ப - வடநாட்டிலுள்

கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்து
இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க

---

ளார் கொண்டுவந்த வெள்ளிய நிறத்தையுடைய சிலா வட்டம் தென்றிசையிடத்திற் சந்தனத்தோடே பயன் படாமற் கிடப்ப,

53. [கூந்தன் மகளிர் கோதை புனையார்:] மகளிர் கூந்தல் கோதை புனையார் - மகளிர் குளிர்ச்சி மிகுதியால் தம்மயிரிடத்து மாலையிட்டு முடியாராய்,

54. பல் இரு கூந்தல் சில் மலர் பெய்ம்மார் - தம் பலவாகிய கரிய மயிரிடத்தே மங்கலமாகச் சில மலரிட்டு முடித்தலை வேண்டி,

55 - 6. தண் நறு தகரம் முளரி நெருப்பு அமைத்து இரு காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப - தண்ணிய நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பை உண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலோடே வெள்ளிய கண்ட சருக்கரையையுங் கூட்டிப் புகைப்ப,

57 - 8. கை வல் கம்மியன் கவின் பெற புனைந்த செ கேழ் வட்டம் சுருக்கி - கையாற் புனைதல் வல்ல உருக் குத்துகின்றவனாலே அழகு பெறப் பண்ணின சிவந்த நிறத்தையுடைய ஆலவட்டம் உறையிடப்பட்டு,

58 - 9. [கொடுந்தறிச், சிலம்பி வானூல் வலந் தன தூங்க :] சிலம்பி நூல் வால் வலந்தன கொடு தறி

**வானுற நிவந்த மேனிலை மருங்கின்**
**வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்**
**போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்**
**கல்லென் துவலை தூவலின் யாவரும்**
**தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்**
**பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார**

---

தூங்க - சிலந்தியினது வெள்ளிய நூலாற் சூழப்பட்டனவாய் வளைந்த முளைக்கோலிலே தூங்க,

60. வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின் - தேவரூரைத் தீண்டும்படி உயர்ந்த மேலாம் நிலத்திடத்து,

61 - 2. வேனில் பள்ளி தென் வளி தரூஉம் நேர் வாய் கட்டளை திரியாது - இளவேனிற்காலத்துத் துயிலும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத்தரும் சாலேகத்திலே நின்று உலாவாதே,

'நேர்வாய்க்கட்டளை' என்றது மாடத்தின்கட் சாலேகத்தை; 'கட்டளை தெரியாது' என்று பாடமாயின், திறவாதென்க,

62 - 3. திண் நிலை போர் வாய் கதவம் தாழொடு துறப்ப - சிக்கென்ற நிலையினையுடைய இரண்டு கதவும் தம்முட்பொருதல் வாய்த்த கதவு தாழிட்டுக் கிடக்க,

64 - 6. கல்லென் துவலை தூவலின் யாவரும் தொகு வாய் கன்னல் தண்ணீர் உண்ணார் பகு வாய் தடவில் செ நெருப்பு ஆர - கல்லென்கிற ஓசையினையுடைய சிறு துவலையை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் முதியோரும் குவிந்த வாயையுடைய கரகத்திற்றண்ணீரைக் குடியாராய்ப் பகுத்தாற்போன்ற வாயையுடைய இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின் வெம்மையை நுகர,

ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த இன்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்

---

67. ஆடல் மகளிர் பாடல் கொள புணர்மார் - ஆடற்றொழிலையுடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டினை யாழ் தன்னிடத்தே கொள்ளும்படி நரம்பைக் கூட்டுதற்கு,

68 - 9. தண்மையின் திரிந்த இன் குரல் தீ தொடை கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ - குளிர்ச்சியாலே தன் நிலைகுலைந்த இனிய குரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின் வெப்பத்தே தடவி,

தீந்தொடை: ஆகுபெயர்.

70. கரு கோடு சிறு யாழ் பண்ணு முறை நிறுப்ப - கரிய தண்டினையுடைய சிறிய யாழைப் பண் நிற்கும் முறையிலே நிறுத்த,

71. காதலர் பிரிந்தோர் புலம்ப - கணவரைப் பிரிந்த மகளிர் வருந்த,

71 - 2. பெயல் கனைந்து கூதிர் நின்றன்றால் - கால மழை செறிந்து கூதிர்க்காலமாய் நிலைபெற்றது; அவ்விடத்து,

72. போது - பின்னர் நிகழ்ந்த பொழுது,

வானம் கார்காலத்து மழையைப் பெய்ததாகப் (2) பின்னர் நிகழ்ந்தபொழுது (72) கோவலர் (3) நடுங்க (8) மறப்பக் கூர (9) வீழ (10) ஒழிய (11) மலரக் (14)

விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா அரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்

---

கவாக் (17) கற்ப (20) வணங்க (22) முற்றத் (26) தூங்கத் (28) திரிதர (35) அயர (44) இருப்ப (48) மறுகத் (50) துறப்பப் (52) புகைப்பத் (56) தூங்கத் (59) துறப்ப (63) ஆர (66) நிறுப்பப் (70) புலம்பப் பெயல் செறிந்து (71) கூதிர்க்காலமாய் நிலைபெற்றது ; அவ்விடத்து (72) என முடிக்க.

72 - 5. [மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில, மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர், பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து :]

மாதிரம் விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் குடக்கு ஏர்பு - திசைகளிலே விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கெழுந்து,

இரு கோல் குறிநிலை வழுக்காது ஒரு திறம் சாரா அமயத்து அரைநாள் - இரண்டிடத்து நாட்டின் இரண்டு கோலிடத்துஞ் சாயா நிழலால் தாரைபோக ஓடுகின்ற நிலையைக் குறித்துக்கொள்ளுந் தன்மை தப்பாதபடி தான் ஒரு பக்கத்தைச் சாரப்போகாத சித்திரைத் திங்களின் நடுவிற் பத்திநின்ற யாதோர் நாளிற் பதினைந் தாநாழிகையிலே அங்குரார்ப்பணம் பண்ணி,

76. நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு - சிற்ப நூலையறிந்த தச்சர் கூரிதாக நூலை நேரே பிடித்து,

தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து
ஒருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து

---

77. தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி - திசைகளைக் குறித்துக்கொண்டு அத்திசைகளில் நிற்குந் தெய்வங்களையும் குறைவறப்பார்த்து,

78 - 9. [பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனை வகுத்து, ஒருங்கு.] பெரு பெயர் மன்னர்க்கு ஒப்ப ஒருங்கு மனை வகுத்து - பெரிய பெயரினையுடைய அரசர்க்கொப்ப மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையுங் கூறுபடுத்தி,

79. உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின் - இவ்விடங்களை யெல்லாம் சேரவளைத்து உயர்ந்த மதிலின் வாயி (88) லென்க.

80. பரு இரும்பு பிணித்து - ஆணிகளும் பட்டங்களுமாகிய பெரிய இரும்பாலே கட்டி,

செவ்வரக்கு உரீஇ - சாதிலிங்கம் வழித்து,

81 - 5. [துணை மாண் கதவம் பொருத்தி யிணை மாண்டு, நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத், தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற், கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து :]

ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை

---

தாழொடு குயின்ற (84) துணை மாண் கதவம் பொருத்தி (81) - தாழோடே சேரப் பண்ணின இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச்சேர்த்தி,

இணை மாண்டு (81) புது போது அவிழ் குவளை பிடி கால் அமைத்து (83) - இணைதல் மாட்சிமைப்பட்டுப் புதிய போதாய் அவிழ்ந்த குவளைப்பூவோடே பிடிகளையும் தன்னிடத்தே பண்ணி,

என்றது, நடுவே திருவும் இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப் பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்தரக் கற்கவி.

நாளொடு பெயரிய விழுமரத்து கோள் அமை (82) நெடுநிலை (86) - உத்தரமென்னும் நாளின் பெயர்பெற்ற உத்தரக் கற்கவியிலே செருகுதல் பொருந்தின நெடுநிலையென்க.

'அமைத்து' என்னுமெச்சம் 'பெயரிய' என்பதனோடு முடிந்தது.

கை வல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து (85) போர் அமை புணர்ப்பின் (84) நெடுநிலை (86)-கைத்தொழில் வல்ல தச்சன் கடாவுகையினாலே வெளியற்றுப் பல மரங்களும் தம்மிற் கிட்டுதலமைந்த கூட்டத்தினையுடைய நெடுநிலையென்க.

86. ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை - வெண்சிறு கடுகு அப்பிவைத்த நெய்யணிந்த நெடிய நிலையினையுடைய,

அதிற்றெய்வத்திற்கு, வெண் சிறு கடுகும் நெய்யுமணிந்தது.

வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்

---

87. வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக - வென்றிகொண்டெழும் கொடிகளோடே யானைகள் சென்று புகுதும்படி உயர்ந்த,

88. குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில் - மலையை நடுவே வெளியாகத் திறந்தாற்போன்ற கோபுர வாயில்களையும்,

ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ‘ஓங்குநிலை’ என்றார் ; ஆகுபெயர்.

வரைப்பின் (79) வாயிலென்க.

கதவு பொருத்திக் கோளமைத்த புணர்ப்பினை யுடைய நெடுநிலையினையுடைய வாயிலென்க.

89 - 92. [திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற், றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து, நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை, குறுங்கா லன்னமொ டுகளு முன்கடை :]

நெடு மயிர் எகினம் தூ நிறம் ஏற்றை குறு கால் அன்னமொடு உகளும் முன் கடை - நெடிய மயிரினை யுடைய கவரிமாவில் தூய நிறத்தையுடைய ஏற்றை குறிய காலினையுடைய அன்னத்தோடே தாவித்திரியும் வாசல் முன்பினையும்,

பணை நிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பணம் நிறையக்
கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல

---

கடைமுன் 'முன்கடை' என மரூஉ முடிபு. அன்னமும் தாவிப்பறத்தலின், உகளுமென்று கவரிமாவோடே ஒருவினை கூறினார்.

தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து.

திரு நிலைபெற்ற தீது தீர் சிறப்பின் - திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையும்,

வாயிலினையும் (88) முன்கடையினையும் (92) முற்றத்தினையும் (90) சிறப்பினையுமுடைய (89) கோயில் (100) என முடிக்க.

93 - 4. பணை நிலை முனைஇய பல் உளை புரவி புல் உணா தெவிட்டும் புலம்பு விடு குரலொடு - பந்தியிலே நிற்றலை வெறுத்த பலவாகிய கேசரியையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டுந் தனிமை தோற்றுவிக்கின்ற குரலோடே,

95 - 7. நிலவு பயன்கொள்ளும் நெடு வெள் முற்றத்து கிம்புரி பகு வாய் அம்பணம் நிறைய கலிழ்ந்து வீழ் அருவி பாடு விறந்து - நிலாவின் பயனை அரசன் நுகரும் நெடிய வெள்ளிய நிலா முற்றத்திலுள்ள நீர் வந்து வீழும் மகர வாயாகப் பகுத்த வாயினையுடைய பந்தநிறைகையினாலே கலங்கி விழுகின்ற அருவியினோசை செறிந்து;

ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து

---

97 - 9. அயல ஒலி நெடு பீலி ஒல்க மெல் இயல் கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை - அதற்கு 'அயலிடத்தனவாகிய தழைத்த நெடிய பீலி ஒதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில் ஆரவாரிக்கும் கொம்பென்று மருளும் இனியவோசை.

100. நளி மலை சிலம்பின் சிலம்பும் கோயில் - செறிந்த மலையின் ஆரவாரம்போல ஆரவாரிக்கும் கோயில்.

புலம்புவிடு குரலோடே (94) அருவிப்பாடும் (97) வயிர்மரு ளின்னிசையும் (99) விறந்து (97) மலைச்சிலம்பிற் சிலம்புங்கோயில் (100) என முடிக்க.

அருவியும் மயிலும் மலைக்கும் உள்ளனவாகலின், உவமைகொண்டார். புலம்புவிடு குரல் மழை மெத்தென முழங்கினாற்போன் றிருத்தலின், உவமைகொண்டார்.

இனி 'அவற்றின் எதிரொலி யெழுகின்ற கோயில்' என்றுமாம்.

101 - 2. யவனர் இயற்றிய வினை மாண் பாவை கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து - சோனகர் பண்ணின தொழில் மாட்சிமைப்பட்ட பாவை தன் கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளி நிறையும்படி நெய் வார்க்கப்பட்டு,

பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு

---

103. பரூஉ திரி கொளீஇய குரூஉ தலை நிமிர் எரி - பருந்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்தி வைத்த நிறத்தையுடைத்தாகிய தலையினையுடைய மேனோக்கி எரிகின்ற விளக்கை,

104. அறு அறு காலைதோறு அமைவர பண்ணி - நெய் வற்றின காலந்தோறும் ஒளி மழுங்கின காலந் தோறும் நெய் வார்த்துத் தூண்டி.

105. பல் வேறு பள்ளி தொறும் பாய் இருள் நீங்க - பலவாய் வேறுபட்ட இடங்கடோறும் பரந்த இருள் நீங்கும்படி,

106 - 7. பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அரு கடி வரைப்பின் - பெருமை பொருந்தின தலைமையினையுடைய பாண்டியனல்லது சிறு குறுந்தொழில் செய்யும் ஆண்மக்களும் அணுக வாராத அரிய காவலையுடைய கட்டுக்களின்,

108. வரை கண்டன்ன தோன்றல் - மலைகளைக் கண்டாற்போன்ற உயர்ச்சியையுடையவாய்,

108 - 9. வரை சேர்பு வில் கிடந்தன்ன கொடிய - மலைகளைச் சேர்ந்து இந்திர வில் கிடந்தாற்போன்ற பல நிறமாய் வீழ்ந்து கிடந்த கொடிகளையுடையவாய்,

இது மேலே கட்டின கொடி.

வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்

---

109. பல் வயின் - பலவிடங்கடோறும்,

110. வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ - வெள்ளியை யொத்து விளங்குகின்ற சாந்தை வாரி,

111. மணி கண்டன்ன மா திரள் திண் காழ் - நீலமணியைக் கண்டாற்போன்ற கருமையினையும் திரட்சியினையுமுடைய திண்ணிய தூண்களையுடையவாய்,

112. செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடு சுவர் - செம்பினாலே பண்ணினாலொத்த தொழில்கள் செய்தலுற்ற நெடிய சுவரிலே,

113. உருவம் பல் பூ ஒரு கொடி வளைஇ - வடிவழகினையுடையவாகிய பல பூக்களையுடைய வல்லி சாதியாகிய ஒப்பில்லாத கொடியை எழுதி,

114. கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல் - புதைத்த கருவோடே பெயர் பெற்ற காட்சிக்கினிய நன்றாகிய இல்,

என்றது, 'கருப்பக்கிருகம்' என்றவாறு.

திண்காழையுடையவாய்ச் (111) செய்வுறுநெடுஞ் சுவரிலே (112) விளங்குஞ் சுதையுரீஇப் (110) பல்வயின் (109) ஒருகொடிவளைஇ (113) வரைகண்டன்ன தோன்றலவாய்க் (108) கொடியவாய்ப் (109) பாயிருணீங்க(105)

தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்
இகல்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாகம் ஒழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற ஈரிலை யிடையிடுபு

---

எரி (105) அமைவரப்பண்ணிக் (104) காட்சிக்கினியவாகிய நல்லில் (114) என முடிக்க.

கோயில் (100) வரைப்பின் (107) காண்பினல்லில் (114) என முடிக்க.

115. [தசநான் கெய்திய :] நான்கு தசம் எய்திய-நாற்பதிற்றியாண்டு சென்ற.

பணைமருள் நோன் தாள் - முரசென்று மருளும் வலிய கால்களையும்,

116. [இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதல் :]

ஏந்து எழில் வரி நுதல் - உயர்ந்த அழகினையும் புகர் நிறைந்த மத்தகத்தினையுமுடைய நாகம் (117),

இகல் மீ கூறும் நாகம் (117) - போரில் மேலாகச் சொல்லும் நாகம்,

117. பொருது ஒழி நாகம் - பொருது பட்ட யானையினுடைய,

117 - 8. [ஒழியெயி றருகெறிந்து, சீருஞ் செம்மையு மொப்ப :] ஒழி எயிறு சீருஞ் செம்மையும் ஒப்ப அருகு எறிந்து - தானே வீழ்ந்த கொம்பைக் கனமும் செம்மையுமொப்ப இரண்டு புறத்தையுஞ் செத்தி,

118 - 9. வல்லோன் கூர் உளி குயின்ற - தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணின,

119. ஈரிலை இடை இடுபு - பெரிய இலைத்தொழிலை இடையே இட்டு,

தூங்கியல் மகளிர் வீங்குமுலைக் கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த இடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்
முத்துடைச் சாலேகம் நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து

---

120 - 30. [தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப், புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண், டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப், பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டின், மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு, முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப், புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத், தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந், தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான், வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து, முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து :]

ஊட்டுறு பல் மயிர் விரைஇ (128) - பல நிறம் பிடித்த மயிர்களை உள்ளே வைத்து அதன்மேலே,

வயமான் (128) வேட்டம் பொறித்து (129) - சிங்க முதலியவற்றை வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளை வைத்து,

புலி முதலியவற்றின் வரிகள் தோன்ற உள்ளே மயிர் விரவின.

வியல் கண் கானத்து (129) முல்லை போது உறழ பல் பூ நிரைத்து (130) - அகற்சியை இடத்தேயுடைய

ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து

---

காட்டிடத்து முல்லைப் போதுடனே மாறுபடும்படி ஏனைப் பல பூக்களையும் நிரைத்து,

சாலேகம் தகடு குத்துறுத்து (125) - சாளரங்களாகத் திறந்த தகடுகளை ஆணிகளாலே தைத்து,

மடை மாண் (124) பாண்டில் (123) - மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக்கட்டில்,

கொம்பைச் செத்தி (117) உளியாற் குயின்ற இலையை இடையிட்டுப் (119) பொறித்து (129) நிறைத்துச் (130) சாலேகத் தகடுகளைக் குத்துறுத்து (125) மடைமாண் (124 பாண்டில் (123) என முடிக்க.

முத்து உடை (125) நுண் இழை பொலிய (124) நாற்றி (125) தொடை மாண்டு (124) பெரு அளவு எய்திய பாண்டில் (123) - முத்தைத் தன்னிடத்தேயுடைய மெல்லிய நூல் அழகு பெறும்படி கட்டிலின் கீழே வீழ நாலு புறமும் நாற்றி அதனைத் தன்னிடத்தே கட்டுதல் மாட்சிமைப்பட்டுப் பெரிய எல்லையைப் பெற்ற பாண்டிலெனக் கூட்டுக.

என்றதனால், 'தந்தத்தாற் சமைத்த கட்டிலைச் சூழ முத்துவடநாற்றி' என்றார்.

புலி பொறி கொண்ட பூ கேழ் தட்டத்து (126) கண் புதைய கொளீஇ துகள் தீர்ந்து (127) பெரு பெயர் பாண்டில் (123) - புலியினது வரியைத் தன்னிடத்தே கொண்ட பொலிவு பெற்ற நிறத்தையுடைய

மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்

---

கச்சாலே நடுவு வெளியான இடமறையும்படி கோக்கப் பட்டுக் குற்றமற்றுக் கச்சுக்கட்டிலென்னும் பெரிய பெயரையுடைய பாண்டிலெனக் கூட்டுக.

தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்ப (120) புடை திரண்டு இருந்த குடத்த (121) அடி (122) - சூல் முற்றி அசைந்த இயல்பினை யுடையராகிய மகளிரது பால்கட்டி வீங்கின முலையையொப்பப் பக்கமுருண்டிருந்த குடத்தையுடையவாய அடி.

இஃது உருட்சிக்கு உவமை கூறிற்று.

இடை திரண்டு (121) உள்ளிமுதல் நோன் அடி பொருத்தி அமைத்து (122) - குடத்திற்கும் கட்டிற்கும் நடுவாகிய இடம் ஒழுக மெல்லிதாய்த் திரண்டு உள்ளிமுதல் போலும் வலியினையுடைய கால்களைத் தன்னிடத்தே தைத்துச் சமைத்துப் பேரளவெய்திய பாண்டிலென்க.

உள்ளிப்புட்டில் போல்வதனை 'உள்ளிமுதல்' என்றார்

131 - 3. [மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணைபுணரன்னத் தூநிறத் தூவி, யிணையணை மேம்படப் பாயணை யிட்டு :]

மெல்லிதின் விரிந்த இணை அணை சேக்கை - மெல்லியதாக விரிந்த இணைதலணைந்த படுக்கையென்க.

மேம்பட துணை புணர் அன்னம் தூ நிறம் தூவி பாய்- அச்சேக்கைக்கு மேலாகத் தம்பேட்டைப் புணர்ந்த அன்னச்சேவலின் தூய நிறத்தையுடைய சூட்டாகிய மயிர் பரக்கப்பட்டு,

காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
135 தோடமை தூமடி விரித்த சேக்கை
ஆரந் தாங்கிய அலர்முலை யாகத்துப்

"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணமுறு தூவி சேக்கையோ ரைந்து" என்று ஐந்திணையும்படுத்த தென்பது தோன்ற 'இணையணை' என்றார், என்புருகி மிக்க அன்போடு புணர்தலிற் கூட்டிற்கு மென்மை பிறக்குமென்பது தோன்றத் 'துணைபுணரன்னத் தூநிறத் தூவி' என்றார். பிறரும் இக்கருத்தே பற்றி, "ஆதரம் பெருகுகின்ற வன்பினாலன்ன மொத்தும் "* என்றார்.

134 - 5. [காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத் தோடமை தூமடி விரித்த சேக்கை :] மேம்பட அணையிட்டு (133) காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து தூமடி விரித்த தோடு அமை சேக்கை - அத்தூவிக்கு மேலாக அணைகளுமிட்டுவைத்துக் கஞ்சியைத் தன்னிடத்தே கொண்ட கழுவுதலுற்ற துகிலின் தூய மடித்தது விரித்த செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்கள் பொருந்தின படுக்கை,

இணையணை சேக்கை மேம்படத் தூவி பாய் அத்தூவிக்கு மேம்பட அணையிட்டுத் தூமடிவிரித்த சேக்கை என்க.

136 - 7. ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து பின் அமை நெடு வீழ் தாழ - முன்பு முத்தாற்செய்த கச்சுச் சுமந்த பருத்த முலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதலமைந்த நெடிய தாலி நாணொன்றுமே தாங்க,

* சீவக. 189

பின்னமை நெடுவீழ் தாழத் துணை துறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து

---

வீழ்ந்து கிடத்தலின் 'வீழ்' என்றார். இனிப் பின்னுதலமைந்த நெடிய வீழ், மயிரென்பாருமுளர்.

137. துணை துறந்து - அரசன் பிரிகையினாலே

138. நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி - நன்றாகிய நுதலிடத்தே கைசெய்யாமல் உலறிக்கிடந்த சிலவாகிய மெத்தென்ற மயிரினையும்,

இனித் துணை துறந்து உலறிய ஓதியெனக்கூட்டிக் கூடிக்கிடந்த தன்மை நீங்கி உலறிய ஓதியென்றுரைப்பாருமுளர்.

139 - 40. [நெடுநீர் வாழ்குழை களைந்தெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின் :]

நெடுநீர் வார் குழை களைந்தென வறிது வீழ் காதின் - பெரிய ஒளியொழுகின மகரக்குழையை வாங்கிற்றாகச் சிறிதே தாழ்ந்த காதினையும்,

நீர்மை - ஒளி.

குறு கண் வாயுறை அழுத்திய காது - சிறிய இடத்தையுடைய தாளுருவி அழுத்திய காது,

'வாயுற' என்று பாடமாயின், கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காது என்க.

141 - 2. பொலம் தொடி தின்ற மயிர் வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து -

வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகில் மரீஇய ஏந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியங் கடுப்பப் புனைவில்

---

முன்பு பொன்னாற்செய்த தொடி கிடந்து தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக் கிடந்த முன்கையிலே வலம்புரியை அறுத்துப் பண்ணின வளையை இட்டுக் காப்பு நாணைக் கட்டி,

ஓடு : வேறு வினை ஓடு.

143 - 4, வாளை பகு வாய் கடுப்ப வணக்குறுத்து செ விரல் கொளீஇப செ கேழ் விளக்கத்து - வாளையினது பகுத்த வாயையொக்க முடக்கத்தை யுண்டாக்கிச் சிவந்த விரலிடத்தேயிட்ட சிவந்த நிறத்தையுடைய முடக்கென்னு மோதிரத்தையும்,

145 - 6. பூ துகில் மரீஇய ஏந்து கோடு அல்குல் அ மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு - முன்பு பூத்தொழிலையுடைய துகில் கிடந்த உயர்ந்த வளைவினையுடைய அல்குலில் இக்காலத்து உடுத்த அழகிய மாசேறிய விளங்குகின்ற நூலாற் செய்த புடைவையுடனே,

147. [புனையா வோவியங் கடுப்பப் புனைவில் :]

புனையா ஓவியம் கடுப்ப - வண்ணங்களைக் கொண்டெழுதாத வடிவைக் கோட்டின சித்திரத்தையொப்ப,

‘புனைவில் நல்லடி’ (151) என மேல் வருவதனைக் கூட்டி, கழுவிச் செம்பஞ்சிட்டுப் பூண்களணியாத நன்றாகிய அடியென்க..

தளிரேர் மேனித் தாய சுணங்கின்
அம்பணைத் தடைஇய மென்றோள் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியல் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்

---

148. தளிர் ஏர் மேனி - மாந்தளிரையொத்த நிறத்தினையும்,

தாய சுணங்கின் - பரந்த சுணங்கினையும்.

149. அம் பணை தடைஇய மெல் தோள் - அழகினையுடைய மூங்கில் போலத் திரண்ட மெல்லிய தோளினையும்,

149 - 50. [முகிழ்முலை, வம்புவிசித் தியாத்த :] வம்பு விசித்து யாத்த முகிழ் முலை - கச்சை வலித்துக் கட்டின தாமரை முகைபோலும் முலையினையும்,

150. வாங்கு சாய நுசுப்பின் - வளையும் நுடங்கு மிடையினையும்.

151. மெல் இயல் மகளிர் - மெத்தென்ற தன்மையினையுமுடைய சேடியர்,

நல் அடி வருட - துயிலுண்டாகுமோ என்று அடியைத் தடவ,

மேனி (148) முதலியவற்றையுடைய மகளிர் (151) புனைவில் (147) நல்லடி வருடவென்க.

152 - 3. நரை விராவுற்ற நறு மெல் கூந்தல் செம்முக செவிலியர் கை மிக குழீஇ - நரை கலத்தலுற்ற நறிய மெல்லிய மயிரினையுடைய சிவந்த முகத்தையுடைய செவிலித்தாயர் இவளாற்றுவொழுக்க மிகுகையினாலே திரண்டு,

செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தவை மொழியவு மொல்லாள் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்

---

154. குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி - பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையும். பலகாற் சொல்லி,

"ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே"* என்பது இலக்கணம்.

155 - 6. இன்னே வருகுவர் இன் துணையோர் என உகத்தவை மொழிபவும் ஒல்லாள் மிக கலுழ்ந்து - இப்பொழுதே வருகுவார் நினக்கினிய துணையாம் தன்மையை உடையோரென்று அவள் மனத்துக்கு இனிய வார்த்தைகளைக் கூறவும் அதற்குப் பொருந்தாளாய் மிகக் கலங்கி,

157 - 8. [நுண் சேறு வழித்த நோனிலைத் திரள்கா, லூறு வறுமுலை கொளீஇய :] ஊறு வறுமுலை கொளீஇய நுண் சேறு வழித்த நோன் நிலை திரள் கால் - குடங்களைக் கடைந்து தைத்த சாதிலிங்கம்பூசின வலிய நிலையினையுடைய மேற்கட்டியிற்றிரண்ட கால்களை,

ஊறு வறுமுலை : குடத்திற்கு வெளிப்படை; முலை போறலின், 'முலை' என்றார்.

---

*தொல். பொருள். செய். 175.

ஊறா வறுமுலை கொளீஇய கால்திருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா

---

158. கால் திருத்தி - கட்டிற்கால்களுக்கு அருகாக நிற்கும்படி பண்ணி அதனிடத்தே கட்டி,

159. [புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசை :] மெழுகு செய் படம் மிசை புதுவது இயன்ற - மெழுகு வழித்த மேற்கட்டியின் மேலே புதிதாக எழுதின,

160 - 61. [திண்ணிலை மருப்பி னாடுதலை யாக, விண்ணூர்பு திரிதரும் :]

விண் - ஆகாயத்திடத்தே,

திண் நிலை மருப்பின் ஆடு தலையாக ஊர்பு திரிதரும் - திண்ணிய நிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசி முதலாக ஏனை இராசிகளிற் சென்று திரியும்,

161 - 2. வீங்கு செலல் மண்டிலத்து முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய - மிக்க செலவினையுடைய ஞாயிற்றோடே மாறுபாடு மிகுந்த தலைமையினையுடைய திங்களோடு திரியாமல் நின்ற,

163. உரோகிணி நினைவனள் நோக்கி - 'உரோகிணியைப் போல யாமும் பிரிவின்றி இருத்தலைப் பெற்றிலேமே !' என்று நினைத்து அவற்றைப் பார்த்து,

ஞாயிறு, ஈண்டு எழுதியதன்று; திங்களிற்கு அடை கூறிற்று.

நெடிது உயிரா - நெட்டுயிர்ப்புக் கொண்டு,

மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிள ரரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து

164 - 5. [மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி, செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியா :] மா இதழ் வீழ் கண் கடை மலிந்து ஏந்திய அரி பனி சில செ விரல் சேர்த்தி தெறியா - நீலப்பூ விரும்பின கண் தன் கடைக்கண்ணிடத்தே வர மிக்குச்சுமந்த ஐதாகிய நீரிற் சிலவற்றைச் சிவந்த விரலைச் சேர்த்தித் தெறித்து,

என்றது, மிகவுமழாமல் மல்கின நீரைத் தெறித் தென்றார்.

166. புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு - தனிமையோடு கிடக்கும் அன்பு மிகுகின்ற அரிவைக்கு,

அரசன் பிரிகையினாலே, நெடுவீழ் தாழ (137) நூல் யாத்து (142) மாசூர்ந்த கலிங்கத்தோடே (146) ஒதியினையும் (138) காதினையும் (140) விளக்கத்தினையும் உடையளாய் (144) மிகக்கலங்கி (156) உரோகிணி நினைவனோக்கி நெடிதுயிர்த்துத் (163) தெறித்து (165) மகளிர் நல்லடிவருடும் (151) ஓவியம் கடுப்ப (147) வதியுமரிவைக்கு (166) என வினை முடிக்க.

166 - 7. அரிவைக்கு இன்னா அரு படர் தீர - அரிவைக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய நினைவு தீரும்படி,

பாசறைத் தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிகதில் (168) - வேந்தன் பாசறையிடத் திருந்து பொருகின்ற போர்த்தொழில் அவனுக்கு வெற்

இன்னே முடிகதில் லம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து

---

றியைக் கொடுத்து இப்பொழுதே முடிவதாக; இஃது எனக்கு விருப்பம் என முடிக்க.

168. அம்ம - கேட்பாயாக!

இஃது, இவள் வருத்தமிகுதி தீரவேண்டிக்கொற்றவையை நோக்கிப் பரவுகின்றவள் கூற்றாயிற்று. 'கேட்பாயாக!' என்றது கொற்றவையை நோக்கி. 'முடிக!' என்ற வியங்கோள், வேண்டுகோடற்பொருண்மைக்கண் வந்தது. 'தில்' விழைவின்கண் வந்தது.

168 - 71. மின் அவிர் ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை நீள் திரள் தட கை நிலமிசை புரள களிறு களம் படுத்த பெரு செய் ஆடவர் - ஒளி விளங்குகின்ற பட்டத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப்பயின்ற யானையினுடைய நீண்ட திரண்ட பெருமையினையுடைய கை அற்று நிலத்தே புரளும்படி யானையை முன்னர்க் கொன்ற பெரிய செயலையுடைய வீரருடைய,

'செயல்' என்னும் வினைப்பெயர் 'செய்' என முதனிலையாய் நின்றது.

172. ஒளிறு வாள் விழு புண் காணிய புறம் போந்து - விளங்கும் வாளினாற் போழ்ந்த சீரிய புண்ணைக் கண்டு பரிகரித்தற்குத் தானிருக்கின்ற இடத்திற்குப் புறம்பே போந்து திரிதரும் வேந்தன் (187) என்க.

வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்

---

173. வடந்தை தண் வளி - வடதிசைக்கண்ணதாகிய குளிர்ந்த காற்று,

என்றது வாடையை.

173-5. [எறிதொறு நுடங்கித், தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல், பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல:] நல் பல் பாண்டில் விளக்கில் பரூஉ சுடர் எறிதொறும் நுடங்கி தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய அழல - நன்றாகிய பலகால் விளக்கிலெரிகின்ற பருத்த கொழுந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்கு நோக்கியெழுந்து சாய்ந்த தலையினையுடையவாய் எரிய,

விளக்கு : ஆகுபெயர்.

176 - 7. வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃக மொடு முன்னோன் முறை முறை காட்ட - வேப்பந் தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன் செல்கின்ற சேனாபதி புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்ட,

177 - 80. பின்னர் மணி புறத்து இட்ட மாதாள் பிடியொடு பருமம் களையா பாய் பரி கலி மா இரு சேறு தெருவின் எறி துளி விதிர்ப்ப - பின்னாக மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசையோடே பக்கரை வாங்காத பாய்ந்து செல்லுஞ் செலவினையுடைய செருக்கின் குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே வீசும் துளிகளை உதற,

மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயின் தழீஇ
வாள்தோட் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்

---

'தான்' என்றது வாய்க்கருவியிற் கோத்து முடியும் குசையிற்றலையை.

181. புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ - இடத்தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகினையுடைய ஒலியலை இடப்பக்கத்தே அணைத்துக்கொண்டு,

182 - 3. வாள் தோள் கோத்த வன்கண் காளை சுவல் மிசை அமைத்த கையன் - வாளைத் தோளிலே கோத்த தறுகண்மையையுடைய வாளெடுப்பான் றோளிலே வைத்த வலக்கையை உடையனாய்,

183. முகன் அமர்ந்து - புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகம் பொருந்தி,

184. நூல் கால் யாத்த மாலை வெண்குடை - நூலாலே சட்டத்தே கட்டின முத்து மாலையினையுடைய கொற்றக்குடை,

185. தவ்வென்று அசைஇ தா துளி மறைப்ப - தவ்வென்னும் ஓசை பட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் காக்க,

'தாழ் துளி'யும் பாடம்.

186 - 7. நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான் சிலரோடு திரிதரும் வேந்தன் - நள்ளென்னும் ஓசையையுடைய நடுவியாமத்தும் பள்ளி கொள்ளானாய்ச்

393⅘

சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

---

சில வீரரோடே புண்பட்டோரைப் பரிகரி.. தலைச் செய்யுமரசன்

188. பலரொடு முரணிய பாசறை ( சேரன் செம்பியன் முதலிய எழுவரோடே ப பொருகின்ற பாசறையிடத்துப் போர்த்தொழி...

புண் காணிய புறம்போந்து (172) சுடர காட்ட (177) விதிர்ப்பத் (180) தழீஇக் (181 அமர்ந்து (183) மறைப்பப் (185) பள்ளிகொ... (186) திரியும் வேந்தன் (187) என்க.

அம்ம (168) வானம் கார் காலத்து மல... பெய்ததாகப் (2) பின்னர் நிகழ்ந்த பொழுது காலமாய் நிலைபெற்றது (72); அக்கூதிர்க்காலத் வியாமத்தே (75) வாயிலினையும் (88) முன் கவ... யும் (92) முற்றத்தினையும் (90) சிறப்பினையு... (89) கோயில் (100) வரைப்புக்களிற் (107) காண்... வில்லிற் (114) பாண்டிலிற் (123) சேக்கையிலே வதியுமரிவைக்குப் (166) படர்தீரும்படி (167) வே... (187) பலரொடு முரணிய பாசறைத்தொழில் விறறந்து (167) இன்னே முடிவதாக : இஃது எ... விருப்பம் (168) எனக் கொற்றவையைப் பரவ... வினை முடிக்க.

இப்பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவெ... நெடுஞ்செழியன் மண்ணாசையாற்சென்று பொருத இப்போர் வஞ்சியாகலின், வஞ்சிக்குக் கொற்றவ... உண்மையின், கொற்றவையை வெற்றிப் பெ... பாவுதல் கூறினர், அது பாலைத்திணைக்கு ஏற்றவி...